கதைக் கடல் 5

# முதல் சந்திப்பு

## முதலிய கதைகள்



பதிப்பாசிரியர்:
தி. நா. சுப்பிரமணியன்



சக்தி காரியாலயம்
ராயப்பேட்டை : : சென்னை

# பொருளடக்கம்

★





செப்டம்பர்: 1946


ரூபாய் - ஒன்று

தபால் செலவுடன் ரூ. 1/4

தொடர்ந்து வெளிவரும் 12 பிரதிகளுக்கு
தபால் செலவுடன் ரூ. 12



Printed by Shakti Press Ltd., Royapettah, P.I.C. No. MS. 22
For Shakti Karyalayam, Royapettah, P.I.C. No. MS. 202.

# முதல் சந்திப்பு

**மஞ்சேரி எஸ். ஈச்வரன்** 3600

அவன் எனக்கு எழுதிய காகிதங்கள் ஒரு கட்டு இருக்கும். அதிலே இரண்டு மூன்று, இந்தக் கதைக்குச் சம்பந்த முள்ளவை. ஏதோ அகஸ்மாத்தாகவே, அவனுடைய நட்பு எனக்கு ஏற்பட்டது. அந்த நட்பு, ஓர் அற்புதமாகும். ஏனெனில், இருவரும் தனித் தனியான போக்குடையவர்கள். ஆயினும், இருவருக்கும் பொதுவான சில அம்சங்களும் எங்களிடம் இருந்தது, ஒரு விசித்திரப் பொருத்த மாகும். வாழ்க்கை ரகஸ்யத்தைப் பற்றிய பிரச்னைகளை ஓயாமல் நாங்கள் சர்ச்சை செய்வோம்; அதன் கடுமையான சோதனைகளைத் தாங்கிக் கொள்வோம். எங்களுக்குள் நடக்கும் அத்தனை வாதப் பிரதிகளாலும் பாதிக்கப்படாமல், வாடா மலராக எங்கள் நட்பு வளர்ந்து வந்தது.

அவன் ஒரு நூலாசிரியனின் தொழிலை மேற்கொண்டிருந்தால், முன்னணியிலேயே நிற்கும் ஓர் ஆசிரியனாய்க் கீர்த்தி பெற்றிருப்பான். ஆனால், அவனுக்குத் தற்கால எழுத்தாளர்கள் என்றாலே மகா வெறுப்பு. "இந்தப் பத்திரிகை எழுத்தாளர்கள் இருக்கிறார்களே; இவர்களுக்கெல்லாம் மேற்போக்கான ஜிகினா வேலைகளிலும் பூத் தொடுப்பதிலும்தான் மோகம். இவர்கள் புத்தகமா எழுதுவது? நியூஸ் பேப்பர்களைத் தெருவிலே கூவி விற்பதற்குத்தான் யோக்கியதை உடையவர்கள்" என்று அவன் சொல்லுவான். தான் எழுதி வைத்திருந்த விஷயங்களி லிருந்து ஒரே ஒரு வரியைப் பிரசுரிப்பதற்குக்கூட, அவன் சம்மதிக்கவில்லை. ஏன் என்று கேட்டால், தான் ஒன்றும் சொந்தமாய்ப் புதிய விஷயத்தைச் சொல்லி விடவில்லை என்று காரணம் சொல்லுவான். இதைப்பற்றி, அடிக்கடி எங்களுக்குள் உக்ரமான வாதங்கள் நடக்கும்.

ஓர் அழகிய சிறு பங்களாவில், தன் மனைவியுடன், அவன் வசித்து வந்தான். நான் எந்த நேரத்திலே வேண்டுமானாலும், அந்த வீட்டுக்குச் செல்ல எனக்குச் சுதந்திரமுண்டு. அன்பு நிறைவோடு அவர்கள் என்னை உபசரிப்பார்கள். அவர்கள், நடுத்தர வயதுள்ள தம்பதிகள். ஆனால், மதனும் ரதியும் போல், இளமையாய்த்தான் இருந்தார்கள். நிஷ்பட்சபாதமான முறையில், அவனுடைய குணதிசயத்தை நான் வர்ணிக்க முடியாது. ஏனெனில், நான் அவனிடம் ஆழ்ந்த அன்பு கொண்டவன்.

அவனது பெயரை நான் சொல்ல முடியாது; அவன் என்னிடம் அவ்விதம் வாக்குப் பெற்றிருக்கிறான்.

ஒரு முறை அவன் எனக்கு எழுதிய கடிதம் இது:

"விதியின் விபரீதத் திருவிளையாடல் மட்டில் எதுவும் நேராது இருக்குமானால், எனக்குப்பின் குறைந்தபட்சம் இருபது வருஷமாவது நீ ஆயுளோடு வாழ்வாய். என்னுடைய குறிப்புகளை, நீதான் ஆசிரியனாயிருந்து பதிப்பிக்க வேண்டும். சென்ற நான்கு வருஷ காலத்தில், சுமார் முந்நூற்றைம்பது பக்கங்கள் நான் எழுதியிருக்கிறேன். அதில் ஒரு பகுதி, அர்த்த மில்லாத குப்பை. ஒரு பகுதி, நான் படித்த புத்தகங்களி லிருந்து கொய்த அருமையான வாசகங்கள்—அவைகளைப்பற்றி என் மனம் போனபடியெல்லாம் எழுதிய வியாக்கியானக் கதம்பமும் சேர்ந்திருக்கிறது. இந்த வியாக்கியான சுகம் எங்கே உன்னைத் தாலாட்டித் தூங்கப்பண்ணிவிடுமோ என்று நீ பயப்பட வேண்டியதில்லை. மற்றும் ஒரு பகுதி, அவ்வப்போது என் மனத்தில் எழுந்த வெவ்வேறு விதமான உணர்ச்சி நிலைகளை அப்படி அப்படியே படம் பிடித்ததாகும். 'புல்ஸ்காப்' அளவில் அதமபட்சம் ஆயிரத்தைந்நூறு பக்கங்களாவது எழுதிய பிறகுதான் நான் நிறுத்தப் போகிறேன். அதில் நூறு பக்கம் பிரசுரிப்பதற்கு யோக்கியமானதாயிருக்கும் என்று நான் நினைக்கிறேன். நான் சம்பாதிக்கும் பணம் எவ்வளவு என்பதைக் கொண்டு, என் மதிப்பை நிறை போடாதவன் நீ ஒருவன்தான். நான் என்றாலே, உனக்கு அலாதிப் பட்சம் உண்டாகிவிடுகிறது. அதற்கென்ன

செய்வது? இந்த மயக்கத்துக்கு மாற்றுக் கிடையாது. எதையும் நிர்த்தாட்சண்யமாய் அலசி அபிப்பிராயம் சொல்லுவதென்றால், உலகத்தில் உணர்ச்சியோடு கூடிய நேசத்துக்கே இடமில்லாமல் போய்விடும். என்னுடைய மற்ற நண்பர்களை யெல்லாம் நான் இழந்துவிட்டேன்; அல்லது வெகு வேகமாய் இழந்து வருகிறேன். காரணம் இதுதான்; பாவம், அவர்களெல்லாம் பணம் சம்பாதித்து விட்டார்கள்; சுக போகங்களிலே மோகம் கொண்டு விட்டார்கள். என்னைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று மதித்துக்கொள்ள அவர்களுக்கு ஆசை. நான் புத்திசாலி என்று தற்செயலாய் அவர்களுக்குத் தோன்றும்போது, அவர்களுடைய அந்த ஆசைக்குப் பங்கம் ஏற்படுகிறது. அது அவர்களுக்குப் பொறுக்கவில்லை. ஆகையால், வாழ்க்கையில் இரண்டு காசு சம்பாதிக்கத் தெரியாத இந்தச் சோம்பேறியின் பிதற்றலை அவர்கள் சட்டை செய்வார்களா?

"நான் எழுதுவதெல்லாம் சுத்த அபத்தமாகவே அவர்களுக்குத் தோன்றும்; அதிலே தங்களுடைய பொன்னான நேரத்தைச் செலவழிப்பது வீண் என்றே அவர்கள் நினைப்பார்கள். ஆகையால், நீ எனக்கு இந்த வாக்குறுதி அளிக்க வேண்டும். நீ எங்கே இருந்தாலும் சரிதான், என்ன பண்ணிக்கொண் டிருந்தாலும் சரிதான்; நான் காலகதி யடைந்தேன் என்ற செய்தி கேட்டவுடனே, என் தினசரிக் குறிப்புகளை வரவழைத்து, பரிசீலனை செய்து அச்சிட வேண்டும். உனக்கு அதை அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நான் செய்துவிடுகிறேன். அதற்கு நீ ஒரு முன்னுரை எழுதுவாய் அல்லவா? அந்த முன்னுரை ஓர் அருமையான கவிதையாய்த்தான் இருக்கும். இது கேலியல்ல. அந்த நாள் வருமுன்பு, நீ ஒரு கீர்த்தி பெற்ற கவிஞனாகி விடுவாய். எனக்குத்தான், நான் செத்த பிறகு, என்ன கியாதி கிடைக்கப் போகிறது!"

இந்தக் கடிதம் வந்த ஒன்பது மாதத்துக்கெல்லாம், இடி விழுந்தது போல் ஒரு கடிதம் வந்தது:

" துக்கத்தோடு இதை நான் உனக்கு எழுதுகிறேன். (அவசரத்தில் எழுதிய கடிதம் என்று, இதன் சம்பிரதாய மான தொனி நன்ருய்க் காட்டிவிட்டது.) சென்ற சனிக்கிழமை காலை என் மனைவி திடீரென்று காலமானுள். என் வாழ்க்கையின் ஒரே ஊன்றுகோல் போய்விட்டது; என் உயிரிலேயே பாதியை இழந்துவிட்டேன். நான் முட மானேன். என்னதான் நிகழ்ந்தது என்றே என்னுல் நினைவுகூர முடியவில்லை. சூழ்நிலைகளெல்லாம், நிகழ்ந்த சம்பவத்தைப் பற்றிக் குரூரமாய் ஞாபகமூட்டிக் கொண்டேயிருக்கின்றன. ஆகையால், சில தினங் களில் நான் பட்டணத்தைவிட்டு வெளியே செல்லப் போகிறேன். நான் திரும்பி வந்ததும், மறுபடியும் உனக்கு எழுதுகிறேன்......"

கடிதம்' என் கைகளைச் சுடுவதுபோல் இருந்தது. முத லிலே ஏற்பட்ட அதிர்ச்சி அடங்கியதும், நான் சிந்தனையில் ஆழ்ந்தேன். சாவு! அதோடுகூடத் திடீரென்று ஒரு பயங்கர மௌனம் அல்லவா சூழ்ந்து விடுகிறது! அன்பு கொண்டவர்களுக் கிடையிலே அவர்களைப் பிரிக்கும் ஓர் அகாதமான சமுத்திரம் அல்லவா ஏற்பட்டு விடுகிறது! முப்பது வயதுக்கு மேற்பட்ட ஓர் அழகான ஸ்திரீ; பால் மணம் கமழும், கள்ளமற்ற ஒரு குழந்தையின் முகம்; அந்த ஸ்திரீயினும் ஏழு வயது மூத்த, உயரமும் ஒல்லியு மான ஓர் ஆடவன்; அறிவுப் பிரகாசமும் உணர்ச்சிப் பரவசமும், வாலிபத் துடி துடிப்பும் நிறைந்த அவனுடைய முகம்; தேவலோகத்தி லிருந்து பூமியிலே வந்தமர்ந்த கிளி போல் அமைந்த ஒரு சின்னஞ் சிறு மாளிகை—இவைக ளெல்லாம் என் நினைவில் திரண்டெழுந்து, வர்ணமும் ஒளி யும் பொலியும் ஒரு சித்திரமாய் உருவெடுத்தன. சாவு! ஆனுல், இவைகளுக் கெல்லாம் அவன் அமரத்துவம் கொடுத்து விடவில்லையா? தன் தினசரிக் குறிப்புகளின் மூலம், இவைகளை அவன் ஓர் அனந்த கீதம் ஆக்கிவிட வில்லையா? ஆம். அவன் மிகவும் சாளமா யிருந்த ஒரு சமயத்தில், அவனிடம் சம்மதம் பெற்று, அந்தக் குறிப்பு களி லிருந்து சில பகுதிகளை நான் நகல் செய்து கொண் டேன். அதைக் கொண்டு, பொருத்தமான முறையில் ஒரு

கதையை நான் அமைத்திருக்கிறேன். அதைப் படிக்கும் நீங்கள், ஒரு ஜீவிய பாத்திரத்தை நேருக்கு நேரே காண் பீர்கள். அவன் உங்கள் ஒவ்வொருவருடைய பிரதிபிம்ப மாகவும் இருக்கக்கூடும். ஆனால், தீரமாய், தன் மனத்தைத் தானே அலசிப் பார்க்கும் ஒரு விசேஷத்தை அவனிடம் காண்பீர்கள். இது ஓர் ஆத்ம சோதனை. இதைச் செய்ய எல்லாருக்கும் சாதாரணமாய்த் தைரியம் வருவதில்லை. தங்கள் அகங்காரத்தைத் தாங்களே காண யாரும் விரும்புவதில்லை......

## 2

அவன் வண்டியை விட்டிறங்கும் போதே கையில் குழந்தையை வைத்துக்கொண்டு நிற்கும் தன் தங்கையைக் கண்டான். இவனைக் கண்டதும், அவள் புன்முறுவலு டன் வரவேற்றாள். இவனும் பதிலுக்கு, "சௌக்கியமா?" என்ற தோரணையில் உதட்டைத் திறந்து கொண்டு, குழந் தையை ஆர்வத்துடன் கையில் வாங்கினான். அதை ஆட்டி அலக்கழித்துச் சீராட்டி விட்டு, தாயைக் காணும் ஆவலு டன் உள்ளே அவசரமாக ஓடினான். எதிரிலேயே தாயா ரும் வந்தாள். ஆனால், அவளுக்குப் பின்புறம் சட்டென்று நழுவி யோடிய ஒரு புது உருவத்தைக் கண்டான். அவன் நிதானிப்பதற்குள் அந்த உருவம், அவனையும் தாண்டி, வெளியே பெட்டி படுக்கைகளைக் கவனித்துக்கொண் டிருந்த அவனுடைய சகோதரியின் அருகே போய்விட் டது. அது யாரென்று தாயாரைக் கேட்க அவன் நினைத்த சமயத்தில், வெளியில் அவனுடைய சகோதரி சிரிக்கும் சப்தம் கேட்டது. அந்தப் பரிகாசத் தோற்றமும் அவ னுடைய நினைவைத் தூண்டிவிட்டது. அவனுக்கு ஓர் 'அபூர்வ வஸ்து' வைத்திருப்பதாகச் சகோதரி எழுதி யிருந் தது அப்போதுதான் ஞாபகம் வந்தது. அந்த அபூர்வ வஸ்து இதுதானா? மின்னல்போல் தோன்றி மறைந்தது அவனுடைய மனைவிதானா?

சற்றுக் குழப்பத்துடன் அவன் நின்றான். அதைக் கவனித்துவிட்ட தாயார், "போய்ச் சீக்கிரம் வேறு வேஷ் டியைக் கட்டிக்கொண்டு வந்து உட்காரு. மணி இரண் டாச்சு. பட்டப் பட்டினியா வந்திருக்கிறயே" என்றாள்.

அவன் மாடிக்குப் போகும்போது, அவனுடைய சகோதரி, "மன்னியைப் பார்த்தாயா, அண்ணா?" என்று தாங்க முடியாத சிரிப்புக்கு இடையில் கேட்டது அவன் காதில் விழுந்தது.

வேறு ஆடையை உடுத்துக் கொண்டிருக்கும்போதே அவன் மனம் வேலை செய்தது. தான் விவாகம் செய்து கொண்ட சிறு பெண் எப்படியிருந்தாள் என்று நினைவுக் குவியல்களைத் துழாவத் தொடங்கினான். ஸ்திரமில்லாத, மெலிந்த பன்னிரண்டு வயதுப் பெண்ணின் உருவம் ஒன்று அவன் கண்முன்னே லேசாகத் தெரிந்தது; கன்னத்தில் பூசிய மஞ்சள்; மூக்கில் ஏழு கல் பேஸரி; ரோஜாவும் மல்லிகையும் சூடிய கூந்தல்; அந்த நாலு நாளும் அவனுடைய கையைப் பிடித்துக்கொண்டு, கூடவே பணிவுடன் தொடர்ந்து வந்தாள்; அவளுடைய கை புஷ்பம் போல் மிருதுவாயும், வியர்வை அரும்பி 'ஜில்'லென்றும் இருந்தது; இவ்வளவுதான் அவளைப்பற்றி அவனுக்கு ஞாபகம் வந்ததெல்லாம்.

அவனுக்குப் பதினெட்டு வயதிருக்கும்; அப்போது தான் 'இன்டர் மீடியட்' பரீக்ஷையில் தேறியிருந்தான். இந்தமாதிரி, பால்யத்திலே விவாகம் செய்து வைக்கும் வழக்கத்தை அவன் கண்டிப்பாக எதிர்த்து வந்தான். ஆனால், அவனுடைய தகப்பனார் அவனைக் கெஞ்சாத தோஷமாய்க் கேட்டுக்கொண்டார்; தாயாருக்கோ அதை விட்டு வேறு இடத்தில் பண்ணப்படாது என்று எண்ணம்; அவ்வளவு இஷ்டம் அந்த வரனில்.

அவனுடைய தகப்பனார் சொன்னார்: "குழந்தே, உன்னுடைய இஷ்டத்துக்கு விரோதமாய் இதில் பிரவேசிக்கவே மாட்டேன். ஆனால், அந்தக் குழந்தை என்னுடைய அத்யந்த சிநேகிதனோட பெண். அவன் செத்துப் போகிற காலத்திலே அவனுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறேன்; உனக்கே அந்தப் பெண்ணை, பண்ணிவைக்கிறதாக. உங்கம்மாவைக் கேட்டுப்பாரு. நீ எப்படியோ அப்படித் தான் அந்தப் பெண்ணும் எங்களுக்கு. அதுவும் தங்கமான பெண். இப்பவோ இன்னும் கேவலமான ஸ்திதி. தாயார் வியாதிக்காரி.நம்ப பண்ணிக்கொள்ளாத போனால்.

எவன் தலையிலாவது மூணுந் தாரமாகவாவது அதைக் கட்டி விடுவாள். கடைசியிலே அந்தப் பழி என்னைத்தான் சுற்றும்—உனக்குத் துளியும் இடைஞ்சல் இல்லாமல் பார்த்துக்கறேன். உன் படிப்பு எல்லாம் முடிந்து அப்புறம் அவள் ஆத்துக்கு வந்தால் போதும்......''

இந்த நீண்ட வேண்டுகோளை அவனால் மறுக்க முடியவில்லை. இப்போது அவனுடைய படிப்பு முடிந்தது. கஷ்டப்பட்டுச் சம்பாதித்த எம். ஏ., பட்டத்தைத் தாங்கிக் கொண்டு வீடு திரும்பி யிருக்கிறான். அவனுடைய மனைவி இயற்கையாக விளைந்த அழகையும், அன்பையும் சுமந்து வீடு புகுந்திருக்கிறாள். ஆனால், அந்த ஆனந்தத்தைக் கண்டு இப்போது அனுபவிக்கத் தந்தை யில்லை.

கல்யாணம் ஆனபின், கடந்த ஐந்து வருஷங்களில் அவன் ரொம்ப மாறிவிட்டான். அவனுடைய பால்ய நினைவுகளையும் அபிலாஷைகளையும் வளர்த்து உருவாக்கிய சூழ்நிலையி லிருந்து விடுபட்டு வளர்ந்திருந்தான். அவனுடைய கலாசாலைப் படிப்பு இதரப் படிப்புகளுக்கும் வழி காட்டிற்று. உலகம் நிமிஷத்துக்கு நிமிஷம் மாறிக்கொண்டிருப்பதை அவன் நேருக்கு நேரே கண்டிருக்கிறான். அந்தக் காலத்தின் மாறுதலோடு தன்னையும் அனுசரித்துக் கொண்டு நடக்க வெகுவாகப் பாடுபட்டு முயற்சித்திருக்கிறான். தினமும் புதுப் புதுக் கொள்கைகளும், பிரச்னைகளும், அவன் முன்னே எழுந்தன. அவையெல்லாம், அவனுடைய பழைய நம்பிக்கைகளையும், மனநிலையையும் ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டன. பெண்களைத் தெய்வமாகக் கொண்டாடும் பழைய நம்பிக்கையில் வளர்ந்த சங்கோசப் பிராணியான அவனை, தலை மயிரைக் கத்தரித்துக் கொண்டு, எட்டித் தள்ளிவிட்டு விரையும் நவீனப் பெண்களின் துணிச்சல் திகைக்க வைத்தது. அவனுடைய புராதன சாவித்திரி, சீதைக் கனவுகளையும் கருத்துக்களையும் அந்த நாகரிக உருவங்கள் பரிகசித்தன.

அவன்கூடப் பழகிய யுவர்களும் சந்யாசிகளல்லர். பெண்களைப் பற்றி அவர்கள் தாராளமாகப் பேசிக்கொண்டிருந்தனர். ஒரு பெண் அவனுடைய நடத்தையைக் கண்டு பரிகசித்தாள். சிலசமயங்களில் தனக்குக்கல்யாணம்

ஆகிவிட்ட தென்று சொல்லிக்கொள்ள, அவன் வெட் கப்பட்டான். ஒருத்தி அவனைக் காதலிப்பதாகப் பாசாங்கு பண்ணி, அவன் மனைவியை விவாக ரத்துச் செய்துவிடும்படி கூட யோசனை சொன்னாள்! ஹிந்து சட்டம் மாற்றி யமைக்கப்பட வேண்டும். அவனுக்கு மூளை குழம்பிற்று. படிப்பே கதியென்று புஸ்தகங்களுக்குள் மூழ்கினான்; விளையாட்டுக்களில் தீவிரமாய் ஈடுபட்டான்.

இவ்விதம் அவன் வெளியுலக விபத்துகளுக்குத் தப்பிப் பரிசுத்தமாக வீடுவந்து சேர்ந்துவிட்டான். இன்று, ஒரு பெண்ணுடன்—எப்போதோ கனவு போல் இரண்டு நாள் பழகிய ஒரு பெண்ணுடன்—நெருங்கி வாழப்போகிறான்.

சாப்பாடு முடிந்தவுடன், சற்றுத் தூங்க வேண்டு மென்று நினைத்தான். ஆனால், மனம் தூக்கம் கொள்ள வில்லை. தன் மனைவியைப் பற்றியும், இரவில் அவள் வந்த தும் என்ன செய்வது என்பதைப் பற்றியும் மனது சிந்திக் கத் தொடங்கிற்று. ஏனெனில் சம்பிரதாயப்படி மேளம் கொட்டி, புரோகிதர் வந்து, சாந்திக் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடியாதென்று, அவன் தாயாருடன் ஏற்கெனவே சண்டை போட்டு முடிவுகட்டி யிருந்தான். கதவிடுக்கில் எட்டிப் பார்த்துக்கொண்டு அசிங்கமான பாட்டுப் பாடும் பெண்கள் வேறே! சே! அதெல்லாம் ஒன் றும் கூடாது!...

சாயங்காலம் எல்லாவற்றையும் பற்றிச் சிந்தித்துக் கொண்டே, வெகுதூரம் நடந்து போனான். ஆற்றங் கரையில் போய், அவன் அந்த நாட்களில் வழக்கமாய் உட்கார்ந்து கொள்ளும் இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டான். காவிரி நதி அந்த இடத்தில்—சூரியன் மேலைக் கடலில் விழுந்து நட்சத்திரங்கள் ஒவ்வொன்றாய்க் கண் சிமிட்டிக்கொண்டே கிளம்பும் அந்த அஸ்தமிக்கும் சமயத்தில்—தன்னைச் சிங்காரித்துக்கொள்ள விரைந்து செல்லும் ஒரு கன்னிகையைப் போல் அவனுக்குக் காட்சி யளித்தது. ஓடிக்கொண்டே யிருக்கும் மனத்தைப் பிடித்து நிறுத்திச் சிந்திக்க முயன்றான்; முடியவில்லை. அவன் மனத்தில் சாந்தி யில்லை.

மனைவியைச் சந்திக்கப் போகும் நேரம் நெருங்க நெருங்க, அவனுடைய மனதிலே குலையத் தொடங்கிற்று. தனியாக விலகிநின்று, தனக்குச் சம்பந்த மில்லாத விஷயத்தைப் பற்றி யோசிப்பது போல் அவன் சிந்திக்க முயன்முன்; முடியவில்லை. அவன் எப்படி நடந்து கொள்வது? எங்கே ஆரம்பிப்பது? எப்படி முடிப்பது? அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

தன் கடந்தகால அனுபவத்தில் அவன் சில கொள்கைகளைக் கைக்கொண்டிருந்தான். இதுவரையில் அவனுக்கும் அவனுடைய மனைவிக்கும் என்ன சம்பந்தம்? அவன் ஓர் அன்னியன்தானே? முதல் முதலில் அவளைப் பார்க்கும்போது, எப்படி அவளிடம் நெருங்குவது? இதைப் பற்றி வீட்டுக்குப் போனதும் தன் தங்கையுடன் பேசி, கொஞ்ச காலத்துக்குப் 'புருஷனுய்' இருப்பதைப் பழகிக் கொண்டு பிறகுதான் அவளுடன் நெருங்க வேண்டும் என்று சொல்ல வேண்டுமென்று நினைத்தான். உடனே, தன் சகோதரி அவனுடைய யோசனையைக் கேட்டு எப்படிப் பரிகசிப்பாள் என்பதும் அவனுக்குப் பட்டது.

இரவு தன் மனைவி வந்ததும் என்ன நடக்கும் என்பதைப் பற்றித் தன்மனத்துக்குள்ளாகவே ஒத்திகை செய்து பார்த்தான்... அவன் மேஜையின்கீழே படுத்துக்கொண்டிருப்பான். அவள் வருவாள். வந்ததும் கதவைச் சாத்துவாள். நிமிர்ந்து அவள் முகத்தைப் பார்ப்பான். முகத்தில் ஒரு புன்சிரிப்பை வர வழைத்துக் கொண்டு அவளுடன் சம்பாஷிக்க முயல்வான். அவளும் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பாளா? அவள் தலையைத் தொங்க விட்டுக்கொண்டே, கீழேதான் பார்த்துக் கொண்டிருப்பாள். அப்போது, அவன் என்ன செய்வது? கீழேயே பார்த்துக் கொண்டிருக்கும் ஓர் அன்னியப் பெண்ணுடன் எப்படிப் பேச முடியும்?......அவனுடைய ஒத்திகை ஆரம்பத்திலேயே தடைப்பட்டது; அவள் என்ன நினைக்கிருள் என்பது தெரியாமல், அவன் எப்படி மேலே போக முடியும்? கதாநாயகி யில்லாமல் காதல் காட்சிக்கு ஒத்திகை நடத்துவதுபோல் இருந்தது அது.

அவள் என்னதான் நினைத்துக் கொண்டிருக்க முடியும்? சம்பிரதாயப்படி உள்ளே வரவேண்டியதுதான். அப்புறம்—? ஆனால், அவன் சம்பந்தப்பட்ட வரையில், இந்த விஷயத்தில் அவளுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும். விலை கொடுத்து வாங்கின சொத்தை ஒரு மனிதன் கண்ணை மூடிக்கொண்டு உபயோகிப்பதைப் போல் அவளை நடத்தலாமா? அவனுடைய ஜனங்கள் உலகம் தோன்றிய நாள் முதல் அப்படித் தான்செய்து வந்திருக்கிறார்கள். ஸ்திரீகளும் அதைச் சர்வ சாதாரணமாய்த்தான் உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

அவனுடைய தங்கைதான் இருக்கிறாள். இரண்டு வருஷத்துக்கு முந்தி, பெற்றோர் அனுப்பிவைத்த அன்று, சர்வ சாதாரணமாய்ப் புருஷன் வீட்டுக்குப் போனாள். இப்போது கையில் ஒரு குழந்தையுடன் திரும்பி வந்திருக்கிறாள். பிள்ளை பெறவே தான் பிறந்ததாக, அத்தனை உற்சாகத்துடன் சகஜமாக, அந் நிலைமையை ஏற்றுக்கொண்டு விட்டாள். அவளுக்கென்ன?—ஆனால், அவனுடைய சகோதரிக்கும் அவள் புருஷனுக்கும் இவன் மாதிரியான கொள்கைகள் உண்டா? அது அவர்களுக்குச் சரி. இவன் சம்பந்தப்பட்ட வரையில் அப்படி முடியாது. இவன் மனைவிக்கு எப்படி யிருக்கும்? அவளும் தங்கையைப் போல் தானோ? அவனுக்குத் தெரிந்த பல பெண்கள் அப்படி யிருக்க மாட்டார்கள். தங்கையும் அவள் புருஷனும் காதலைப் பற்றிப் பேசியே இருக்க மாட்டார்கள். ஜீவனுடன் ஜீவன் ஐக்கியபாவத்தில் சேரும் அந்தத் தெய்விக இன்பத்தைப் பற்றி அவர்கள் நினைத்துக் கூடப் பார்த்திருக்க மாட்டார்கள்.

இவனால் அது முடியாது. பின் என்னதான் பண்ணுவது?......அவன் மனது சலித்துச் சலித்து ஓடியது........ அவள் பதில் பேசாமல் தலை குனிந்து விடலாம். அந்த மாதிரி அவள் வருவதை இவன் விரும்பவில்லை. பூர்ண சந்திரன் வீசும் நிலவொளியில், பூமெத்தைகள் பரப்பிய நந்தவனத்தில், இன்பமயமான காதல் மொழிகளைப் பேசிக் குலவிக்கொண்டு, அவனும் அவனுடைய

மனைவியும்...இந்தமாதிரியான கனவு லோகங்களில்தான், அவன் இதுவரையில் சஞ்சரித்தான். படுக்கை யுள்ளே காற்றில்லாத போதிலும்—துளி வீசும் சந்திர ஒளியாவது போதாதா?......

இவ்விதம் யோசனை செய்து செய்து சோர்ந்துபோன மனத்தில், அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. எப்படிச் சந்தர்ப்பம் இருக்கிறதோ அப்படி நடந்து கொள்வோம் என்று முடிவு செய்தவனாய் எழுந்தான். ஒருவேளை அவளுடைய முக தரிசனம் கிடைத்த பின், ஏதாவது யோசனை தோன்றலாம் அல்லவா?

சாப்பாடு முடிந்ததும், தன் அறைக்குப் போனான். அவனுடைய சகோதரி கூடவே வந்து பேச்சுக் கொடுத்தாள். அவன் ஏதோ சாக்குச் சொல்லி நழுவிக்கொண்டான்.

அவனுடைய படுக்கை யறை, மாடியில் வெளி முற்றத்திற்குப் பக்கத்தில் இருந்தது. அது விசாலமான அறை. அவனுடைய படிப்பு, படுக்கை எல்லாம் அங்கேயேதான்.

அறையில் அவன் வைத்திருந்த சாமான்கள் எல்லாம் இடம் மாறியிருந்தன. வலது பக்கத்துச் சுவர் ஓரமாக மேஜை போடப்பட்டிருந்தது. அதன் மேல் ஒரு பிரகாசமான விளக்கு. அதற்குப் பக்கத்தில் பளபள வென்று மின்னிய ஒரு கூஜா—அதற்குள் பால்தான் இருக்க வேண்டும். எதிரே இடதுபுறத்தில் ஒரு பெரிய இரட்டைக் கட்டில். அதுதான் அவனுடைய மாமியார் வீட்டுச் சீர். படுக்கைக்குப் பக்கத்தில், தலைப் பக்கம் ஜன்னல்; அதற்கு வெளியில்தான் மொட்டை மாடி. பட்டு ஜமக்காளம், அதன் மேல் பட்டுத் தலையணைகள்.

அறையின் மற்றொரு மூலையில் அவனுடைய 'கிராமபோன்' சின்ன மேஜையின்மேல் உட்கார்ந்திருந்தது தெரிந்தது. அதற்குப் பக்கத்தில் பெரிய சோபா. அறையின் மத்தியில் நாகரிகமாக, சிறு ஸ்டூலின்மேல் புதிதான புஷ்பங்கள், கண்ணாடி டம்ளரில் வைக்கப்பட்டிருந்தன. தரையை மிருதுவான விரிப்பு மூடிக் கொண்டிருந்தது.

அவனுடைய அலமாரியும் கண்ணுடி வைத்த சிங்கார மேஜையும் முன்பு இருந்த இடத்திலேயேதான் இருந்தன.

அவன் மொட்டை மாடிப் பக்கம் போனுன். மேலே சந்திரன் ; அதைப் பார்க்கும் போதெல்லாம் அவன் மனத்தில் ஏனே ஒரு சோக அலை எழும். இன்று அது இன்னும் நெருங்கி விட்டதாக, அவனுக்குத் தோன்றிற்று. மனத்தில் சோகம் அதிகரித்தது. காற்றே யில்லை. காற்று அடித்தால் தேவலை என்று நினைத்தான். 'நிலவொளியில் மிருதுவான தென்றல் அடிக்கும்போது, அவனுடைய மனது சற்று அமைதி யடையும். அதுவும் இன்று—அவன் மனைவியைக் காணப்போகிருன்—அந்த அமைதி அவசியமாயிருந்தது. உள்ளே போனுன். அவனுக்குப் பிரியமான கவிதைப் புஸ்தகத்தை எடுத்துப் படிக்க முயன்ருன். முடியவில்லை. மனம் குவியவில்லை.

'கிராமபோனை'த் திருப்பினுன். அவனுக்கு மிகப் பிரியமான ஹிந்திப் பாட்டுகளை வைத்தான். காதலியின் முகத்தின் நிழலைக் கண்டு காதலன் பாடும் பாட்டு. நிஜமாகவே தன்னுடைய காதலை, அவன் நேருக்கு நேரே சந்திக்கப் போகிற அந்தச் சமயத்தில், இந்தக் கற்பனையும் கவிதையும் எப்படி அமைதியைத் தரமுடியும் ?

நிச்சயமற்ற நிலையில் அவனுடைய மனம் ஊசலாடிக் கொண்டிருந்தது. மறுபடியும் மொட்டை மாடிப் பக்கம் போக நினைத்துத் திரும்பினுன். சட்டென்று திரும்புகையில், அவனுடைய மனைவி உள்ளே வந்து கதவைத் தாழிடுவதைக் கண்டான். அவள் அங்கேயே தரையைக் குனிந்து பார்த்துக்கொண்டு நின்ருள். அவன்தான் அவளை முதலில் அணுகவேண்டும். அப்படியே மெதுவாகக் கையைப் பற்றி மொட்டை மாடிக்கு அழைத்துப் போவதென்று நினைத்தான். அவள் உடம்புகூட நடுங்குவது போல் இருந்தது. அவளுடைய உருவத்தைக் கவனித்தான். நல்ல உருவம். சின்னக் கைகள். மெலிந்த விரல். கலையுள்ளம் படைத்தவர்களுக்கு அப்படித்தான் இருக்குமென்று கேள்விப்பட்டது அவன் நினைவுக்கு வந்தது. அவனுக்குத் திருப்தியா யிருந்தது. மிகுந்த துணிவை வர

வழைத்துக்கொண்டு, "என்ன?" என்றான். அதற்கு மேல் பேசத் தெரியவில்லை. அவள் தலையைக் குனிந்து கொண்டாள். அவனுக்கே சங்கோசமாயிருந்தது. மேஜையின் மேலிருந்து இரண்டு கிராம்புகளை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். அவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை......

அவள் நிமிர்ந்து பார்க்க மாட்டாளா? அவளுடைய முகம் எப்படி யிருக்கும்?...ஒருவேளை நன்றா யிராதோ? அவளுடைய முகத்தை நிமிர்ந்து பார்க்க, அவன் அஞ்சினான். நிச்சயமற்ற கற்பனை அவனுக்கு இன்பத்தைக் கொடுத்தது. அவளைப் போய் முகத்தைக் காட்டு என்று கேட்பது ரொம்ப அநாகரிகம்! எல்லோரையும் போலவே அவனும் நடப்பதா? அந்த முதல் சந்திப்பு இனிமையாக யிருக்கவேண்டும். இருவரும் மிக மேன்மையாய் நடந்து கொள்ள வேண்டும். ஆடு மாதிரி இவன் சொன்னதை யெல்லாம் அவள் கேட்பது சரியில்லை. இவனை நன்றாக அறிந்து கொள்ளாமல் அவள் எப்படி விரும்ப முடியும்?... தான் நன்றாயிருப்பதாக அவன் நினைத்துக்கொண் டிருந்தான். இவன் முகம் நன்றா யிருக்கிறது என்பதற்காக அவள் இவனிடம் வரக்கூடாது. அது இவனுக்குப் பிடிக்காது.

அவளைக் கண்டதும், அவனுடைய மனத்திலே எழும் மோஹத்தில் போய் விழுவது அவனுக்குப் பிடிக்கவில்லை. அதற்கு இடங்கொடுக்கக் கூடாது என்று மனத்தைக் கட்டுப்படுத்தி யிருந்தான்.

அவளை மொட்டை மாடிக்கு அழைத்துப்போய் மெதுவாக அறிமுகம் செய்துகொள்ள வேண்டும் என்று நினைத்தான்...சந்திரன் ஒளியில் அவளுடைய முகத்தைப் பார்ப்பான். பிறகு பேச ஆரம்பிக்கலாம். அதனால் அவன் வெளி மெத்தைக்குப் போனான். மனத்தில் எழுந்த கிளர்ச்சி அதிகரித்தது. அங்கேயே குறுக்கும் நெடுக்கும் உலாவ ஆரம்பித்தான்.

விரைந்தோடும் மனத்தைக் கட்டுப்படுத்தி, அவளைப் பற்றி நினைக்காமல் இருக்கவேறுவிஷயங்களில் திருப்பினான்.

சுற்று முற்றும் உள்ள வீடுகளின் மேல் திருஷ்டியைச் செலுத்தினன். சில வீடுகளில் ஜன்னல் வழியாக வெளிச்சம் தெரிந்தது. மற்றவை இருண் டிருந்தன. அந்த வீடுகளுக்குள்ளே உள்ள தம்பதிகள் என்ன செய்துகொண் டிருப்பார்கள்? அவர் அவர்கள் உள்ளத்தில் தோன்றிய ஒளியின்படி எப்படியாவது நிலைமையைச் சமாளித்துக் கொண் டிருப்பார்கள்......அவனுடைய மனத்தில் என்ன ஒளி இருக்கிறது...இன்னும் சற்றுச் சாவகாசம் கிடைத்திருந்தால்—பத்து நாள், ஒரு வாரமாவது இருந்தால்— அவனும் ஒருவாறு முயன்று சமாளித்துக் கொண்டிருப்பான்.

அவனுடைய சிந்தனை தன் பெற்றோரிடம் திரும்பிற்று. கல்யாணம் ஆகி முப்பது வருஷங்கள் வரையில், அவர்கள் நிதானமான தாம்பத்ய வாழ்க்கை நடத்தி யிருக்கின்றனர். அந்த நினைப்பில் ஒரு பீதியும், கூடவே ஒரு சமாதானமும் மனத்தில் எழுந்தன... அவர்கள் எவ்வளவு பாடுபட்டுத் தங்களுடைய சில்லறைக் குறைகளை வெற்றியுடன் சமாளித்திருக்க வேண்டும்! அது ஒரு பெரிய அற்புதமாக அவனுக்குப் பட்டது.

தன் கல்யாணத்தைப் பற்றித் தீவிரமாக யோசனை செய்யத் தொடங்கினன். அவன் மூலம் எவ்வளவு நூற்றுக்கணக்கான சந்ததிகள் உற்பத்தியாகப் போகின்றன! உலகத்திலே ஒரு பெரிய ஜாதியை உற்பத்தி செய்யப் போகும்பிதாவின் பெருமிதத்தை, மனத்தில் கொண்டான். அவனுக்கு முன்னல் வந்தோரைப் பற்றி நினைத்தான். அவர்களில் யாரும் தங்கள் சிந்தனைகளைப் பற்றிய குறிப்புகள் வைத்ததாகத் தெரியவில்லை. ஆனல் அவர்கள் மட்டமானவர்களும் அல்ல; வாழ்க்கையின் லட்சியத்தைச் சரியாக உணர்ந்துகொண்டு அதைப் பண்படுத்தி வாழ்ந்தால், அவனுடைய வம்சத்திலேயே ஏன் ஓர் அவதார புருஷன் உதிக்கக் கூடாது?

ஒரு காலத்தில் பிரம்மசர்யத்தில் அவனுக்கு அபார நம்பிக்கை விழுந்தது. முட்டாள்தனமாக, தன் மனைவி பிரம்மசர்ய வாழ்க்கை நடத்த முடியும் என்று கூட எண்ணினன். பிற்காலத்தில் வாழ்க்கைப் போரில் நேரடி

யாக இறங்கியதும், அந்த எண்ணம் எவ்வளவு தவறானது என்பதை உணர்ந்தான். அது மட்டுமல்ல; நைஷ்டிகப் பிரம்மசாரிகளாய் அறைக்குள்ளேயே அடைத்துக் கிடக்கும் சித்தர்களும் யோகிகளும் உள்ளுக்குள்ளேயே எவ்வளவு ஆண் சக்தியை அடக்கி வைத்திருக்கின்றனர். என்றைக் கிருந்தாலும் அந்தச் சிருஷ்டி சக்தி அணையை உடைத்துக்கொண்டு வெளியேற வேண்டியதுதானே!...

இவ்விதம் அவன் சிந்தனையில் ஆழ்ந்திருக்கையில், அவன் மனைவி அறைக்குள்ளேயேதான் இருந்தாள். வெளியில் வரவில்லை. அவள் என்ன செய்துகொண்டிருந்தாள்? ஒருவேளை அழுதுகொண்டே கிடந்தாளோ? அவன் எவ்வளவு மிருகத்தனமாய் நடந்து கொண்டுவிட்டான்!—மிருகத்தனமாகவா நடந்துகொண்டான்? அந்தமாதிரி இருக்கப்படாது என்பதற்காகத்தானே, கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான்? அந்தக் கஷ்டமான பிரச்னையைத் தீர்க்க, ஒரு வழி தேடிக் கொண்டிருந்தான். மேல் நாட்டு ஜனங்களுக்கு இந்தமாதிரி, கஷ்டமே கிடையாது. கல்யாணத்துக்கு முன்பே அவர்களுக்குக் காதல் வாழ்க்கை உண்டு. அவனுடைய ஜனங்கள் மட்டும் இந்த மாதிரி, கஷ்டப்பட்டார்களா? இரண்டு பேர், இதற்குமுன் முகம் தெரியாதவர்கள் ஒன்று சேர்ந்துகொண்டு, எப்படியோ பரஸ்பரம் அனுசரித்துக்கொண்டு, கஷ்டமோ சுகமோ ஒன்றாகவே வாழ்ந்தனர். அந்த மாதிரி அவனால் முடியாது. புதிய கருத்துக் கேற்றபடி, புதிய முறையில்தான் அவன் வாழவேண்டும். ஆனால், எப்படி இந்த முதல் நெருக்கடியைச் சமாளிப்பது?

ஒரு மணி, இரண்டு மணி யாச்சு. அவன் ஒரு முடிவுக்கும் வரவில்லை. இது முழுதும் அவனாகக் கற்பித்துக் கொண்டு அவஸ்தைப்படும் அநாவசியப் பிரச்னைதானோ? அவனுடைய மனைவியின் சிந்தனைகளையும் கொள்கைகளையும்பற்றி, அவனுக்கு என்ன தெரியும்?......

அவன் அறைக்குள் பார்த்தான். விளக்கு அணைந்து விட்டது. அவளும் படுத்துக்கொண்டு விட்டாளோ? என்ன அசட்டுத்தனம் செய்து விட்டான்! அவன் படித்தவன், மரியாதை தெரிந்தவன் என்று தன்னை நினைத்துக்

கொண்டிருந்தானே? இதுதானு மரியாதை? அன்றுதான் வந்திருக்கும் மனைவியிடம் சுமுகமாக ஒரு வார்த்தை சொல்ல வேண்டாமா? அவனையே நம்பி, தன்னையே ஒப்படைக்க வந்திருக்கும் அந்தச் சிறுமி, என்ன நினைத்துக் கொள்வாள்? இனி வரப்போகும் வாழ்க்கையைப் பற்றி அவனிடம் அவள் அடைய விருக்கும் சந்தோஷத்தைப் பற்றி, என்ன நினைத்துக் கொண்டிருப்பாள்? சே!.........

அவன் தன்னையே கடிந்து கொண்டான். எதற்காக இவ்வளவு தூரம் தயங்க வேண்டும்? சாதாரண ஆண் பிள்ளையைப் போல் ஏன் நடந்துகொள்ளக் கூடாது?

கதவுப் பக்கம் திரும்பினன். ஜன்னல் வழியாக நிலா வெளிச்சத்தில் படுக்கை தெரிந்தது. ஓரமாக அவள் படுத்துக் கொண்டிருந்தாள். அவளைப் போய் எழுப்பலாமா? அவளிடம் என்ன பேசுவது? தூக்கக் கலக்கத்தில் கண் விழிக்கும் அவள் என்ன செய்வாள்? ஒரு வேளை அழத் தொடங்கி விடுவாளோ!

அவன் திரும்பிப்போய் அங்கே போட்டிருந்த கல்லாஸனத்தில் தலையை இரண்டு கைகளுக் கிடையில் தாங்கிக்கொண்டு உட்கார்ந்தான். அவன் என்ன செய்து விட்டான்! சாதாரண மனித தர்மம்-மனிதனுக்கு மனிதன் காட்டும் மரியாதைகூட—அவளுக்குக் காட்ட வில்லையே அவன்! எத்தனை பேருக்கு அவன் புத்தி சொல்லி யிருக்கிருன்! இவ்வளவு முரட்டுத்தனமாக நடந்துகொண்டானே!

ஆனல்—இந்த மாதிரி, சந்தர்ப்பம் அசாதாரணமான தில்லையா? நிரந்தரமான ஆனந்தத்துக்கு—பரஸ்பர நல்லெண்ணத்தில் உதிக்கும் நிதநியமான காதலுக்கு—அன்று அவன் வழி தேடிக் கொண்டிருக்க வில்லையா? எல்லாவற்றையும் அவளிடம் எடுத்துச் சொல்லித் தெளிவு படுத்தி விடுவது என்று தீர்மானித்தான். அதை ரொம்ப நாசுக்காக, அகம்பாவமின்றி, எப்படிச் சொல்ல வேண்டுமென்று அவனுக்குத் தெரியும்.

அந்தத் தீர்மானம் அவன் மனத்திற்கு ஓர் உறுதியைக் கொடுத்தது. எழுந்து நடமாடத் தொடங்கினன். குளிர்ந்த

காற்று 'ஜில்'லென்று வீசியது, அவனுக்குச், சுகமாயிருந்தது. நிமிர்ந்து சந்திரனைப் பார்த்தான். இரவு நிசப்தமாயிருந்தது. அவனுக்கே மனத்தில் ஒரு திருப்தி ஏற்பட்டது.

பன்னிரண்டு மணி அடித்தது. காற்றுக் குளிர்ந்து வீசியது. அவன் தீர்மானித்து விட்டான், அப்போது பேசாமல் போய்ப் படுத்துக்கொண்டு விடுவது, காலையில் அவள் எழுந்து போகுமுன் அவளிடம் பேசி, ஆறுதல் சொல்லி விடுவது என்று. அன்றியும் அதிகாலையில்தான் அவனுக்குப் புத்தி தெளிவா யிருக்கும். அதுதான் சரியான காலம்.

அவன் உள்ளே போனான். படுக்கையின் மேல் நிலவொளி விழுந்து தெளிவாக எடுத்துக் காட்டியது. அவள் எழுந்துவிடப் போகிறாளென்று அஞ்சி, விளக்கை அவன் ஏற்றவில்லை. அலமாரியி லிருந்து சந்தடி செய்யாமல் மேல் துண்டை எடுத்துச் சோபாவில் போட்டான். அதிலே படுத்துத் தூங்கி விடுவதென்று நினைத்தான். ஆனால், தலைக்குத் தலையணை வேண்டுமே! அவையெல்லாம் படுக்கையில் இருந்தன. மெதுவாகப் படுக்கையை நெருங்கினான். ஜன்னலுக்குப் பக்கத்தில் அவள் படுத்திருந்தாள். தலையை இரண்டு தலையணைகளுக்கும் இடையில் வைத்திருந்தாள். அவளுடைய தூக்கத்தைக் கலைக்காமல் தலையணையை எடுத்துவிட வேண்டுமென்று கிட்டத்தில் போனான். அவளுடைய முகம் தெரிந்தது.

அந்த நிலவொளியினாலே மெருகிடப் பட்டதுபோல் தோன்றிய அந்த இளமை ததும்பும் முகம், அவன் மனத்தைக் கவர்ந்தது. மிக மிருதுவான, அந்த அழகிய முகத்திலே அவன் எதிர்பாராத வகையில் அமைதி நிறைந்திருந்தது. பகட்டால் ஒருங்கே கண்ணையும் மனத்தையும் பறிக்கும் முகம் அல்ல அது. அவனுடைய அரவணைப்பைக் கோரும் ஒரு குழந்தையின் முகத்தைப்போல் இருந்தது அது.

சிவந்த அவள் நெற்றியிலே கூந்தலின் ஒரு சுருள் பறந்து தொங்கி மெதுவாகக் காற்றில் ஆடிற்று. அவள் கழுத்தை அலங்கரித்த ஒற்றைச் 'செயின்' மார்பின் மேல் வந்து கிடந்தது. அதில் தொங்கிய பச்சைக் கல்லின் மேல்

பட்டு, சந்திரனின் ஒளி விளையாடிற்று. உள் கழுத்தில் புதிதாக மஞ்சளில் குளிப்பாட்டப்பட்ட சரடு. ஐந்து வருஷங்களுக்குமுன் அவன் கட்டியது. மீண்டும் அவள் முகத்தை நோக்கினான். அவன் உள்ளத்தில் எழுந்த ஒரு பரிவு, தேகம் முழுவதும் பரவிற்று.

படுக்கையின்மேல் மெதுவாகப் போய் அமர்ந்தான். அவனுடைய ஆண்மையைப் பற்றி இழுத்தது அந்த முகம்; அவனுடைய பராமரிப்பை, அவனுடைய அந்தரங்க சுத்தியான அன்பு அத்தனையையும் கோரி, எழுப்புவது போன்றிருந்தது அந்த இளம் முகத்தில் தோன்றிய இனிமை.

அதே சமயம் ஜன்னல் வழியே காற்று வீசிற்று; அதனுடன் மிகவும் மந்தமான இனிமை கலந்த ஒரு வாசனை அவனுடைய நாசியை நெருங்கிற்று. அந்தத் தைல வாசனை அவனுக்கு மிகவும் பிரியமானது. அதை உணர்ந்ததும் அவன் ஆச்சரியப்பட்டான். அவள் அணிந்திருந்த தைலத்தின் வாசனையும் சுவை நிறைந்திருந்தது.

வாழ்க்கையின் இனிமையைச் சுவைக்க, அவள் எவ்வளவு ஆவலாய்க் காத்திருக்கிறாள் என்பதை அந்த மென்மையான நறுமணம் அவனுக்குத் திடீரென்று உணர்த்திற்று. இன்னும் சற்றுக் குனிந்தான். அவனுடைய நெஞ்சிலே ஒரு போதையின் வேகம் ஏறிற்று. சற்றுமுன் மூளையைக் குழப்பிய தத்துவத்தையெல்லாம் மறந்தான். இதுவரையில் கண்டறியாத நூதன உணர்ச்சிகள் அவன் நெஞ்சை நிரப்பின; அந்த விவரிக்க முடியாத இன்ப வேகத்தின் ஆட்சிக்கு அடிபணிந்தான். மெதுவாகக் கீழே குனிந்தான்; மிருதுவாக வந்த அவளுடைய சுவாசம் அவனுடைய தலையைக் கிறுக்க வைத்தது... அந்தப் போதையின் வேகத்திலே, சற்றுமுன் ஒன்றும் அறியாது பால் வடிந்ததென அவன் நினைத்த அந்த முகத்திலே தோன்றிய குறும்புத்தனம் கலந்த இளமுறுவலை அவன் கவனிக்கவில்லை.

அவனுடைய உதடுகள் முகத்திலே பட்டதும், அவள் புன்சிரிப்புடன் கண்ணை விழித்தாள். அவன் சட்டென்று தலையைத் தூக்கினான். அவள் முகம் முழுதும் புன்சிரிப்பால்

புஷ்பத்தைப்போல் மலர்ந்தது. அவளை அப்படியே வாரியெடுத்தான், ஒரு புஷ்பக் குவியலை எடுப்பது போல். இரு கைகளிலும் அவளை அள்ளி மார்புடன் அணைத்துக் கொண்டான். அவன் உள்ளம் கரை காணு இன்பத்தால் நிறைந்து லேசாகிப் பறப்பதுபோலிருந்தது. அவனுடைய கனமான கைகளுக் கிடையே ஒரு பட்சி போல் அவள் கிடந்து, நிமிர்ந்து விழித்தாள். மீண்டும் ஒரு முறை அவள் முகத்தை நோக்கினுன். அவனுடைய விழிகளிலே ஆண்மையின் முழு வேகமும் ஒருங்கே திரண்டிருப்பதை அவள் கண்டாள்......

தூரத்திலே சந்திரன் மேகக் கும்பல்களிடையே மறைந்து, வெளி வந்து, மீண்டும் மறைந்தது.

3

இவ்விதமாக, ஒருவரை ஒருவர் வென்ற இந்தப் 'பரஸ்பர வெற்றி,' ஓர் இனிய ராகத்தின் ஆரோகணம் போல் பூர்த்தி பெற்றது. தீரமும் தேஜஸும் ததும்பும் காணக் கிடைக்காத ஒரு பாத்திரத்தை இங்கே நாம் காண்கிறோம். 'ஒளிக்காத உண்மைகள்' என்ற பெயர் சூட்டக் கூடிய புத்தகத்தின் ஓர் அத்தியாயம் இது.

அநேக மாதங்கள் வரையில் நான் ஆவலாய்க் காத்திருந்தும், என் நண்பனிடமிருந்து கடிதமே வரவில்லை. பழகியதும் இன்று பாழாய்க் கிடப்பதுமான அந்த மாளிகைக்கு, இன்னமும் அவன் திரும்பி வரவில்லையே என்று நான் நினைத்தேன். திடீரென்று ஒரு நாள் இந்தக் கடிதம் வந்தது :

"என் வாழ்நாளில் மீதிக் காலத்தை, எப்படிக் கழிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. என் மனைவியின் சாவு, மரணத்துக்குப் பின் மனிதர் நிலை என்ன வென்பது பற்றி என்னைச் சிந்திக்கச் செய்தது. மாண்டவர்களும் வாழ்கிறுர்கள் எனவும், அவர்கள் நம்முடன் செய்திப் போக்கு வரத்து நடத்துகிறுர்கள் எனவும், அரவிந்தரும் பிறரும் எழுதியுள்ள விவரங்களை நான் படித்தேன். அவர்கள் சொல்வதிலே கோடியில் ஒரு பங்கேனும் உண்மையிருக்குமானல், என் மனைவி என்னிடம் வந்திருப்பாள். ஏனெனில், அவள் என்னிடம் அவ்வளவு அடியோடு

லயித்திருந்தாள். இந்த வாதத்துக்குத் தப்பித்துக் கொள்வதற்காக, ஆவி யுலக ஆராய்ச்சிக்காரர் ஒருவர் ஒரு சாக்குச் சொல்லி யிருக்கிறார்: செத்தவர்களுக்கும் வாழ்பவர்களுக்கும் இடையிலே, தடித்துக் கறுண்ட கண்ணாடிச் சுவர் போல் ஒரு தடை இருக்கிறதாம்! அந்தச் சுவரின் வழியே, மாண்டவர்கள் நம்முடன் செய்திப் போக்கு வரத்துச் செய்வார்களாம்! ஆனால், நம் கண்ணுக்கு அவர்கள் தோன்ற மாட்டார்களாம்! அவர்கள் பேசுவதும் நம் காதில் விழாதாம்! அப்படியானால், மாண்டவர்களும் வாழ்வதிலே நமக்கென்ன லாபம்? என் கேள்விக்கு யாராலும் திருப்திகரமாய்ப் பதில் சொல்ல முடியாது—ரமண மகர்ஷியாலும் அரவிந்தராலும் கூட முடியாது—என்று நான் நினைக்கிறேன். எனக்கு நேரடியான ருசு வேண்டும். ஆத்மிக விஷயத்தில், எனக்குக் கொஞ்சம் கூட நம்பிக்கை விழவில்லை. உண்மையை அறிந்து கொள்ள விரும்பும் ஒரு மனிதனிடம், 'நீ மூடன், உனக்கு விளங்காது' என்று சொல்லி விடுவதால், அவனுக்கு ஒரு பயனுமில்லை......

"நான் கண்ணீர் சொரிந்தேன். எத்தனை கண்ணீர் சொரிந்தும், எனக்கு ஆறுதல் ஏற்படவில்லை. தத்துவ ஆராய்ச்சியும் எனக்குப் பயன் தரவில்லை. மறதி தரக் கூடிய வேடிக்கை விளையாட்டுகளிலும் என்னால் ஈடுபட முடியவில்லை. அன்பையும் காதலையும் எல்லாம் மறந்து, உண்பதும் குடிப்பதும் உறங்குவதுமாய் வாழ்ந்து விட்டு, ஒரு பெருமையும் இன்றிச் சாவதுதான் கதி யென்றால், அதற்குத் தப்ப வழியில்லை; என்றாலும், அதை நம்மால் சகிக்க முடியாது......

"வாழ்வே சாரமற்றது என்ற பலமான உணர்ச்சி—ஏன், திட நிச்சயமே—என்னைப் பற்றி வருத்துகிறது. என் மனைவி இறந்தாள் என்பதால் மாத்திர மல்ல; பொதுவாகவே இதற்கு நான் ஒரு பரிகாரம் கண்டால் அல்லாமல், என் மனம் இறந்து போகும். நல்ல மன நிதானமும் உள்ள ஒரு சாதாரண மனிதன் நான். என்னால் உணர முடியாததையும், நம்ப முடியாததையும், நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்...

"தேசங்கள் ஒன்றோடு ஒன்று போரிட்டுக் கொண்டேயிருக்கின்றன. சிந்தனையாளர்களும் எழுத்தாளர்களும் வெகு சீக்கிரத்திலே உலகில் இல்லாமல் நசித்துப் போவார்கள்போல் தோன்றுகிறது. ஆகையால், நான் ஒன்றுமே எழுதப் போவதில்லை. படுகொலைகளும், மூர்க்கத்தனங்களும், நாச வெறியாட்டங்களும் நடந்து, தம் படைப்பு முழுதுமே அழியாவிட்டால், உலகைப் படைத்த கடவுளுக்கு ஆனந்தம் உண்டாகாதுபோல் இருக்கிறது! அப்படியானால், சீலமும் அன்பும் அழகும் மிக்க உத்தமர் யாவரும் மாண்டு மடிவதே மேலாயிருக்கும்! இந்த மூட உலகம் எரி குழம்பாய் ஜொலிக்கும் சூரிய கோளத்தின் மீதோ, வழி தவறி அலையும் ஒரு நட்சத்திரத்தின் மீதோ, மோதி நொறுங்கித் தீ உமிழ்ந்து சாம்பலாய் மறைவதே மேலாயிருக்கும்."



# பாலத்தில்—

### சான்டோர் கெர்க்லி

நகரத்தின் கோடியில் ஒரு பெரிய மோட்டார்க் கொட்டகை. அதற்கு அருகில் ஒரு மேஜையைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு அந்தக் குடும்பத்தவர்கள் அந்தி உணவு அருந்திக் கொண்டிருந்தார்கள். அந்தி நேரம். நாள் முழுதும் எலும்பு முறியும்படி வேலை செய்து அவர்கள் அலுத்திருந்தனர். சுவையற்ற உருளைக் கிழங்கு ஸூப்பை அவர்கள் விருப்பமின்றிச் சாப்பிட்டனர்; சோள ரொட்டியை வெறுப்புடன் சுவைத்தனர்.

குடும்பத் தலைவன் பெரின் கிராலி நடுவில் வீற்றிருந்தான். அவனுக்கு வயசு ஐம்பத்து ஆறு. ஆனால் முகத்தையும், கண்களையும், தளர்ந்த நடவடிக்கைகளையும் கவனிப்பவர்கள் அவனுக்கு எழுபது வயசு இருக்கும் என்றே சொல்லுவார்கள். கடந்த சில நாட்களாக அவன் தேகக் கட்டுத் தளர்ந்து வந்தது. கிராலி நோயால் வாடுகிறான் என்று அவன் மனைவி அடிக்கடி கேட்டாள்...... ஆனால் கிராலி அதை ஒப்புக்கொள்ளவில்லை. அவனுக்கு வியாதியே இல்லை; அவன் என்றைக்கும் நோயாளியாக இருந்ததில்லை; கடுமையான உழைப்பால் அவன் தேகம் தளர்ந்திருந்தது, அவ்வளவுதான். இது யுத்த காலம். யுத்தம் நடக்கும் பொழுது பின்னணியில் இருப்பவர்கள் கடுமையாக வேலை செய்யவேண்டும்; பட்டினியும் கிடக்க வேண்டும். இதுதான் நிலைமை!

கடந்த இரண்டு நாட்களாக அவன் ஜீரண சக்தியும் குறைந்தது. கிராலி உண்மையிலே நோயால் பீடிக்கப்பட்டிருக்கிறான் என்ற முடிவுக்கு வந்தாள் அவன் மனைவி.

"நீங்கள் என் ஒன்றும் சாப்பிட வில்லை? ஸூப்பு நன்றாக இல்லையா? உங்களுக்கு அது பிடிக்கவில்லையா?"

என்று அவள் கேட்டாள். "இங்கே ஒரு துண்டு மாமிசம் கூடக் கிடைக்கவில்லை. யாரிடமும் எதுவும் இல்லை. யாரிடமும் ஒன்றும் இல்லை!" என்று கூறிக் கொண்டே அவள் அழுதாள்.

உடனே வயசு வந்த அவன் புதல்வர்கள் இருவரும் அவசரமாக ஸூப்பைக் குடிக்க ஆரம்பித்தனர். அதனால் ஸ்பூன் அடிக்கடி பிளேட்டில் பட்டுச் சத்தம் உண்டாயிற்று. தங்கள் வாழ்நாளில் இவ்வளவு ருசியுள்ள ஸூப்பை அவர்கள் இதுவரையில் குடித்ததில்லை என்பதைத் தங்கள் தாய்க்கு உணர்த்த அவர்கள் ஆசைப்பட்டனர். கிராலியும் ஸூப்பைக் குடிக்க ஆரம்பித்தான். ஸூப்பில் இரண்டு உருளைக்கிழங்குத் துண்டுகள் மிதந்தன. அவள் திருப்தியுடன் அவர்களைப் பார்த்தாள். யாரும் ஒன்றும் சொல்லவில்லை. அப்போது ஸ்பூன் தட்டில் பட்டு எழுந்த சத்தம் மாத்திரந்தான் கேட்டது. அவள் தட்டுகளை அப்புறப்படுத்தினாள்; மேஜை மீது விரித்திருந்த துணியையும் மடித்து வைத்தாள். பிறகு, தட்டுகளைக் கழுவுவதற்காகத் தன் சாம்ராஜ்யத்திற்குச் சென்றாள்.

அவள் அப்பால் சென்ற பிறகு, அவர்கள் மனம் விட்டுப் பேசவும், தத்தம் கஷ்டங்களைச் சொல்லவும், தங்கள் ஆத்திரத்தையும், கலக்கத்தையும் வெளியிடவும் முற்பட்டனர். அன்னை இருக்கும்பொழுது அவைகளைச் சொல்ல முடியாது.. ஏனெனில் அவள் வீட்டின் உச்சியில் நின்றுகொண்டு எல்லாவற்றையும் சொல்லிவிடுவாள். செய்தி பகிரங்கமாகிவிடும். உடனே போலீஸ்காரன் அவர்கள் மீது பாய்வான். யுத்த காலத்தில் ராணுவ சேவையிலிருந்து தற்காலிகமாக விலக்கப்பட்டவர்கள் வீட்டில் இத்தகைய பேச்சு நடக்கிறது என்பது அதிகாரிகளுக்குத் தெரிந்துவிட்டால் அவர்கள் கதி அதோகதிதான்.

சென்ற சில தினங்களாக ஒரு ரகசியம் அந்த மூவர் மனத்தையும் புண்படுத்தி வந்தது. அன்றைத்தினம், வேலை முடிந்த பிறகு, காவற்காரர்கள் புடைசூழ எல்லோரும் வெளிக் கதவை நோக்கி நடந்தபொழுது, அவனுக்குத் தெரிந்தது அந்த விஷயம். பெரிய மரப் பட்டறையில் வேலை செய்யும் தொழிலாளர்கள்,—ஹங்கேரியர்

களும், ருதுவேனியர்களும்,—மலை உச்சியில் இருப்பதாகவும், கடந்த சில நாட்களாக அவர்கள் அங்கே ஆயுதம் தாங்கின போலீசாரை எதிர்த்துப் போர் புரிவதாகவும் கிராவியிடம் ஒரு மோட்டார் டிரைவர் கூறினான்.

"அவர்களை எதிர்த்துப் போராடுகிறார்களா? ஏன்? என்ன நடந்தது?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் கிராவி.

"என்ன நடந்தது? பிரமாதமாக ஒன்றும் நடக்கவில்லை. மூன்று வாரங்களுக்கு முன் யாரோ போர்க் கருவிகளை ஏற்றிவந்த ரயிலைக் கவிழ்த்து விட்டார்கள். சென்ற வாரம் உணவுப் பொருள்களை ஏற்றிவந்த ரயில் ஒரு பாலத்தை அடைந்ததும் அந்தப் பாலம் தகர்ந்தது."

"ஆம், இந்தச் செய்திகளை நானும் கேள்விப்பட்டேன். ஆனால் இதற்கும் அந்தத் தொழிலாளர்களுக்கும் என்ன சம்பந்தம்? போலீசாரை எதிர்த்துப் போராடும்படி இந்தச் சம்பவங்கள் அவர்களை ஏன் தூண்டவேண்டும்?"

"ஏனெனில், பாலத்தை அவர்கள்தான் தகர்த்தார்கள் என்று அவர்கள் மீது குற்றம் சாட்டப்படுகிறது."

"இதை அவர்கள் மறுக்கிறார்கள், அல்லவா?"

"ஆம்" என்று கூறிக்கொண்டே டிரைவர் புன்னகை புரிந்தான். "ஆனால் போலீசார் இவர்கள் சொல்லுவதை நம்பவில்லை. இவர்களை வேட்டையாடுவதற்காக ஒரு பெரிய படையை மலைக்கு அனுப்பினார்கள். அந்தப் படையின் மீது கல்லையும், கட்டைகளையும் எறிந்தனர் தொழிலாளர்கள். பிறகு துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது."

"வாஸ்தவமாகவா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் வயோதிகன். "இது மானக்கேடு. போலீசார் அவர்களை வேட்டையாடினார்கள் என்றால், வெடி குண்டு வைத்தவர்கள் அவர்கள்தான் என்பதில் சந்தேகமில்லை. இந்த எண்ணத்தை இன்னொரு சம்பவமும் ஊர்ஜிதம் செய்கிறது" என்று அவன் சிந்தித்துக் கொண்டே கூறினான். "ஆம்; அவர்கள் போலீசாரைச் சுட்டார்கள்

என்றால், அவர்கள்தான் ரயிலைக் கவிழ்த்தார்கள் என்பது திண்ணம். ஏனெனில் துப்பாக்கி அவர்களுக்கு எங்கிருந்து கிடைத்தது? துப்பாக்கி அவர்களுக்கு எங்கிருந்தாவது கிடைத்திருக்க வேண்டும், அல்லவா? அப்படியானால் அது எங்கிருந்து கிடைத்தது? ஆம்; ருஷியர்கள் அவர்களுக்குத் துப்பாக்கி கொடுத்திருக்கிறார்கள்'' இதைக் கூறிய கிராலி ஒருதரம் தன் தோள்களைச் சுருக்கி விட்டு நடக்க முற்பட்டான்.

ஆனால் டிரைவர் அவனை நிறுத்தினான். போராடும் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியவர்களின் தலைவன் மிக்லோஸ்தான் என்று டிரைவர் மெதுவாகக் கூறினான்.

"மிக்லோஸா? எந்த மிக்லோஸ்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் கிராலி.

"உன் புதல்வன் மிக்லோஸ் கிராலி..."

"என் புதல்வனா?''

இதைக்கேட்டதும் வயோதிகன் முகம் வெளிறிட்டது.

"இது...இது சாத்தியமில்லை.''

"இது உண்மை! நான் அவனிடம் பேசினேன்!'' என்று அந்த டிரைவர், கிழவன் பக்கம் சாய்ந்து மிகத் தணிந்த குரலில் சொன்னான்:

"ஆனால் என் மிக்லோஸ் கடந்த இரண்டு வருடங்களாக அமெரிக்காவிலோ, வேறு எங்கோ அல்லவா இருக்கிறான்..."

"அவன் அமெரிக்காவில் இல்லை. அதோ அங்கே இருக்கிறான்'' என்று கூறிக்கொண்டே டிரைவர் ஆற்றுக்கு அக்கரையைச் சுட்டிக் காட்டினான் கிழவனுக்கு. அங்கே வானத்தை நோக்கி எழுந்த பெஸ்கிட்ஸ் மலைச் சிகரங்களை அந்திச் சூரியன் சிவப்புத் திரையிட்டு மூடியிருந்தது.

இந்த விஷயத்தை எப்படிக் கிராலி பகிரங்கமாகப் பேசுவான்? அவன் மனைவி சமையல் அறையில் வேலை செய்து கொண்டிருந்தாள். தான் கேள்விப் பட்டதைக் கிராலி அப்போது தன் புதல்வர்களிடம் கூறினான். அவனைப் போல் அவன் குமாரர்களும் மோட்டார்

டிரைவர்கள். இச் செய்தியைக் கேட்டு அவர்கள் நடுங்கி னர். சிறிது நேரம் அவர்கள் தங்களுடைய பீதியடைந்த கண்களால் தந்தையை உற்றுப் பார்த்தனர். அழகிய, உப்பிய கன்னம் படைத்த இளையவன் கியூரிதான் மௌனத்தைக் குலைத்தான்.

"மிக்லோஸா? கடவுளே!" என்று அவனுடைய நடுங்கும் அதரங்கள் முணுமுணுத்தன. "ஆண்டவனே! இனி நம் கதி என்னவாகும்?" அவன் கைகளைப் பிசைந் தான். "சும்மா இருக்காமல் அவன் ஏன் இந்த வேலையில் ஈடுபட்டான்? அவன் தன் அறிவை இழந்திருக்க வேண்டும். பைத்தியக்காரன்! இது மகா கோரம்! அவர் கள் உண்மையைத் தெரிந்து கொண்டால் நம் கதி என்ன வாகும்? நம்மை அவர்கள் கைது செய்வார்கள். நான் இங்கே இப்போது உட்கார்ந்து கொண்டிருப்பது எவ் வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை நான் சொல்லு வது! நம்மை அவர்கள் நிச்சயம் கைது செய்வார்கள்! எல்லாம் அவனால்!"

குழந்தை முகம் படைத்த கியூரி பயத்தால் வெளிறி னான். அவனை வெறுப்புடன் பார்த்தான் கிராலி. இந்தக் குணத்தை அவன் யாரிடமிருந்து பெற்றான்? அவன் தந்தையோ, தாயோ இப்படிப்பட்ட பேடிகள் அல்ல! ஒருவன் தன்னைப் பற்றி மாத்திரம் எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்க முடியாது. ஆனால் கியூரியோ வேறு விதமாக நினைத்தான்: மூத்தவனான மிக்லோஸைக் கிராலி பெரிதும் வெறுத்தான். மிக்லோஸைப் பற்றி ஒரு நல்ல வார்த்தை கூட அவன் இது வரையில் சொன்னதில்லை. ஏனெனில் மிக்லோஸ் வேறு விதமானவன். அவன் வீட்டி லிருந்து ஓடிப்போனான். அவன் ஏன் ஓடிப்போனான்? மிக்லோஸ் ஊரிலேயே தங்கியிருந்தால் அவனுக்கும் வேலை கிடைத்திருக்கும். குடும்பச் செலவுக்கு அவன் வருமானம் உதவியாக இருக்கும்... ஆம்; கியூரி எப்பொழுதும் இந்த வழியில்தான் சிந்தித்தான். அவனுக்கு ஒரே ஒரு விஷயத் தைப் பற்றி மாத்திரந்தான் கவலை. சம்பாதிக்க வேண்டும்; பணம் சேர்க்க வேண்டும்; வீடு கட்ட வேண்டும். ஆனால் மிக்லோஸ் இதற்கு மாறுபட்டவன்; முற்றிலும் மாறு

பட்டவன். இது இரண்டு வருடங்களுக்கு முன் இருந்த நிலைமை.

உண்மையில் மிக்லோஸ் எங்கே போனான்? இங்கிலாந்துக்கா அல்லது அமெரிக்காவுக்கா? அவன் ருஷியாவுக்குப் போனதாகப் பலர் கூறினர். மிக்லோஸ் அமெரிக்காவில் இருந்து எழுதின கடிதத்தை எல்லோருக்கும் காட்டினான் கிராஃபி. எனினும் ஊர் வாய் மூடவில்லை. மிக்லோஸ் ரொம்ப நல்லவன்; சிறந்த அறிவாளி. ஆனால் அவன் முரடன்.

மற்றவன்—இரண்டாவது புதல்வன் மிஹாலி—வேறு விதமானவன். நிதானம், சாந்தம், அறிவு ஆகியவை படைத்தவன். அப்பொழுதுகூட அவன் கியூரி பேசி முடிக்கும் வரையில் பொறுத்திருந்து விட்டுக் கூறினான்:

"ஏன் அசட்டுத்தனமாகப் பேசுகிறாய்? மிக்லோஸ் நம் சகோதரன். அவன் நேர்மையானவன். அவன் மலையில் இருந்தால், அவன் அவர்கள் தலைவன் என்றால்..."

"கலகக்காரர்களின், பார்ட்டிசான்களின், தலைவன் அவன்" என்று குறுக்கிட்டுக் கூறினான் கியூரி.

"கலகக்காரர்கள் என்றோ, பார்ட்டிசான்கள் என்றோ நீ அவர்களை அழைப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை! அவன் அவர்கள் தலைவன் என்றால், அதன் பொருள் என்ன? நோக்கம் நிறைவேறுவதற்காக உயிரைத் தியாகம் செய்யவும் தயாராக இருக்கும் நூற்றுக்கணக்கான பக்குவம் அடைந்த தேச பக்தர்கள், மிக்லோஸைத் தங்கள் தலைவனாகத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பது இதன் அர்த்தம்..." கியூரி இடைமறித்துப் பேச முயன்ற பொழுது மிஹாலி அதற்கு இடங் கொடுக்காமல், "பேசாதிரு. இப்பொழுது நான் பேசுகிறேன். மிக்லோஸை அவர்கள் தங்கள் தலைவனாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்றால் அதைக் குறித்து நாம் பெருமைப் படவேண்டும்" என்றான்.

"காலிகள் அவனை அங்கீகரித் திருக்கிறார்கள்..."

"முட்டாள்தனமாகப் பேசாதே!" கோபத்தால் துடிக்க ஆரம்பித்த கியூரியை அவன் அடக்க முயன்முன். "அவர்கள் உத்தமர்கள். நம்மைப் போன்ற பேடிகளேயும் பீதி அடைந்தவர்களேயும் தவிர ஏனையோர் அந்தப் படையில் சந்தோஷத்துடன் சேருவார்கள். அவர்கள் ஜெர்மனியரையும், அவர்களுடைய ஹங்கேரியக் கூலிகளேயும் எதிர்த்துப் போர் புரிகிருர்கள்..."

"அவர்கள் தங்கள் தேசத்திற்கு எதிராகப் போர் புரிகிருர்கள்" என்று இடைமறுத்துக் கூறினன் கியூரி.

"இதுபொய்" என்று ஆத்திரத்துடன் கூறிவிட்டு மேஜைமீது குத்தினுன் மிஹாலி.

"சாந்தமாகப் பேசுங்கள்" என்று கிழவன் வற்புறுத்தினன்.

மிக்லோஸைப் பற்றியும், அவன் தோழர்களேப் பற்றியும் பேசுவது நின்றது. இந்தச் செய்தி வீண் வதந்தியாக இருக்க வேண்டுமே என்று அவர்கள் மூவரும் ஹிருதய பூர்வமாக ஆசைப்பட்டனர். ஆனல் அன்று மத்தியானம் சிப்பாய்கள் ஜாக்கிரதையாக இருக்கும்படி எச்சரிக்கப் பட்டனர். மோட்டார்க் கொட்டகையிலும், ராணுவ நிலயத்திலும் காவற்காரர்கள் அதிகப்படுத்தப் பட்டனர். பார்ட்டிசான்களே எதிர்த்துப் போர் புரிவதற்காக அனுப்பப்பட்ட படையை, பெஸ்கிட்ஸ்க் காட்டில் கலகக்காரர்கள் நிர்மூலம் செய்து விட்டார்கள் என்று ஜனங்கள் பேசிக்கொண்டனர்.

இந்தச் செய்தியைக் கேட்டு மூவரும் நிலகுலேந்தனர். தங்களுக்கு நேரவிருக்கும் ஆபத்தை அவர்கள் அச்சத்துடன் எதிர்பார்த்தனர். மிக்லோஸ் கிராலிதான் கலகக்காரர்களின் தலேவன் என்பது எப்போது பகிரங்கமாகும்? அந்த நாள்தான் அவர்கள் முடிவுகாலம்.

தந்தை எழுந்து சமையல் அறைக்குச் சென்றுன். அடுப்பில் ஒரு பெரிய அண்டாவில் ஜலம் கொதித்துக் கொண்டிருந்தது. கிராலி தன் மனேவியை அணுகினன். அவள் சுறுசுறுப்புடன் அங்குமிங்கும் நடமாடுவதை அவன் கண்டான். தன்னே அறியாமலே தன்னுடைய

வலது கரம் அவள் தலையை அன்புடன் தடவுவதை உணர்ந்து அதிர்ச்சி அடைந்தான் கிராலி. தட்டுகளைக் கழுவுவதை நிறுத்திவிட்டு அவன் மனைவி அவனை உற்றுப் பார்த்தாள்.

"உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? என்ன நடந்தது? ஏதாவது ஆபத்து ஏற்பட்டதா?" என்று அவள் திடுக்கிட்டுக் கேட்டாள்.

"ஏன்? ஒன்றுமில்லையே! ஏன், ஒன்றுமில்லை...நமக்கு ஏன் ஆபத்து நேர வேண்டும்? நான் அன்புடன் உன் தலையைத் தடவுவது அவ்வளவு பயங்கரமானதா?" என்று அவன் குழப்பத்துடன் பதில் சொன்னான். அவன் சிரமப் பட்டுச் சிரித்தான்.

ஜன்னலுக்கு வெளியில் கனத்த காலடிச் சத்தம் கேட்டது. வயோதிகன் உற்றுக் கேட்டான். கிராலி அந்த அறைக்குச் சென்றான். கிராலி கதவைத் திறந்ததும் உள்ளே மேஜைக்கு அருகில் ஒரு லெப்டினெனன்ட் நிற்பதை யும், அவனுக்குப் பக்கத்தில் மோட்டார் டிரைவர்களின் கமாண்டரும், உபலெப்டினென்ட்டும் நிற்பதையும் அவன் கண்டான். கதவுக்கு அருகில் சனியன் சொருகப்பட்ட துப்பாக்கியுடன் இரண்டு சிப்பாய்கள் நின்றனர்.

கிழவன் கிராலி அதிகாரிகளை வரவேற்றான்.

கிராலியும், அவன் இரண்டு புதல்வர்களுமே அந்த ஜில்லாவில் கைதேர்ந்த மேட்டார் டிரைவர்கள் என்பதை யும், அந்தப் பகுதியிலுள்ள எல்லாச் சாலைகளும் அவர் களுக்கு நன்றாகத் தெரியும் என்பதையும் மோட்டார் டிரைவர்களின் கமாண்டர் லெப்டினென்டிடம் கூறினான்.

"கண்ணை மூடிக்கொண்டு மோட்டார் ஓட்டுவார்கள் இம் மூவரும்."

அந்த லெப்டினென்ட் ஒல்லியானவன்; உயரமான வன். அவனுக்கு இருபத்து நான்கு வயசு இருக்கும். கிழ வனையும், அவனுடைய இரண்டு குமாரர்களையும் சிறிது நேரம் உற்றுப் பார்த்துவிட்டு, அவன் கிராலியைப் பார்த்து, "நீயும் டிரைவரா? எத்தனை வருடங்களாக நீ மோட்டார் ஓட்டுகிறாய்?" என்று கேட்டான்.

"முப்பத்தைந்து வருஷங்களாக."

"சுருங்கச் சொன்னால் உங்கள் குடும்பம் டிரைவர்களின் குடும்பம்" என்று புன்முறுவலுடன் கூறினன் அதிகாரி.

"ஆம். என் தொழிலை நான், என் புதல்வர்களுக்குக் கற்றுக் கொடுத்தேன். தங்களுக்குச் சோறுபோடும் தொழிலை அவர்கள் கௌரவிக்க வேண்டும் என்பது என் கருத்து."

"வாஸ்தவம்தான்" என்ருன் லெப்டினென்ட். "இதுதான் உண்மையான உணர்ச்சி! நல்லது...அப்படியானல் மரப் பட்டறைக்குச் செல்லும் வழி உனக்கும், உன் புதல்வர்கள் இருவருக்கும் நன்ருகத் தெரியுமா? எல்லா வழிகளும் உங்களுக்குத் தெரியுமா?"

கிழவனுடைய முகம் சிவந்தது. திடீரென்று கலகக்கார மிக்லோஸை அவன் நினைத்தான். புரட்சியைப் பற்றி அவன் நினைக்கவில்லை; ஆனல், தான் பெரிதும் நேசிக்கும் தன் மிக்லோஸையே அவன் நினைத்தான். கிராலி நாற்பது வருஷங்களாக உழைத்து வருகிருன். முதல் மகாயுத்தத்தில் அவன் ஆரம்பத்திலிருந்து கடைசிவரையில் போராடினன். ஐம்பத்து ஆறு வயசு அவனுக்கு. இப்போது இத்தகைய கிழவனை கிராலியிடம் மரியாதை இல்லாமல் பேசும், அந்த லெப்டினென்டின் வயசுதான் மிக்லோசுக்கு இருக்கும்.

"நல்லது! என்ன விஷயம்? நீ ஏன் பேசாமல் இருக்கிருய்?" என்று மறுபடியும் கேட்டான் அதிகாரி. பிறகு, மோட்டார் டிரைவர்களின் கமாண்டர் பக்கம் திரும்பி, "இவர்களுக்கு வழி தெரியாதுபோல் இருக்கிறதே!" என்ருன்.

"எங்களுக்குத் தெரியும்" என்று முரட்டுத்தனமாகக் கூறினன் கிராலி. பிறகு நடுங்கும் தன் கையால் உச்சந் தலையையும், நரைக்கும் மயிரையும் தடவினன்.

"என்னிடம் பேசும்பொழுது ஒழுங்காக நின்று பேச வேண்டும்" என்று கோபத்துடன் கூச்சலிட்டான் லெப்டினென்ட். "நீ ராணுவ உடையில் இல்லை என்ருலும்

நீ சிப்பாய்தான். இப்பொழுது எல்லோரும் சிப்பாய்கள் தான்...நல்லது, நீ என்ன சொல்ல வேண்டும்? ஒழுங்காக நில்!''

ஆச்சரியத்துடன் அந்தக் கர்வம் படைத்த விகார ரூபியை உற்றுப் பார்த்தான் கிராலி. உருவ அமைப்பில் கிராலியைவிடச் சிறியவன் லெப்டினென்ட். கிராலி சாந்தமாகச் சொன்னான் :

" இருபத்து ஐந்து வருஷங்களுக்கு முன் போர் முனையில் நான் இரண்டாவது முறை காயம் அடைந்த பொழுது நீ......''

" நீ பிறக்கவில்லை '' என்று சொல்ல விரும்பினான் கிராலி. ஆனால் அதைச் சொல்ல அவனுக்கு நேரம் கிடைக்கவில்லை. அதற்குள் அதிகாரி கிராலியின் சட்டையைப் பற்றி இழுத்து, அவன் முகத்தில் ஓங்கிக் குத்தினான்.

அடிபட்ட கிராலி தடுமாறினான். புதல்வர்கள் இருவரும் தந்தையை நோக்கிப் பாய்ந்தனர். கிழவன் மனைவி பயத்தால் நடுங்கினபடியே சமையல் அறைக் கதவில் சாய்ந்து விட்டாள். கதவுக்கு அருகிலிருந்த சிப்பாய்கள் தங்கள் துப்பாக்கிச் சனியன்களைக் கையில் எடுத்தனர். மோட்டார் டிரைவர்களின் கமாண்டருடைய முகம் வெளுத்தது. அறைக்கு மத்தியில் நிமிர்ந்து நிற்கும் லெப்டினென்டை அவன் உற்றுப் பார்த்தான்.

" நீ இன்னும் மரியாதையாக நடக்கக் கற்றுக் கொள்ளவில்லை என்றால், உனக்கு இப்போது கற்பிக்கிறேன் '' என்று குரைத்தான் லெப்டினென்ட். " மரியாதைக் குறைவாக மேலதிகாரிகளிடம் நடப்பது நல்லதல்ல என்பதை நீ அறிந்து கொள்.''

அவன் ஒரு சிகரெட்டைக் கொளுத்தினான். பிறகு வாலிபர்கள் பக்கம் திரும்பினான்.

" இன்னும் இரண்டு மணி நேரத்தில் நாம் புறப்படுவோம். மரப் பட்டறை வரையில் நாம் அதிகமான பளுவை ஏற்றிச் செல்ல வேண்டும். நீங்கள் இருவரும் மோட்டாரை ஓட்ட வேண்டும்.''

"நாம் எதை பற்றிப் போகவேண்டும்?" என்று வினவினன் கியூரி.

"நீ...நீ என்னிடம் கேள்வி கேட்கத் துணிகிறாயா? ஒரு விஷயம் ஞாபகம் இருக்கட்டும்..." என்று கூறிவிட்டு அவன் கையை ஓங்கினன். ஆனல் வாலிபன் முகத்தில் தோன்றின பணிவுக் குறியைக் கண்டதும் அவன் கியூரியை அடிக்கவில்லை. பதிலாக அவன், "கேள்வி கேட்பது உன் வேலையல்ல என்பது ஞாபகமிருக்கட்டும். கேள்விகளுக்குப் பதில் கூறுவதுதான் உன் வேலை." என்று சொன்னன்.

பளுவைப் பற்றிக் கியூரி கேட்டதற்குக் காரணம் என்ன? மோட்டாரின் வேகத்தை நிர்ணயிப்பதற்காகத் தான் அவன் இதைக் கேட்டான் என்பதை விளக்கினன் மோட்டார் டிரைவர்களின் கமாண்டர்.

"அப்படியா? மோட்டாரின் வேகத்தை நிர்ணயிப்பதற்காகவா? அப்படியானல் இது வேறு விஷயம்." லெப்டினென்ட் சகோதரர்களை அணுகினன். "மோட்டாரில் சிப்பாய்கள் இருப்பார்கள். நாம் மரப் பட்டறைக்குச் செல்லுகிறோம். . ஆனல் வழக்கமாகச் செல்லும் பாதையில் நாம் போகமாட்டோம். பழைய பாதை வழியாக நாம் போவோம். பார்ட்டிசான்களின் பின்னணியை அடைவதற்காக நாம் மரப் பட்டறையின் பின் பக்கம் செல்ல வேண்டும். இரண்டு மணி நேரத்தில் நாம் புறப்படவேண்டும். நாம் புறப்படும் வரையில் இந்த அறையிலிருந்து யாரும் வெளியேறக் கூடாது; இந்த அறைக்குள் யாரும் பிரவேசிக்கவும் கூடாது. வழியில் ஏதாவது நேர்ந்தால், நீங்கள் ஏதாவது விஷயம் செய்தால், இதை உங்களுக்கு அறிமுகப் படுத்துவேன்..." என்று கூறிக் கொண்டே அவன் சகோதரர்களுக்குத் தன் கைத் துப்பாக்கியை எடுத்துக் காட்டினன். பிறகு தன் கருவிழிகளால் அவர்களை விறைத்துப் பார்த்தான். "இன்னும் இரண்டு மணி நேரத்தில் நாம் புறப்பட வேண்டும்." வேறொன்றும் சொல்லாமல் அவன் அறையிலிருந்து வெளியேறினன்.

அன்னை அழுதாள். முந்தானையால் தன் கண்களையும், முகத்தையும் துடைத்துக் கொண்டாள். ஓர் உத்தரவுக்குக் கீழ்ப்படிகிறவர்களைப் போல் அவர்கள் இருவரும் தந்தைக்கு முன் நின்றனர். வெளுத்திருந்த வயோதிகன் அவர்களைப் பார்த்தான். பிறகு தன்னைப் பிறர் கவனிப்பதை விரும்பாதவனைப்போல் அவன் ஒன்றும் பேசாமல் அப்பால் சென்றான்; ஜன்னலை அடைந்து வெளியே சூழ்ந்திருந்த இருளைப் பார்த்தான். பிறகு தணிந்த குரலில், "சீக்கிரம் உடைகளை மாற்றுங்கள். இரண்டு மணி நேரம் விரைவில் பறந்து விடும்" என்று கூறினான்.

"நான் போகமாட்டேன்" என்று உறுதியுடன் கூறினான் மிஹாலி.

"போகமாட்டேன் என்று சொல்லுவதன் பொருள் என்ன? நீ உத்தரவுக்குக் கீழ்ப்படியவில்லை என்றால் உன்னை அவர்கள் சுட்டு விடுவார்கள்" என்று கியூரி மந்தமான குரலில் கூறினான்.

"அவர்கள் விரும்பினால் என்னைச் சுடட்டும். அவனை ...எதிர்ப்பதைவிட...அவர்கள் என்னைச் சுடுவதையே நான் விரும்புகிறேன்." மிக்லோஸின் பெயரைச் சொல்ல அவன் நினைத்தபொழுது சமையல் அறைக் கதவில் சாய்ந்து நின்றுகொண்டு அழும் தன் தாயைக் கண்டான். எனவே, அவன் மிக்லோஸின் பெயரைச் சொல்லவில்லை.

"உன்னை அவர்கள் சுட்டுவிடுவார்கள்" என்று கியூரி மீண்டும் கூறினான். "ஆம்! அவர்கள் சுடுவார்கள். உத்தரவு என்றால் உத்தரவுதான். அதை நீ சமாளிக்க முடியாது."

"மரப் பட்டறைக்கு நான் போகவேண்டுமா? எதிரிகளை அங்கு ஏற்றிச் செல்ல வேண்டுமா? அவர்களுக்கு விரோதமாகவா? அவனுக்கு விரோதமாகவா?" என்று கூச்சலிட்டான் மிஹாலி. பிறகு தன் தோள்களை ஒரு தரம் குலுக்கி விட்டு, இருளையே பார்த்துக் கொண்டிருந்த தன் தந்தையிடம் சென்றான். அங்கிருந்து அவன் மீண்டும், "மாட்டேன், நான் போகமாட்டேன்!" என்று

கூச்சலிட்டான். கிழவன் திரும்பிப் பார்த்தான். விவாதிக்கும் தன் பிள்ளைகளையும், மேல் மூட்டத்தையும் அவன் மாறி மாறிப் பார்த்தான். பேச்சுச் சண்டை நின்றதும் பயம் அவனை ஆட்கொண்டது. அவனது முடிவை அவர்கள் எதிர்பார்த்தார்கள். இந்தக் கஷ்டத்தில் இருந்து தப்ப, அவன் யோசனை கூற வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். கலக்கத்துடன் அவன் நடந்தான். கிராவியின் கால்கள் தள்ளாடின. அவன் முகம் வலித்தது. அவமானம் மனிதனை எப்படிச் சீர் குலைக்கிறது? அது மனத்திற்கும், எண்ணத்திற்கும் விலங்கிட்டு, கட்டுப் படுத்தி விடுகிறது!

ஜனங்களைப் பிறர் ஏன் அடிக்கிறார்கள்? இதன் பொருள் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் கைகளாலும், கம்புகளாலும், சவுக்குகளாலும் ஜனங்களை அடிக்கிறார்கள். ஜனங்களை வேதனைப்படுத்த வேண்டும் என்பதற்காக மாத்திரம் அவர்கள் அடிக்கவில்லை. அவர்களை அவமானப் படுத்த வேண்டும் என்பதற்காகவும் அவர்கள் அடிக்கிறார்கள். ஆம். தாங்கள் விரும்புவதைப் பெற, சாதாரணமாகக் கையாளப்படும் முறைகளை விட்டுப் புதிய முறைகளைக் கையாள வேண்டும் என்பது இந்தக் கர்வம் படைத்த நாய்க் குட்டிக்குத் தெரியும்போலும்!...

தன்னையே உற்று நோக்கும் தன் இரண்டு புதல்வர்களை அவன் மீண்டும் பார்த்தான். அவனிட மிருந்து அவர்கள் உபதேசத்தையும், உற்சாக மூட்டும் வார்த்தைகளையும் எதிர்பார்த்திருந்தார்கள்.

"நமக்குமுன் இருக்கும் வழிகள் இரண்டு" என்று கிராதரவாகக் கூறினான் கிராவி. "ஒன்று நாம் மோட்டாரை ஓட்ட வேண்டும். மற்றொன்று மோட்டாரை நாம் ஓட்ட மறுக்க வேண்டும்..."

"நாம் மோட்டாரை ஓட்ட மறுத்தால்..." என்று தயக்கத்துடன் ஆரம்பித்தான் கியூரி.

"இந்த வேலையைச் செய்ய நாம் மறுத்தால், இதை அவர்கள் வேறு ஒருவனிடம் ஒப்படைப்பார்கள். உத்தரவுக்குக் கீழ்ப்படிய மறுத்ததற்காக அவர்கள் நம்மைச்

கூடுவார்கள். எனினும் அவர்கள் போக வேண்டிய இடத்திற்குக் கட்டாயம் போவார்கள்."

" இன்னொரு வழி... வேறொரு வழி...இருக்கிறது " என்று மெதுவாகக் கூறினான் மிஹாலி. தங்கள் பேச்சைத் தாயார் கேட்கக் கூடாது என்பதற்காக அவன் சமையல் அறைக் கதவைத் தாழிட்டான். பிறகு அவன், " அங்கே போவதிலிருந்து அவர்களைத் தடுக்க வேண்டும்! " என்று சொன்னான்.

" இது அசாத்தியம் " என்று நடுக்கத்துடன் குறுக்கிட்டுக் கூறினான் கியூரி.

" இது அசாத்திய மல்ல! "

" முட்டாள்தனம்! அவர்களை நீ எவ்வாறு தடுப்பாய்? சிப்பாய்கள் மரப் பட்டறைக்குப் போக வேண்டும் என்றால் அவர்கள் போவார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்திவிட முடியுமென்று நீ நினைக்கிறாயா? உன்னை யாரென்று நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய்? நீ கடவுளா? "

மிஹாலி மீண்டும் தன் தந்தையைப் பார்த்தான். அவர்கள் விவாதத்தைக் கிழவன் கவனமாகக் கேட்டு வந்தான். தன் புதல்வர்களின் பிடிவாதக் குணம் அவனுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இருவர் குணங்களும் ஒன்றுக்கொன்று முற்றும் மாறுபட்டவை. இளையவன் பல ஹீனமானவன்; தன்னைவிட உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவன். மேலதிகாரி உத்தரவு பிறப்பித்திருக்கிறான் என்று கேள்விப் பட்டால்கூட அவன் நடுக்கத்துடன் குடல் தெறிக்க ஓடுவான். இது பேடித்தனமாக இல்லாமல் இருக்கலாம்; தன் மேலதிகாரிகளுக்கு மரியாதை செலுத்துவதாகவும் இருக்கலாம்; அல்லது தான் உயர்ந்த பதவியை அடைய வேண்டும் என்னும் எண்ணத்தால் உந்தித் தள்ளப்பட்டு அவன் இவ்வாறு செய்யலாம். அது யாருக்குத் தெரியும்? ஆனால் இப்போது அடிபட விருக்கும் நாய் ஊளையிடுவது போன்று அவனும் ஓலமிடுகிறான். ஏணியில் ஏறிச் செல்லும் தன்னைப் பிறர் தடுப்பதை அவன் விரும்பாததுதான்

இதற்குக் காரணமாக இருக்கலாம். தன் எதிர்காலத்தை எண்ணி அந்த வாலிபன் பயந்தான். தன் எதிர்காலத்திற்காக, அவன் தன் சொந்தச் சகோதரனைத் தூக்கு மேடைக்கு அனுப்பவும் தயாராயிருந்தான். கியூரி வாலிபன்; குழந்தைப் பருவத்தை அப்போதுதான் கடந்தவன். மரப் பட்டறைக்குச் செல்லும் வழியைப் பற்றி அவன் இன்னும் சிந்திக்கவே இல்லை. அவர்கள் மோட்டாரை ஓட்ட மறுத்தாலும் சிப்பாய்கள் அங்கே செல்வார்கள். தாங்கள் போக விரும்பும் இடத்திற்கு அவர்கள் கட்டாயம் போயே தீருவார்கள். இது உண்மைதான். அப்படியானால் இதைத் தடுக்க முடியும் என்று மிஹாலி கூறுவதன் பொருள் என்ன? இதுவரையில் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி யிருந்த கிழவன் புன்னகை புரிந்து கொண்டே மெதுவாகப் பேச ஆரம்பித்தான். "என் மகனே! மிஹாலி! அவர்களை எப்படித் தடுத்துவிடலாம் என்று நீ நினைக்கிறாய்?..."

"நம்மால் அவர்களைத் தடுக்க முடியாது" என்றான் கியூரி.

"நம்மால் தடுக்க முடியும். மரணச் சுமையைப் பிறர் ஏற்றிச் செல்லாமல் இருப்பதற்காக நாமே மோட்டாரை ஓட்டுவோம்."

"நீ சொல்லுவது எனக்கு விளங்கவில்லை. நாம் மோட்டாரை ஓட்டினாலும், பிறர் ஓட்டினாலும் பலன் ஒன்றுதான். அவர்கள் செல்லவேண்டிய இடத்திற்குச் செல்லுவார்கள்" என்று குழப்பத்துடன் கூறினான் கியூரி.

"அந்த இடத்தை அடைய அவர்கள் நாற்பது மைல் பிரயாணம் செய்ய வேண்டும். நாற்பது மைல் பிரயாணத்தில் எதுவும் நிகழலாம்" என்று மெதுவாகக் கூறிவிட்டு, அவன் தந்தையைப் பார்த்தான்.

கிழவன் நடுங்கினான். மிஹாலியின் கண்கள் உணர்ச்சியால் சுடர் விட்டு எரிவதைக் கிராலி கண்டான். அவனுக்கு எல்லாம் விளங்கி விட்டது. வழியில் மிஹாலி ஏதோ செய்வான்...ஆம்; இது ஒரு வழி...ஆனால் அவன்

என்ன செய்வான்? அதை அவன் எப்படிச் செய்வான்? கிழவன் அதரங்களில் வறண்ட புன்னகை பூத்தது. அவன் சொன்னான்: "நல்லது, உன் திட்டப்படி வேலை செய்! முதலில் குளித்து விட்டு உடை அணிந்து கொள்!"

இதைச் சொல்லிவிட்டு அவன் சமையல் அறைக்குச் சென்றான். அங்கே குளிக்கும் தொட்டியை எடுத்து அவன் நாற்காலி மீது வைத்தான். அடுப்பில் ஜலம் கொதித்துக் கொண்டிருந்தது. வாலிபர்கள் உடைகளைக் களைந்தனர். முதலில் கியூரி குளிக்க ஆரம்பித்தான். பெரிய அண்டாவை அடுப்பில் இருந்து எடுத்துக் கியூரி பக்கம் திரும்பினான் கிழவன். தாங்கமுடியாத வேதனையில் அவன் உள்ளம் துடித்தது. துன்பம் நிறைந்த தன் கண்களால் அவன் கியூரியைப் பார்த்தான். அவன் துன்பத்திற்கு வெந்நீரின் ஆவிதான் காரணமா? அவன் கண்களை மூடிக்கொண்டு இடறி விழுந்தான். கொதிக்கும் ஜலம் கியூரியின் கைகளிலும், நெஞ்சிலும் விழுந்தது!

அதைக் கண்ட தாய் கூச்சலிட்டாள்; கடும் வேதனையால் சிறுவனும் ஓலமிட்டான்.

"நான்...நான் இடறி விழுந்து விட்டேன்" என்று குழறிக் கொண்டே கூறினான் வயோதிகன். "சீக்கிரம் அவன் மீது எலுமிச்சை ரசத்தைத் தடவு."

அண்டாவை அவன் கீழே வைத்தான். பிறகு மருந்து, பஞ்சு, துணி முதலியவைகளை அவனே கொண்டு வந்தான். தன் புதல்வன் கரங்களை அவன் வருத்தத்துடன் பார்த்தான். பிறகு நடுங்கும் கைகளால் கியூரியின் தலையையும், கன்னத்தையும் தடவினான். அவ்விதம் செய்வதால் தன் புதல்வனின் மன்னிப்பைக் கிராலி கோரினானா?

"என்னை மன்னித்து விடு, கியூரி! கோபப்படாதே! புண் விரைவில் குணமாகும்."

வேதனையால் நெளிந்த கியூரியின் முகத்தில் புன்னகை பூத்தது.

"இப்பொழுது வலிக்க வில்லை; எனக்கு ஒன்றுமில்லை" என்று தடுமாறிக் கொண்டே கூறினான் கியூரி.

"எனினும், இந்த நிலையில் உன்னால் பிரயாணம் செய்ய முடியாது, மகனே" என்றான் தந்தை. பிறகு, "இதைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம். உத்தரவு என்றால் உத்தரவுதான். எனவே நான் போகிறேன்" என்று சொன்னான்.

"நீங்களா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் கியூரி. அவன் உள்ளத்தில் இருந்து வெளிப்பட்ட முனகலை அவனால் தடுக்க முடியவில்லை. வெந்நீரால் வெந்த அவன் கைகளும், நெஞ்சும் வலித்தன என்றாலும், அவன் வீரத்துடன் புன்னகை புரிந்தான். "நீங்களா? இந்தக் கஷ்டமான பிரயாணத்தை உங்களால் தாங்கமுடியாது."

"முடியாதா? சுற்றுக்குட்டி பேசுவதைப் பார்!" தந்தை மகனைப் பரிகசித்தான். விரைவில் கிராலி தன் உடைகளைக் களைந்தான். வெந்நீரில் கொஞ்சம் குளிர்ந்த ஜலத்தைக் கலந்து அவன் குளித்தான். புனிதமான ஒன்றைச் செய்யத் தயாராகும் ஒருவன் குளிப்பதைப் போல் அவன் குளித்தான். அப்போது மிஹாலி க்ஷவரம் செய்து கொண்டிருந்தான். அதன் பிறகு கிராலியும் க்ஷவரம் செய்து கொள்ள ஆரம்பித்தான்.

கியூரியை அடுத்த அறைக்கு அழைத்துச் சென்று அவனை மெத்தையில் படுக்க வைத்தாள், அன்னை.

"நாம் போகிறோம், அல்லவா?" என்று கேட்டான் மிஹாலி. "மரப் பட்டறை வரையில் நாம் போகிறோமா?"

"ஆம்; நாம் போகிறோம்" என்றான் வயோதிகன்.

தந்தையும், மகனும் ஒருவரை ஒருவர் நீண்டநேரம் பார்த்துக் கொண்டனர்.

"வேறு யாரும் மோட்டாரை ஓட்டக்கூடாது என்பதற்காக நாம் போகிறோம்" என்று கூறினான் மிஹாலி.

"ஆம்; அதற்காகத்தான் நாம் போகிறோம். நாம் போகிறோம்..." என்றான் வயோதிகன். வேதனையில் பிறந்த புன்னகை அவன் அதரங்களில் தோன்றியது. "அந்த வழி எனக்குத் தலைகீழாகத் தெரியும். அந்த வழியில் நீ அதிகமாகப் போனதில்லை. புதிய வழியில் நீ உல்லாசப்

பிரயாணம் செய்திருக்கிருய். அந்தக் காலத்தில் புதிய சாலே போட்டாகவில்லே. அந்தக் காலத்தில், பத்து வருடங்கள் நான் பழைய பாதையில் பிரயாணம் செய்திருக்கிறேன். மலேமீது ஏறுவது கஷ்டமே அல்ல. வளேவுகள் இருக்கும் இடங்கள் நன்ருகத் தெரிந்தால் கண்ணேமூடிக் கொண்டு மோட்டாரை ஓட்டலாம். உச்சியை அடைந்த பிறகு பாதை விரிகிறது. அங்கும் மோட்டாரை எளிதில் ஓட்டலாம். பாலத்தையும் கடந்து விடலாம். சுருங்கச் சொன்னல் உச்சியில்தான் கொஞ்சம் ஆபத்து. அங்கே விழிப்புடன் இரு. நான் செய்வதை நீயும் செய். என்னேப் பின்பற்று, மகனே! எல்லா விஷயங்களிலும் என்னேப் பின்பற்று!"

"இது தகாது" என்று மறுத்துக் கூறினன் மிஹாலி. "பாலத்தில்தான் ஆபத்து என்று நீங்கள் சொல்லுகிறீர்களா? மோட்டார் அதை எளிதில் கடக்கும், அல்லவா? நீங்கள் சொல்லுவது சரியாக இருக்கலாம். ஆனல் நாம் ஜாக்கிரதையாக இருந்தால் தக்க சமயத்தில் வெளியில் குதிக்கலாம். மோட்டாரை வலது பக்கம் திருப்ப வேண்டும். பிறகு வெளியில் குதிக்க வேண்டும். மோட்டாருக்குச் சிறிது தூரத்தில் குதிக்க வேண்டும். பின்னல் வரும் மோட்டார் நம்மீது ஏருமல் இருக்க வேண்டும். சுருங்கச் சொன்னல் நான் முதல் மோட்டாரை ஓட்டுவேன்."

"ஆவியை வீணக்காதே! முதல் ஸ்தானம் என்னுடையது."

"முடியாது" என்று கூவினன் மிஹாலி. "முதலில் செல்லும் மோட்டாரை நான்தான் ஓட்டுவேன்."

வயோதிகன் நிலேகுலேந்தான். அவன் மயங்கினன். பிறகு ஏதோ ஹாஸ்ய ரசம் ததும்பும் ஒன்றைக் கண்டு பிடித்தவனேப் போல் அவன் புன்னகை புரிந்தான்.

"நல்லது; முதல் மோட்டாரை நீயே ஓட்டு. இதில் எனக்கு ஆட்சேபனே இல்லே."

"அப்படியானல் உங்கள் சம்மதத்திற்கு அறிகுறியாக நாம் கைகுலுக்குவோம்" என்ருன் வாலிபன். தந்தையின் வாக்குறுதியை ஊர்ஜிதம் செய்ய அவன்

விரும்பினான். தன் தந்தையின் கையை அவன் உறுதியாகப் பற்றினான். "ஏதாவது நடந்தால் நீங்கள் வெளியில் குதியுங்கள். என்ன நடந்தாலும் மோட்டார் வலது பக்கம் தான் போகும். எனவே நீங்கள் இடது பக்கம் குதிக்க வேண்டும். என்னைக் கவனித்துக் கொண்டிருங்கள்."

வயோதிகன் ஏதோ சொல்ல விரும்பினான். ஆனால் அப்பொழுது யாரோ கதவைத் திறந்தார்கள். லெப்டினென்ட் அங்கே பிரசன்னமானான். கையில் க்ஷவரக் கத்தியுடன் கிராலி அறையில் பிரவேசித்தான். எதிர்பாராத முறையில் கியூரி காயம் அடைந்ததையும், அவன் ஸ்தானத்தைத் தான் ஏற்க இருப்பதையும் கிழவன் ராணுவ ரீதியில் கூறினான். லெப்டினென்ட் சிரித்துவிட்டு அவன் முதுகில் தட்டினான்.

" இத்தகைய உணர்ச்சியையே நான் விரும்புகிறேன். கடமை உணர்ச்சிதான் முதன்மையானது. இது வேறு விஷயம்." அவன் கிராலியுடன் கை குலுக்கினான்.

விரைவில் உடைகள் அணிந்துகொண்டு பெரின் கிராலி தன் மனைவியிடம் சென்றான். அவளைத் தழுவி அவள் முத்தமிட்டான். பயத்துடன் அவனைப் பார்த்துக் கொண்டே அவள் அழுதாள். அப்போது நடப்பவை அசாதாரணமானவை. சற்றுமுன் கிராலி அன்புடன் தன் தலையைத் தடவினதும், அந்த முத்தமும் அவளைக் கவலைக்குள்ளாக்கின. வேலைக்குச் செல்லும்பொழுது கிராலி அவளை முத்தமிடுவதில்லை. அசாதாரண அன்பைக் கண்டு அவள் பெரிதும் பயந்தாள்.

" நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று வினவினாள் அவள். "பெரி, நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?" துக்கத்தால் அவள் தொண்டை அடைத்தது.

"புறப்படுங்கள்—புறப்படுங்கள்!" என்று அவர்களை அவசரப் படுத்தினான் லெப்டினென்ட்.

வயோதிகன் தன் இளைய குமாரனிடம் சென்று அவன் தலையை அன்புடன் தடவினான்.

"உனக்கு வேதனையை உண்டு பண்ணினதற்காக என்னை மன்னித்துவிடு" என்று அவன் மெதுவாகக் கூறி

னான். "விடை கொடு, மகனே! அம்மாவைப் பார்த்துக் கொள்."

இவ்வளவு அன்பாக வயோதிகன் அதுவரையில் கியூரியிடம் பேசினதே இல்லை.

"அப்பா..." கனத்த குரலில் தந்தையை அழைத்துக் கொண்டே, பீதியுடன் அவன் குதித்து எழுந்தான்.

ஆனால், அப்போது வயோதிகன் அறையைக் கடந்து கம்பீரமாக நடந்து கொண்டிருந்தான். மிஹாலி அவனைப் பின் தொடர்ந்தான். கதவை அடைந்ததும் அவன் திரும்பிப் பார்த்தான். அன்னையிடமும், சகோதரனிடமும் அவன் மீண்டும் விடைபெற விரும்பினான். ஆனால் லெப்டினென்ட் கூச்சலிட்டான்; அவனை வெளியில் தள்ளினான்.

எங்கும் காரிருள்; நட்சத்திரமற்ற வானம்; இரண்டு பெரிய லாரிகளில் சிப்பாய்கள் இருந்தனர். இரண்டாவது லாரியின் முன் சீட்டில் ஒரு மேஜர் உட்கார்ந்திருந்தான். விரிந்த தோளும், பெரிய தலையும், முரட்டு முகமும், மங்கலான கண்களும் படைத்தவன் அந்த மேஜர். கால் மேல் கால்போட்டு அவன் உட்கார்ந்திருந்தான். அதைக் கடந்து முதல் லாரிக்குச் சென்றான் மிஹாலி. ஆனால் அவன் தாமதித்து விட்டான். அவன் தந்தை அங்கே வீற்றிருக்கக் கண்டான்.

"என் மகனே!" கிழவன் குரல் நடுங்கிற்று. "நீ என்னைப் பின்பற்று. பிறகு எல்லாம் சரியாக நடக்கும்."

அவன் தலையை வெளியில் நீட்டித் தன் புதல்வன் தோள்களைப் பற்றினான்.

"உன் இடத்திற்குப் போ!" என்று மிஹாலியிடம் கூறினான், லெப்டினென்ட்.

அந்த இடத்திலேயே ஒரு நிமிடம் அசையாது நின்றான் மிஹாலி. கிராலிக்கு அருகில் லெப்டினென்ட் உட்கார்ந்திருந்தான். அந்தப் பெரிய லாரியில் சிப்பாய்கள் துப்பாக்கிகளை மேலே உயர்த்திப் பிடித்துக்கொண்டு ஒருவர் மீது ஒருவர் நெருங்கி உட்கார்ந்திருந்தனர். முதல் லாரியில் ஐம்பது சிப்பாய்கள் இருந்தனர்; இரண்டாவது

லாரியிலும் ஐம்பது சிப்பாய்கள். ஒவ்வொரு லாரியிலும் ஒரு யந்திர பீரங்கியும் இருந்தது.

லாரிகள் நகர்ந்தன. விரைவில் அவை பெரிய சாலையை அடைந்து வாயு வேகத்தில் பறந்தன. அது நேர் வழி; ஆனால் செங்குத்தானது. சிறிது தூரம் சென்றதும் வளைவுகள் தென்பட்டன. வயோதிகன் இரண்டு கைகளாலும் சக்கரத்தைத் திருப்பினான். அடிக்கடி முன்னே குனிந்து அவன் சக்கரத்தைத் திருப்பினான். அதைப் பார்த்த லெப்டினென்ட் திருப்தியுடன் தலையை அசைத்தான்.

மோட்டார் டிரைவர் அறையில் இருந்த இரண்டு கதவுகளும் திறந்திருந்தன. குளிர்ந்த மலைக் காற்று லாரிக்குள் வீசியது. மோட்டார் யந்திரத்தின் சத்தத்தைத் தவிர வேறு எந்த விதமான சத்தமும் கேட்கவில்லை. காரிருள் சூழ்ந்த கொடிய இரவு அது. தார் போட்ட சாலையைக் கடந்து வேறு வழியில் பிரவேசிக்க வேண்டிய இடத்தில் கிழவன் மோட்டாரின் வேகத்தைக் குறைத்தான். அந்தப் பாதை மிகக் குறுகலானது. வர வர அது குறுகிக் கொண்டே வந்தது. மோட்டார் யந்திரத்தின் சத்தம் எங்கும் எதிரொலித்தது. அந்தப் பேரிரைச்சலில் அவன் அதிகாரிகளையும், சிப்பாய்களையும் மறந்தான். கடந்த கால வாழ்க்கையின் இன்பகரமான பகுதிகள் அடுக்கடுக்காக அவன் கண்முன் தோன்றின, சினிமாக் காட்சியைப் போல. அவன் மணக்கோலம் முதலில் தெரிந்தது; பிறகு அவன் மூன்று புதல்வர்களின் ஜனனம்...அவன் பதவியில் உயர்த்தப்பட்டதும் தெரிந்தது...கடந்த ஐந்து வருடங்களாக மோட்டார் டிரைவர்களின் மேஸ்திரி அவன். மோட்டார் ஓட்டிகளின் கமாண்டரோ? அவன் பேடி! அந்தக் கோமாளி லெப்டினென்ட், சிறந்த உழைப்பாளியை முகத்தில் குத்தினபொழுது அதைப் பார்த்துக் கொண்டு சும்மா நின்றான் கமாண்டர்! கிராலியைவிட உண்மையான ஊழியன் அந்தப் பகுதியிலேயே இல்லை என்பது அவனுக்குத் தெரியும். எனினும் கிராலியை அடிக்க அவன் அன்னியனை அனுமதித்தான்...அதைக் கண்டித்து ஒரு வார்த்தைகூட அவன் சொல்லவில்லை. கிராலி பெரிதும் கலங்கினான். உழைப்பாளிகளை விலங்கு

கள் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேரும் மிருகங்கள். தொழிலாளி என்றால் அவர்களுக்குக் 'கிள்ளுக் கீரை?' வெறுப்புடன் இகழப்படுவதற்கும், முகத்தில் குத்தப்படுவதற்கும்தான் தொழிலாளி இருக்கிறான் போலும்!

'மிக்லோஸ்...என் மகனே...நீ செய்வதுதான் சரி... இந்தப் பன்றிகளைப் பற்றி நீ சொன்னது முழுதும் உண்மை.' அவன் மனம் குமுறி உறுமினான். வெறுப்புடன் அவன் லெப்டினென்டைப் பார்த்தான்.

அமைதியாகச் சிகரெட்டைக் குடித்துக் கொண்டு அதிகாரி அவனுக்கு அருகில் வீற்றிருந்தான்.

பின்னே என்ன நடக்கிறது என்பதை அறிய, வயோதிகன் உற்றுக் கேட்டான். மிஹாலியின் லாரி அவனைப் பின் தொடர்ந்து வந்துகொண்டிருந்தது.

"கெட்டிக்காரன்! தன் தந்தையை விடச் சிறந்த மோட்டார் டிரைவராக அவன் விளங்குவான்" என்று பெருமையுடன் கூறினான் கிராலி. சிந்தனை நிறைந்த அவன் வதனத்தில் ஒரு துன்பப் புன்னகை பூத்தது.

"அது அவனால் முடியுமா? உண்மையில் அது அவனால் முடியுமா?"

அவன் பெருமூச்செறிந்தான். தன் புதல்வனின் திகைத்த வதனம் அவன் கண்முன் காட்சி அளித்தது. முதலில் செல்லும் லாரியை ஓட்ட அவன் விரும்பினான். முதலில் செல்லும் லாரியை...அவன் அப்போது என்ன சொன்னான்? ஏதாவது நடந்தால், லாரி பாலத்திலிருந்து நழுவினால், டிரைவர் குதிக்க வேண்டும் என்றான். பின்னால் வரும் லாரி முதலில் செல்லும் லாரியிலிருந்து குதித்தவன் மீது ஏறலாம். இதனால்தான் அவன் முதலில் செல்லும் லாரியை ஓட்ட விரும்பினான். தன்னால் அதிக தூரம் குதிக்க முடியும், இரண்டாவது லாரி தன் மீது ஏறாமல் தான் தப்ப முடியும் என்பதற்காகவே அவன் முதலில் செல்லும் லாரியை ஓட்ட விரும்பினான்...

ஆனால் இது சாத்தியமா? பாலம் மிகக் குறுகலானது...பாலத்தின் ஓரத்தை அடையக் கூடிய தூரம்

குதிக்க வேண்டும். ஆனால் இந்த முயற்சியில் தோல்வி அடைந்தால்?...மிஹாலி பின்னால் வரும் லாரியில் இருப்பது நல்லதுதான். பின்னால் வரும் லாரி அவன் மீது ஏறும் என்ற பயமில்லை.

குளிர்ந்த காற்றை அவன் சுவாசித்தான். அடுத்த நிமிடத்தில் என்ன நடக்கும் என்பதை யாரால் சொல்ல முடியும்? ஒருகால், ஒருகால் ஏதாவது சாக்குச் சொல்லி இந்த வேலையை நிராகரித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். உதாரணமாக, மிஹாலிக்கு வழிதெரியாது என்று சொல்லி இருக்கலாம். இது நொண்டிச் சாக்கு என்பதையும், வேலையைத் தட்டிக் கழிப்பதற்கு ஏதாவது காரணம் இருக்கும் என்பதையும் கமாண்டர் ஊகித்திருப்பான். ஆயினும் இந்தச் சூழ்ச்சியை அவன் பகிரங்கப் படுத்தி இருக்கமாட்டான். ஏனெனில் அவனிடம் வேலை செய்பவர்களில் அவர்கள்தான் சிறந்த உழைப்பாளிகள்...

ஆனால், இனி அதைப்பற்றி யோசிப்பதிலோ, வருந்துவதிலோ பிரயோஜனமில்லை. இந்தத் தொல்லையைத் தவிர்த்திருக்கலாம்!

ஆனால் கமாண்டரை நம்புவது முட்டாள்தனம். அவன் மோசமானவன் அல்ல என்றாலும், அவன் பேடி! அவன் அதிகாரிகளிடம் பயப்படுகிறவன். எனவே நொண்டிச் சாக்குச் சொல்லித் தப்ப அவன் அனுமதித்திருக்க மாட்டான். இதை நிர்ணயிப்பது பயம் மாத்திரமல்ல. இரண்டு மாறுபட்ட சக்திகள்—ஒரு புறம் தொழிலாளியின், அந்த ஏழைக் குடும்பத்தின் நன்மை; மற்றொரு புறம் மேல் அதிகாரியின் நன்மை—ஒன்றோடொன்று போராடுவதை அவன் உணர்வான். யுத்தத்திற்கு முன் டைரக்டராக இருந்த கமாண்டர், ஹிட்லர் கூட்டத்தைச் சேர்ந்தவன். மலையில் இருக்கும் தொழிலாளர்கள் ஹிட்லரை எதிர்க்கிறார்கள். ஆனால் கிராலியும், அவன் புதல்வர்களும் தொழிலாளர்கள் பக்கமே இழுக்கப்பட்டார்கள். இல்லை, இது நல்லதல்ல. நெருக்கடியான கட்டத்தில் கமாண்டரைப் போன்றவர்களை நம்ப முடியாது.

அவன் திடுக்கிட்டான். தன் மன வலிமையை ஒன்று திரட்டி அவன் தன்னைச் சமாளித்துக் கொண்டான். லாரி காட்டைக் கடந்து விட்டது. சாலை வளைந்து வளைந்து சென்றது. இனி அவன் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பாதி வழிக்கு மேல் அவர்கள் மேலே ஏறி விட்டார்கள். இன்னும் மூன்னூறு மீட்டர் மேலே பாலம் இருக்கிறது. அதற்கு அப்பால் செங்குத்தான பாதை. நாற்பது நிமிடத்தில் அவர்கள் பாலத்தை அடையலாம்.

பாலம் இன்னும் தகர்க்கப்படாமல் இருந்தால்.... இந்த எண்ணம் திடீரென்று கிழவன் மூளையில் உதித்தது. பார்ட்டிசான்கள் பாலத்தைத் தகர்த்திருக்கலாம். அவர்களுக்குக் கொஞ்சமாவது தீர்க்க திருஷ்டி இருந்திருந்தால் அவர்கள் இதைச் செய்திருப்பார்கள்; அநேகமாக அவர்கள் பாலத்தைத் தகர்த்திருப்பார்கள். ஏனெனில் மிக்லோஸ்தான் அவர்கள் தலைவன். இதைப் பற்றி அவன் கட்டாயம் சிந்தித்திருப்பான்...ஆம்; இது தொல்லையைத் தீர்த்துவிடும். பாலம் தகர்க்கப்பட்டிருந்தால், அவர்கள் மேலே செல்ல முடியாது. பிறகு விவகாரம் தீர்ந்துவிடும். எல்லோரும் வீட்டுக்குத் திரும்பலாம்.

திடீரென்று இன்பம் அவனை ஆட்கொண்டது. சிரிக்கவும், கூச்சலிடவும் அவன் ஆசைப் பட்டான். ஆம்; எல்லாம் ஒழுங்காக முடியும். பாலம் தகர்க்கப் பட்டால் மலையைக் கடக்கப் பல நாட்களாகும் என்பது மிக்லோஸுக்குத் தெரியும். அந்த அறுபத்து ஐந்து மைல்களைக் கடப்பது மிக மிகக் கஷ்டம். காலம் அவர்களுக்குத் துணை புரியும்...அந்த வழியில் பிரயாணம் செய்ய வேண்டுமானால் வேறு யாராவது மோட்டாரை ஓட்ட வேண்டும்.

பெரிய லாரி முன் சென்றது. பண்பட்ட பெரின் கிராலியின் கரங்கள் அதைத் திறம்பட நடத்தின. வளைவுகளை லாரி லாகவமாகக் கடந்தது. வயோதிகன் முன்னே உற்றுப் பார்த்து விட்டு அதிகாரியிடம், "ஒருகால் அவர்கள் பாலத்தைத் தகர்த்திருக்கலாம்" என்று சொன்னான்.

லெப்டினென்ட் திடுக்கிட்டான்.

"என்ன?......பாலத்தைத் தகர்த்திருப்பார்களா? யார்?"

"பார்ட்டிசான்கள் இந்த வேலையைச் செய்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்."

அதிகாரி நிமிர்ந்து உட்கார்ந்தான். அவன் முன்னே உற்றுப் பார்த்துவிட்டு வயோதிகன் தோளைப் பற்றினன்.

"நல்ல வேலை செய்தாய். இதற்கு உனக்குப் பரிசு அளிப்பேன். இதைப் பற்றி நான் யோசிக்கவே இல்லை. நல்ல வேளை! நாம் உச்சி வரையில் செல்வோம். பிறகு நிற்போம். பாலம் ஒழுங்காக இருக்கிறதா என்பதைப் பார்க்க நான் வேவுகாரர்களை முதலில் அனுப்புகிறேன்."

முன்னே பார்த்துக்கொண்டே அவன், "இதைப் பற்றி நான் யோசித்திருக்க வேண்டும்" என்று முணு முணுத்தான்.

குளிர்ந்த காற்று கிழவன் நெற்றியை ஸ்பரிசித்தது. பாதையை அவன் பார்த்தான். அவன் கண்கள் நிலை பெயர்ந்தன. நீர் வீழ்ச்சியின் சத்தம் மேலும் மேலும் சமீபத்தில் கேட்டது. இன்னும் எட்டோ அல்லது பத்தோ வளைவுகளைக் கடந்தால் அவர்கள் மலை யுச்சியில் உள்ள சமவெளியை அடைவார்கள். அங்கிருந்து அரை நிமிடத்தில் பாலத்தை அடையலாம்.

"என் மகனே! என் அருமை மிக்லோஸ்!...நீ பாலத்தைத் தகர்த்து விட்டாய் அல்லவா?" என்று அவன் தணிந்த குரலில் கூறினன். பிறகு வெடிப்பின் ஓரத்தில் இருக்கும் பாலத்தின் எரிந்த சின்னத்தைப் பார்ப்பதற்காக அவன் முன்னே குனிந்தான்.

அவன் இரண்டு தரம் சத்தமிட்டான். அது எச்சரிக்கும் சத்தம். பிறகு அவன் லாரியை மெதுவாக ஓட்டினன். அவனைப் பின்தொடரும் மிஹாலியும் வேகத்தைக் குறைத்தான். இருவரும் லாரிகளை நிறுத்தினர். லெப்டினென்ட் கீழே குதித்து ஓர் உத்தரவு கொடுத்தான். பாதையைச் சோதித்து வருவதற்கு, ஒரு சிப்பாய் அழுத்தி மிதித்துக் கொண்டே முன்னே சென்முன்.

வயோதிகன் டிரைவர் ஆசனத்திலிருந்து இறங்கி லாரிக்கு முன்னே வந்து நின்முன். பிறகு கை கால்களை

கூட்டித் தன்னை ஆச்வாசப் படுத்திக்கொண்டு, முன்னே செல்லும் சிப்பாயின் காலடிச் சத்தத்தை உற்றுக் கேட்டான். ஆனால் அப்போது எந்த விதமான சத்தமும் கேட்கவில்லை. அவன் மெதுவாக இரண்டாவது லாரிக்குச் சென்று தன் புதல்வனுக்கு முன் நின்றான். லெபடினென்ட்டும் அங்கே சென்றான்.

"இந்த நாய் சந்தேகப்படுகிறது! கடவுளே! இவன் துர்நாற்றம் வீசும் ஆத்மாவை நரகத்திற்கு அனுப்பு" என்று அவன் சபித்தான்.

அவன் அசையாது நின்றான். இருளில் பிரகாசிக்கும் தன் புதல்வன் வதனத்தை அவன் இமை கொட்டாமல் பார்த்தான். உத்தமமான புதல்வன் அவன். கிராலியின் மூன்று புதல்வர்களில் மிஹாலிதான் தந்தையைப் போன்றவன். அவன்தான் அந்தச் சிரமமான பிரயாணத்தில் தந்தையைப் பின்பற்றுகிறான்.

மெல்லிய காலடிச் சத்தம் அவர்களுக்குக் கேட்டது. வேவு பார்க்கச் சென்றவன் திரும்பி வந்துகொண்டிருந்தான். லெப்டினென்ட் அவனை அழைத்தான். பெரின் கிராலி லாரிக்கு அருகில் அசையாது நின்றான். இருபது அடிகளுக்கு அப்பால் உள்ள தூரத்திலிருந்து, "எல்லாம் ஒழுங்காக இருக்கிறது" என்றது வேவுகாரனின் கனத்த குரல். ஆம், பாலம் ஒழுங்காக இருந்தது. அங்கே யாரும் தென்படவில்லை.

இந்தப் பயல்களுக்கு அறிவு இருந்தால்! ஆனால் இவர்களுக்கு அறிவு இல்லை. இவர்களுக்குப்புத்தி இருந்தால் இருவரை இவர்கள் அங்கே நிறுத்தி இருப்பார்கள். ஏனெனில் வேவுகாரன் பாலத்தைப் பரிசோதிக்கும் வரையில் பார்ட்டிசான்கள் காத்திருக்கலாம். இரண்டு லாரிகளும் பாலத்தின் மீது போய்க்கொண்டிருக்கும் போது பாலத்தின் அடியில் வைக்கப்பட்டிருக்கும் குண்டு வெடிக்கும்... காரியம் இப்படித்தான் நடக்கவேண்டும்.

எல்லாம் ஒழுங்காக இருக்கிறது. "மோட்டாரை ஓட்டு!" என்று உத்தரவிட்டான் லெப்டினென்ட்.

"எல்லாம் ஒழுங்காக இருக்கிறதா?" என்று கேட்டான் கிழவன். அதைத் தொடர்ந்து, "எல்லாம் ஒழுங்காக இருக்கிறது என்றால் சரிதான்!" என்று சொன்னான்.

"அப்படியானால் மோட்டாரை ஓட்டு" என்று பொறுமை இழந்த லெப்டினென்ட் கட்டளையிட்டான்.

"உத்தரவு!" என்றான் கிராலி. தன் புதல்வன் ஓட்டும் லாரியின் கதவைத் திறந்தான் கிராலி. "என் மகனே! நான் உன்னிடம் சொல்ல விரும்பியது என்ன என்றால்..." அவன் ஒரு நிமிடம் நின்றான். பிறகு தன் புதல்வனுக்கு அவன் தலையை அசைத்து விட்டுப் புறப்பட்டான்.

"மிஹாலி, என் மகனே!..." என்று அவன் மெதுவாக அழைத்தான். "என்னைப் பின்பற்று!"

"ஆகட்டும்!" என்றான் புதல்வன்.

அவன் லாரியின் கதவைச் சாத்தினான். ஆனால் அதைத் தாழிடவில்லை.

பிறகு அவன் தன் லாரிக்குச் சென்றான். மெதுவாக அவன் ஆசனத்தில் அமர்ந்தான். ஆனால் அவன் இடது கால் பூட்ஸின் நுனி கதவின்மீது இருந்தது. அவன் லாரியை ஓட்டினான். அவனுக்குப் பின்னே மிஹாலியின் லாரி வந்தது. இன்னும் இரண்டு வளைவுகள்.... பிறகு நூறு அடி தூரம் நேர் பாதை...அதன் பிறகு பாலம். முதல் வளைவை அடைந்ததும் வெந்நீரால் வெந்த கியூரியின் கைகளையும், நெஞ்சையும் நினைத்தான் கிழவன். 'பாவம்! அவன் வேலைக்குச் செல்ல இன்னும் ஒரு மாசமாகும். அதனால் பாதகமில்லை...ஒரு மாசத்தில் அவனால் வேலைக்குச் செல்ல முடியும். அவன் நல்ல உழைப்பாளி. அவன் முன்னுக்கு வருவான். தன் அன்னையை அவன் திண்டாட விடமாட்டான்.' இவ்விதம் ஓடியது கிழவன் எண்ணம். இரண்டாவது வளைவில் தன் மனைவியின் முகம் அவன் கண் முன் காட்சி அளித்தது. அவள் உத்தமி. மிகச் சிறந்த சஹதர்மிணி அவள். இருபத்து ஐந்து வருடங்களாக அவர்கள் கூடி வாழ்கிறார்கள்.

சரத் காலத்தில் அவர்கள் திருமணத்தின் வெள்ளி விழா (இருபத்தைந்தாவது ஆண்டுவிழா) கொண்டாட

ஏற்பாடு ஆகியிருந்தது. வெள்ளிவிழா கொண்டாடும்போது குடும்பத்தைச் சேர்ந்த எல்லோரும் ஒன்றாக இருக்க நேராததைக் குறித்து அவர்களுக்கு அளவு கடந்த வருத்தம். மிக்லோஸ் வீட்டில் இல்லை. குடும்பமும், அந்தச் சிறிய நகரமும் அவனுக்குத் திருப்தி அளிக்கவில்லை. அவன் நாடோடி. தன் மகனைப்பற்றிக் கிராலி அதிகம் தெரிந்து கொள்ளாமல் இருந்தது வருந்தத் தக்கது தான். ஒரு தந்தை தன் புதல்வனைத் தானே தெரிந்து கொள்ளாதது விந்தைதான். அண்டை வீட்டாரை, உதாரணமாகக் கமாண்டரை, அவன் நன்றாக அறிவான். ஆனால் தன் புதல்வனைப்பற்றி—அறிவும், சிந்தனை சக்தியும் படைத்த அந்த வாலிபனைப்பற்றி—அவன் பிறர் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டியிருந்தது...ஸ்பெயினில் அவன் என்ன செய்தான்? அவன் போராடினான். மரணம் அவனை அங்கே எதிர்கொண்டு அழைத்தது. எனினும் அவன் ஸ்பெயினுக்குச் சென்றான். அவனை யாரும் நிர்ப்பந்தப் படுத்தவில்லை என்றாலும், அவன் போனான்.

அவன் போனபொழுது அவனுக்குப் பதினெட்டு வயசுகூட ஆகவில்லை. கால் நடையாக மலைகளையும், காடுகளையும் கடந்தான், மாயாவியைப்போல். ஸ்பானிய மக்கள் சுதந்திரத்திற்காகப் போராடுவதாக அவன் எழுதி இருந்தான். தான் அதுவரையில் பார்த்திராத அன்னிய நாட்டு மக்களின் சுதந்திரத்திற்காகப் போர் புரிய அவன் ஸ்பெயினுக்குச் சென்றான். அவர்கள் பாஷை கூட அவனுக்குத் தெரியாது...மிக்லோஸ் உயர்ந்தவன், உத்தமன். தன்னை அடித்ததைப்போல் அவனை அடித்துவிட்டு இந்தக் கர்வம் படைத்த துஷ்டன் லேசில் தப்ப முடியாது...வியர்வையால் நனைந்த வதனத்தை லெப்டினென்ட் பக்கம் திருப்பினான் கிராலி.

"கேள்!" என்று அவன் கனத்த குரலில் கூறினான். "நாம் யாரை எதிர்த்துப் போராடப் போகிறோம் என்பது உனக்குத் தெரியுமா?" இதைக் கேட்டதும் லெப்டினென்ட் திடுக்கிட்டான்.

"என்ன...உனக்கு என்ன வேண்டும்?" அவன் கிராலி பக்கம் சாய்ந்தான்.

"இந்தப் பார்ட்டிசான்கள் யார் என்று உன்னைக் கேட்டேன்."

"பன்றிகள்."

"பன்றிகளா?"

"ஆம். ஹங்கேரியர்களும், ருதுவேனியர்களும் மாத்திரம் அந்தப் படையில் இல்லை; அதில் அன்னியரும் இருக்கிறார்கள். 'பாரச்சூட்' மூலம் அவர்கள் மலைக்கு வந்தார்கள்."

"அன்னியர்களா? ஹங்கேரிய மக்களின் சுதந்திரத்திற்காகப் போர்புரிய அவர்கள் இங்கே வந்தார்களா? மிக்லோஸ் ஸ்பெயினுக்குச் சென்றதைப் போல்..."

"என்ன? நீ என்ன பிதற்றுகிறாய்? உனக்குப் புத்தி மாறாட்டம் ஏற்பட்டு விட்டதா?"

பெரின் கிராலி பெருமூச்செறிந்தான். அவர்கள் குறுகிய வளைவைக் கடந்தனர்.

"மிக்கி, என் மகனே! என் அருமை மிக்லோஸ், நீ பாலத்தை மறந்து விட்டாய்..." என்று அவன் கம்பீரமான குரலில் கூறினான்.

தன் முழுச் சக்தியையும் திரட்டி அவன் சக்கரத்தின் மீது சாய்ந்தான். இடது காலால் கதவைச் சிறிது திறந்தான்.

"மிஹாலி! மிஹாலி! என்னைப் பின்பற்று! நான் செய்வதை நீயும் செய்!" என்று அவன் தொண்டை கிழியக் கத்தினான். விசைக் கருவியை அவன் முடுக்கி விட்டான். லாரி பறந்தது.

மோட்டார் யந்திரத்தின் பேரிரைச்சலுக்கு மத்தியில் மிஹாலி 'ஆகட்டும்' என்று சொன்னது அவன் காதில் விழுந்தது. இன்பம் அவன் ஹிருதயத்தை நிறைத்தது. தன் புதல்வனின் பணியும் தன்மையை எண்ணி அவன் பூரித்தான். ஆபத்திலிருந்து மிக்லோஸையும், அவன் தோழர்களையும் தாங்கள், தந்தையும் மகனுமாகக் காக்கப் போவதை எண்ணி அவன் மகிழ்ந்தான்.

"மிக்லோஸ்...என் மகனே..." அதல பாதாளத்தின் ஓரத்தை அடைந்ததும் அவன் பெருமூச்செறிந்தான்.

கனமான லாரி பாலத்தை அணுகிற்று. கதவை வயோதிகன் உதைத்துத் திறந்தான். குளிர்ந்த காற்று மோட்டாருக்குள் வீசிற்று. அதிகாரி திடுக்கிடுவதைப் பெரின் கிராலி கண்டான்.

"என்ன அது?...என்ன விஷயம்?...நீ என்ன செய்கிறாய்?..." என்று பயத்தால் கூவினான் அதிகாரி.

லாரி பாலத்தை அடையுமுன் கிழவன் தன் முழுச் சக்தியையும் உபயோகித்துச் சக்கரத்தை வலது பக்கம் திருப்பினான். அதே சமயத்தில் தன் வலது காலை 'ஸ்டிரியங்'கிலிருந்து எடுத்தான். அவன் குதிக்கத் தயாரானான். ஆனால் அதற்குள் அந்தப் பெரிய லாரி அதல பாதாளத்தில் சரிந்தது. அது அந்தப் பாதாளத்தில் விழுந்து நொறுங்கியது.

அதைத் தொடர்ந்து, முதல் லாரியின் மீது மோதிக் கொண்டு இரண்டாவது லாரியும் கீழே சரிந்தது...மிஹாலி வெளியில் குதித்தான். சாலையின் ஓரத்தில் அவன் குப்புற விழுந்தான். வீழ்ச்சியின் அதிர்ச்சியால் அவன் ஒரு நிமிஷம் அசையாது படுத்திருந்தான். பிறகு அவன் எழுந்தான். அவன் மயக்கம் பூரணமாகத் தெளியவில்லை. பாதாளத்திலிருந்து நூறு குரல்கள், மரணக் கூச்சல் இட்டன. அந்தக் கூச்சல் அவனுக்குக் கேட்டது. பிறகு நிசப்தம் குடி கொண்டது.

தூங்கும் மரங்களின் நுனிகளை மெதுவாக அசைத்தது காற்று. அதல பாதாளத்திற்கு மேலே இருக்கும் பாதையில் அங்குமிங்கும் ஓடி எதையோ தேடும் வாலிபனின் சுருண்ட மயிரையும் காற்று நிமிர்த்தி விட்டது......

"அப்பா!...அப்பா!...நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?" என்று அவன் தணிந்த குரலில் கேட்டான். "அப்பா! நீங்கள் உயிருடன் இருக்கிறீர்களா?"

அவன் நிமிர்ந்து நின்றான்; பிறகு தள்ளாடிக் கொண்டே அவன் ஓடினான்; பாலத்தைக் கடந்து, மரப் பட்டறை இருக்கும் திசையில் அவன் மறைந்தான்.

✻

# மோஹினி

ப. ஸ்ரீநிவாஸன்

அருணோதயம் ஆக இன்னும் ஐந்து நாழிகை இருந்தது. விடிந்தால் செவ்வாய்க்கிழமை. தூக்கத்தில் ஆழ்ந்து கிடந்த அந்தக் கிராமத்தின் மீது இருள் கூடாரம் அடித்திருந்தது.

கிராமத்தின் வடகோடி வீட்டில் மட்டும் ஒருவன் விழித்துக் கொண்டிருந்தான். உறக்கத்திற்கும் விழிப்பிற்கும் இடையில் உள்ள மங்கலான இருள்வெளியில் அவன் வெகு காலமாகவே வாழ்ந்து வந்தான். அவன் ஒரு கலைஞன், சித்திரகாரன்.

மாடி அறையில் மாட்டியிருந்த அந்த அழகியின் படத்தின் முன் அவன் தன்னை மறந்து உட்கார்ந்திருந்தான். அவனும் எத்தனையோ அற்புதமான சித்திரங்கள் எழுதியிருந்தான்; அவைகளும் எவ்வளவோ மதிப்புப் பெற்றன. ஆனால் அவனுடைய ஓவிய சிருஷ்டிகளின் சிகரமாயிருந்தது அவ்வழகியின் படம். அந்த ஜீவ சித்திரத்தின் மீது அவன் அளவற்ற பாசம் வைத்திருந்தான். உலகின் ஒப்பற்ற அழகிகளின் ஸ்தம்பிக்கச் செய்யும் எழிலையும், அழகைப் பற்றிய தன்னுடைய கற்பனைகளையும் திரட்டி எடுத்து உயிர் கொடுத்து ஓவியப் பெண்ணாக நிறுத்தியிருந்தான். பூமியின் ஒவ்வொரு திசைக்கும் ஓடிச்சென்று, வான மண்டலத்தில் எல்லாம் பறந்து திரிந்து, எல்லை காணாத கற்பனை உலகில் காலம் போனது தெரியாமல் ஓடி அலைந்து, அவ்வழகியைக் கண்டுபிடித்துக்கொண்டு வந்திருந்தான். சித்திரத்தில் ஜீவன் பெற்று நின்ற அந்தச் சுந்தரி அவனுடைய காதலியானாள். அவளைத் தவிர வேறு ஒருத்தியையும் மணக்க அவன் சம்மதிக்கவேமாட்டான். கோடி கோடியாய்க் கொடுத்தாலும் அவளைக் கணமும் பிரிய மாட்டான். என்றாவது ஒரு நாள் அந்த மோஹினி படத்திலிருந்து சிலம்பு குலுங்கக்

குதித்து வந்து தன் கையில் இருந்த ரோஜா மாலையை அவன் கழுத்தில் இட்டு மணம் செய்து கொள்வாள் என்ற வேட்கை நிறைந்த நம்பிக்கை அவனுக்கு இருந்தது.

அந்த அழகியின் எதிரில் போட்டிருந்த கட்டிலில் இரவு பகல் இன்றி முட்டைக்கட்டிக்கொண்டு உட்கார்ந்து, தாபம் ததும்பும் கண்களுடன், முடிவற்ற இன்ப நினைவுகளாலும், ஏக்கப் பெருமூச்சுகளாலும் அவளுக்கு அர்ச்சனை செய்துவந்தான். அந்த மோஹினி அவனை அடிமையாகக் கொண்டுவிட்டாள். அவன் எல்லாவற்றையும் மறந்து அவ்வழகியின் விக்கிரகத்தின் முன் ஓயாத தவம் செய்து வந்தான்.

என்றும் போல் அன்றும் அவன் சித்திரத்தின் முன் அமர்ந்திருந்தான்.

அப்போது கிராமத்தின் தெற்கே இருந்த சுடுகாட்டுக்குள் இருந்து ஓர் உருவம் புறப்பட்டது. காட்டின் வட எல்லையில் உள்ள ஆலமரத்தடியில் அது சிறிது நின்றது. சுற்று முற்றும் திரும்பிப் பார்த்தது; உடனே கிளம்பியது. கிராமத்தை நோக்கி வேகமாய் நடக்க ஆரம்பித்தது. சுடுகாட்டிற்கும் கிராமத்திற்கும் இடையே விரிந்து கிடந்த வயல்களின் பசுமையை அமுக்கிக் கொண்டு இருள் படர்ந்திருந்தது. வயல் தவளைகள் கொண கொணத்தன. வரப்புகளின் மேல் பாய்ந்து பாய்ந்து நடந்தது அவ்வுருவம். இருளில் முட்டி மோதிக்கொண்டு கிராமத்தின் எல்லையை ஒரு நொடியில் அடைந்தது. தனது சுற்றுப் புறங்களோடு அந்தக் கிராமம் ஒரு தனி உலகமாகவே அமைந்திருந்தது. உருவம் தெற்கே திரும்பி நின்று கைகளைப் பலமாக ஆட்டிக்கொண்டு, "டாம், டூம்" என்று என்னவோ கத்தியது. பிறகு சுற்றித் திரும்பிக் கிராமத்தின் வாசலை மிதித்தது.

உருவம் தெற்குக் கடைசி வீட்டின் வாசலில் வந்து நின்றது. அது தன் விலாப் புறத்திலிருந்து ஏதோ ஒரு பொருளை வெளியே எடுத்தது.

"குடுகுடுகுடு" என்று உடுக்கை அலற ஆரம்பித்தது.

மரண அமைதியைப் பிளந்துகொண்டு எழுந்த உடுக்கையின் கணீர்ச் சப்தத்தால் கிராமமே கிடுகிடுத்தது.

அந்த நாடோடிக் குடுகுடுப்பாண்டி இரவு முழுதையும் சுடுகாட்டில் கழித்து விட்டு வந்திருந்தான். பிணம் எரிந்த சாம்பலில் புரண்டு கொடிய தேவதைகளுக்குப் பயங்கரமான சடங்குகளைச் செய்திருந்தான். சூரியோதயத்திற்கு முன் சுடுகாட்டிலிருந்து நேராக வந்து குடுகுடுப்பாண்டி குறி சொன்னால் தப்பாமல் பலிக்கும் என்பது கிராமவாசிகளுக்குத் தெரியும்.

கோடி வீட்டுக்குக் காலதேவன் அளிக்கப் போகும் சுக துக்கங்களை அவன் உச்ச ஸ்தாயியில் அறிவித்தான். உடுக்கையின் ஒலியால் அவன் வாக்குகள் உரம் பெற்றன. ஒவ்வொரு வார்த்தையையும் அவன் ஆவேசத்துடன் சொன்னான். சொற்களின் தன்மையை அவன் சிறிதும் எண்ணிப் பார்க்க வில்லை. தன்னுடைய எண்ணங்கள் சரியான உருவுடன் வெளி வந்தனவா என்பதில் அவனுக்குச் சிரத்தை யில்லை. அவனுடைய சிந்தையில் பொங்கி எழும்பிய எண்ண ஊற்றுக்கள் வார்த்தை வெள்ளமாகத் தாமாகவே பாய்ந்து வந்தன, தட தட வென்று. அந்த வீட்டைக் கவ்வப் போகும் பெருந் துயரத்தைப் பற்றி அவனுக்கு இம்மியும் கவலை யில்லை. அவ்வீட்டார் அனுபவிக்கப் போகும் பாக்கியத்தை எண்ணி அவன் பூரிக்கவும் இல்லை, பொருமவும் இல்லை.

தன்னுடைய அற்புதமான வாக்குகளுக்கு நல்ல சம்மானம் கிடைக்குமா என்பதை அவன் எதிர்பார்க்கவே யில்லை. அந்தத் தெய்விக வார்த்தைகளை, மரண இருளைத் தவிர மனித ஜீவன்களும் கேட்டார்களா என்பதில் அவனுக்கு அக்கறை இல்லை. அவன் சுயமாகப் பேசவில்லை; அவனிடம் குடி கொண்டிருந்த ஏதோ ஓர் அமானுஷ்ய சக்திதான் அவனைப் பேசச் செய்தது.

காலத்தின் தூதனாகிய அவன் கழிந்த கால நிகழ்ச்சிகளையும், நிகழ்காலத்தின் நடப்புகளையும் சரியாகச் சொன்னான். அவையெல்லாம் அவனுடைய எதிர்கால ஜோசியத்தின் உண்மையைப் பறையடித்து ருசுப்பித்தன.

விதிக்குக் கட்டியம் கூறும் அவனுடைய மொழிகளை ஒவ்வொரு வீட்டாரும் கேட்கத்தான் செய்தார்கள். ஆனால் எழுந்து வெளியில் வந்து, அவன் முகத்தில் விழித்துப் பேச அவர்களுக்குத் துணிச்சல் இல்லை. படுக்கையில் நடுங்கிக் கொண்டிருந்த அவர்கள் குடுகுடுப்பாண்டியின் வாயிலிருந்து என்ன வாக்கு வருமோ என்று பதை பதைத்தார்கள். அந்த நிலையில் அவன் முகத்தில் விழித்தாலே தங்களைப் பெருங் கேடுகள் வந்து சூழும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

ஒவ்வொரு வீட்டின் முன்னும் நின்று குறி சொல்லிக் கொண்டே குடுகுடுப்பாண்டியும் கிராமத்தின் வட கோடியை அடைந்தான். ஆயிற்று, இன்னும் ஒரு வீடு தான் பாக்கி.

அந்த வீட்டின் முன் சென்று நிமிர்ந்து நின்றான் குடுகுடுப்பாண்டி. ஒரு கோர முறுவலுடன் உடுக்கையை உருட்ட ஆரம்பித்தான். உடுக்கையின் ஒலியில் ஒரு மாற்றம் இருந்தது. மற்ற வீடுகளில் எல்லாம் உடுக்கையை இடையிடையே நிறுத்திக்கொண்டு குறி சொல்லி வந்தவன், அந்த வீட்டில் நிறுத்தாமல் தொடர்ந்து அடித்தான்.

தன் நினைவற்று இருந்த ஓவியன் முதலில் உடுக்கையின் நாதத்தைக் கவனிக்கவே இல்லை. குடுகுடுப்பாண்டியோ இன்னும் பலமாக அடித்துக் கொண்டிருந்தான். உடுக்கையின் உருட்டல் ஒரு மட்டிற்கு அவன் காதிலும் நுழைந்தது. அவ் வொலியில் ஒரு கவர்ச்சி இருந்தது.

ஓவியன் எழுந்து வந்து ஜன்னலருகில் நின்று கிழக்கே பார்த்தான், விடி வெள்ளியை.

"ஐயையோ" குடுகுடுப்பாண்டி அலறினான்.

திகைப்புடன், ஓவியன் காதைத் தீட்டிக்கொண்டு கேட்டான்.

"ஐயையோ! உன் மோஹினி, மன மோஹினி ஆத்தங்கரையிலே நிக்காளே! படித்துறையிலே உனக்காகக்

காத்து நிக்காளே! இண்ணைக்கு ராத்திரி நீ அங்கே போவாய்! அவளைப் பார்ப்பாய்!...குடு குடு குடு..."

"ஆஹா! அப்படியா!" சித்திரகாரன் பூரித்துப் போனான்.

"ஐயையோ, கொஞ்சுதானே, கொண்ணுபோடு வாளே! கொஞ்சாதே! ஐயோ, கொஞ்சாதே......குடு குடு குடு."

சித்திரகாரன் பிரமித்து விட்டான்.

உடுக்கையிலிருந்து எண்ணற்ற சூக்ஷ்ம பாசங்கள் கிளம்பி வந்து ஓவியனைச் சுற்றிப் பிணைத்தன. அவை அவனை 'விண் விண்'ணென்று சுண்டி இழுத்தன. அவன் மாடிப் படிகளை நாலந்தாகத் தாண்டிக்கொண்டு கீழே ஓடி வந்தான்.

"ஆபத்து நீங்க ஒரு வழியுண்டு! கேட்டுக்கோ, சொல்லுதேன் கேட்டுக்கோ!...குடு குடு குடு!"

சித்திரகாரன் அலறிப் புடைத்துக்கொண்டு ஓடி வந்து குடுகுடுப்பாண்டியைப் பார்த்தான். பார்த்ததும் தூக்கிவாரிப் போட்டுப் பின்னடைந்தான்.

குடு குடுப்பாண்டி கோர ரூபத்தில் நின்றான். அவனுடைய கழுத்தில் எலும்பு மாலைகளும் நூல் மாலைகளும் தொங்கின. அவன் மேலெல்லாம் சாம்பல் படர்ந்திருந்தது. அவனிடமிருந்து பிணவாடை வீசியது. கண்கள் தீப் பந்தங்கள் போல் சிவந்து இருந்தன. தலைமயிர் அலங் கோலமாய் விரிந்து கிடந்தது.

"ஏனப்பா, மோஹினி ஆற்றங் கரையிலா இருக்கிறாள்? காட்டுவாயா?"

"ஹூம்" என்று சடைந்து கொண்டு குடுகுடுப் பாண்டி உடுக்கையைத் தன் தோளில் தொங்கிய பையில் திணித்துக் கொண்டான்.

"முட்டாளே" என்னை ஏன் பார்த்தாய்? என்று கடிந்து கொண்டான் குடுகுடுப்பாண்டி.

"அதிருக்கட்டும். மோஹினியைக் காட்டுவாயா? அவள் காத்திருப்பதாகச் சொன்னாயே?"

"என்னது? அப்படிச் சொன்னேனா? ஞாபகமில்லை...பொதுவாக ராத்திரி வேளையில்தான் மோஹினி வருவாள்...அவள்தான் அழகு, அழகுதான் அவள்...... ஆசையிருந்தால் நீ அவளைப் பார்க்கலாம்...ஆனால்... மோஹினியைப் பார்த்தவன் சாதாரணமாய் உசிரோட திரும்பினதில்லை.

"ஏனோ?" சித்திரகாரன் சாவதானமாகக் கேட்டான்.

"ஏனோ? அவளைப் பார்த்ததும் அவளோட கொஞ்சுவாய். அப்போ அவள் ஒன்னை அடிச்சுப் போடுவாள்."

"ஓஹோ! சரிதான். வந்து, அவள் என் படத்திலே உள்ளவள் தானா?"

"நான் மோஹினியைப் பார்த்திருக்கேன்; அவளை ஒருத்தனாலும் வரைய முடியாது.

"என்ன, அப்படியா? அப்போ உள்ளே வந்து படத்தைப் பார்க்க மாட்டாயா? பார்த்து விட்டுச் சொல்லு."

ஓவியன் அவனை மாடிக்கு அழைத்துச்சென்று சித்திரத்தைக் காட்டினான்.

"பூ! இதைத்தானா சொன்னாய்? மோஹினியின் அழகில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட இவள் கிட்டே இல்லையே!"

"என்ன? நிஜந்தானா?" ஓவியன் அப்படியே இடிந்து போனான். சித்திர மோஹினிமீது அவனுக்கு இருந்த காதலும் இடிந்து தகர்ந்தது. இவளையும்விட அழகியாமே! புது மோஹினியின் அழகுத் தேனைப் பருக அவன் ஆசைப்பட்டான்.

"அப்போ, அந்த மோஹினியை நான் கட்டாயம் பார்க்கவேண்டும், பாராமல் தீராது."

"பார்க்கலாம். ஆனால் அவளிடம் நெருங்கினால் உன் உசிருக்கு ஆபத்து. அவள் அழகைக் கத்தியாக உபயோகிப்பவள்."

"இல்லை யில்லை! அவ்வளவு தூரம் போகமாட்டேன். நான் அவளைப் பார்த்து ஒரு படம் மாத்திரம் எழுதிக்

கொண்டு வந்து விடுகிறேன். அதை வைத்துக்கொண்டு என் வாழ்க்கையை ஓட்டிவிடுவேன். நீ கவலைப்படாதே. நான் கையில் சித்திரக் கருவிகளுடன் செல்கிறேன், மண மாலையுடன் அன்று.''

''இப்போ அப்படிச் சொல்லுகிறாய்; அவளைப் பார்த்ததும் அதுகளை எல்லாம் தூர எறிந்து விடுவாய். வேணுமானால் இருட்டும்போது நீ சுடுகாட்டிற்கு வா. உனக்குக் காவலுக்கு ஒரு தகடு தாரேன்.

''சாவு சாகாமல் வாழும் அந்த ருத்ர பூமிக்கு, வாழ்க்கையின் சிகரத்தைத் தொடப்போகும் இன்று, ஏன் என்னை அழைக்கிறாய்?''

''ஹஹ் ஹஹ் ஹா! வாலிபன், அதோடு படம் போடுபவன்; சுடலை பூமியின் பயங்கர அழகு உனக்கு எப்படித் தெரியும்? சரி, நான் வாரேன்; பீடையைப் போக்கிட்டு வாரேன்.''

''சரி, போய் வா. நான் எப்படியும் இன்று அங்கே போகத்தான் செய்வேன்,'' என்று அழுத்தமாகக் கூறினான் சித்திரகாரன்.

குடுகுடுப்பாண்டி எழுந்து சென்றான்.

சிதறிக்கிடந்த சித்திரக் கருவிகளைச் சேகரிப்பதில் அப்போது முதலே அவன் முனைந்தான்.

நன்றாக விடிந்தபின் குடுகுடுப்பாண்டி கிராமத்திற்குத் திரும்பி வந்தான். அரிசியும், காசும், துணியுமாக ஒவ்வொரு வீட்டிலும் கொடுத்தார்கள். அவைகளைச் சுமக்கமாட்டாமல் சுமந்துகொண்டு குடுகுடுப்பாண்டி கிராமத்தினிடம் விடை பெற்றுச் சென்றான்.

ஓவியன் நிலையே கொள்ளாமல் தவித்துக்கொண்டிருந்தான். மோஹினியைப் பார்ப்பது எப்போது, எப்போது என்று பறந்தான். அவனை இரும்புச் சங்கிலியால் கட்டினாலும்கூட நிற்க மாட்டான்போல் இருந்தது.

''நான் என்ன அவ்வளவு முரடனா? பெண்ணைக் கண்டதும் பேய்போலப் பாயும் காமந்தனா நான்? கையிரண்டையும் கட்டிக்கொண்டு அழகை ரசிப்பேன்...... சாவேனும்! அதனால் என்ன? மோஹினியைப் பார்த்த

பின்தானே சாவேன்? அக்கறை இல்லை" என்றெல்லாம் அவன் தனக்குள் பேசிக்கொண்டான்.

ஒவ்வொரு விநாடியும் அவனுக்கு ஒவ்வொரு வருஷமாக நீண்டது. கன சிரமப்பட்டு எப்படியோ மாலைவரை, பொழுதை வெட்டித் தள்ளிவிட்டான்.

சூரியன் மேல் கடலுக்குக் குளிக்கப் போய்விட்டான், அலுப்பைப் போக்கிக் கொள்ள.

ஓவியனும் குளித்தான். ஒருநாளும் வாருத கிராப்புத் தலையை அன்று தைலம் தீடவிச் சீவி விட்டான். சரிகைமயமான பட்டாடைகளால் தன்னை அலங்கரித்துக் கொண்டான். சித்திர சலாகையையும், வர்ணங்களையும், படுதாவையும் மறவாமல் எடுத்துக் கொண்டான். மகாராணிகளின் உருவங்களை எழுதக்கூட அவன் இவ்வளவு ஜரூராகப் போனதில்லை.

உலகின் மீது நான்கு பக்கங்களிலும் இருந்து இருள் படை யெடுத்து வந்தது.

ஒருவர் கண்ணிலும் படாமல் சித்திரகாரன் ஆற்றங் கரைக்கு விரைவாகப் போனுன். அரச மரத்தடிப் படித் துறைக்குச் சென்று சுற்றுமுற்றும் பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தான்.

"ஜாக்கிரதை! அவள் படத்தை எழுதி விட்டால் ஆயுசு பூரவும் அதை வைத்து அனுபவித்துக் கொண்டிருக்கலாம். அவளிடம் நெருங்கினல் நொடியில் இறந்து விடுவாயாம். ஹூம்! அப்படியா புத்தி கெட்டுப் போவேன்! நானும் ஒரு பிரம்மாவாச்சே!" என்றது அவன் உள்ளம்.

உட்கார்ந்து, உட்கார்ந்து, எழுந்து திசைகளைக் கண்களால் துழாவினுன் ஓவியன். காலத்தின் கிடுக்கியில் அகப்பட்டு அவன் துடிதுடித்தான்.

பறவைக் கூட்டங்கள் திசைகளின் எல்லைக்குப் பறந்து சென்று, வானத்தைத் துளைத்து உள்ளே புகுந்து மறைந்தன.

சந்திரனும் இருளை அடித்து வெருட்ட எண்ணற்ற ஒளிப் பரிவாரங்களுடன் கிளம்பிவிட்டான்.

சித்திரகாரனும் அநேக யுகங்களை அங்கே கழித்து விட்டான்.

"ஏது! இன்னும் வரவில்லையே! ஒரு வேளை குடு குடுப்பாண்டி என்னை ஏமாற்றி விட்டானா...மோஹினி! மோஹினீ இ! இங்கே இருக்கேன்; சட்டென்று வா!" என்று அவன் தொண்டை கிழியக் கத்தினன்.

பாதம் வைக்காத தங்கக் கும்பாவைப் போல் இருந்த சந்திரன் வானக் கடலில் மிதந்து கொண்டிருந்தான்.

வசந்தனின் காதலியாகிய தென்றல் உல்லாசமாய் ஓடி விளையாடினள்.

ஓவியன் தன் கருவிகளை எடுத்துக் கல்லின்மீது தயா ராக வைத்துக்கொண்டான். கண்ணுக்கு எட்டின தூரம் வரை ஆவலுடன் பார்த்தான்.

எங்கிருந்தோ வந்தது ஓர் இனிய கானம்.

ஓவியன் சுற்றுமுற்றும் கூர்ந்து கவனித்தான்.

ஆற்றின் ஓரமாக, ஜலத்தை உதைந்து கொண்டு ஒரு பெண் தளுக்காக நடந்து வந்தாள்.

ஓவியன் எழுந்து ஓடினன் அவளை வரவேற்பதற்கு.

இடை துவள நடந்து வந்த மோஹினியின் இடது முழங்கையில் ஒரு நீண்ட ரோஜா ஹாரம் தொங்கியது. ஒரு வெண்தாமரைப் பூவையும், செந்தாமரைப் பூ ஒன்றை யும் தண்டுகளோடு வலது கையில் பிடித்திருந்தாள். குளிர்ந்த குரலில் இனிமையாகப் பாடிக்கொண்டே வந்தாள்.

" ஆஹா, நாம் எவ்வளவு பாக்கியசாலி! மோஹினி யைத் தரிசிக்கும் அதிர்ஷ்டம் கிடைத்ததே!" என்ற ஆனந்தத்தில் சித்திரகாரனின் உள்ளம் துள்ளியது.

மோஹினி பாட்டை நிறுத்திவிட்டுச் சித்திரகாரன் முன் வந்து நின்றாள். அவளது சிவந்த அதரங்களில் முறு வல் நெளிந்தது. அவள் நக்ஷத்திரங்களோடு நீல வானத்தை வெட்டி எடுத்து, செவ்வானக் கரையை இணைத்து அரை யில் தழையத் தழைய உடுத்திருந்தாள். கழுத்தில் ஒரு முல்லை மாலையைப் போட்டுக் கொண்டிருந்தாள். மாதுளை

மார்புகள் விம்மின. முகத்தில் கோடிச் சந்திரப் பிரகாசம். கடைசல் பிடித்த சாதிச் சந்தனக்கட்டை போன்ற அங்கங்களில் அழகு மின்னியது.

சித்திரகாரனை ஆச்சரியமும் பயமும் மாறி மாறி மோதின. அவன் உடம்பு அனலாய்க் கொதித்தது. அவளிடம் நெருங்காமல் இருக்க வேண்டுமே என்று அவனது எளிய மனம் பதை பதைத்தது.

மோஹினி அவன் கழுத்தில் மாலையை இட்டாள். மலர்ந்த முகத்துடன் தாமரை மலர்களையும் கையில் கொடுத்தாள்.

"வாருங்கள்!" என்று தேன் ஒழுக அழைத்தாள் மோஹினி.

"மோஹினி!" என்று மூச்சையே வார்த்தையாக்கி மொழிந்தான் ஓவியன்.

"என் அன்பே! வாருங்கள், போவோம்!"

ஓவியன் பிரமை பிடித்து நின்றான்.

மோஹினி சிரித்த முகத்துடன் கண்களை ஒரு சுழற்றுச் சுழற்றினாள். அவன் அந்தச் சுழியில் அகப்பட்டுத் தத்தளித்தான்.

"இந்த உலர்ந்த மணலில் நிற்பானேன்? வாருங்கள், அந்தக் குளிர்ந்த சோலைக்குப் போவோம்."

மோஹினி அவனை இழுத்துக்கொண்டு கரை ஓரத்தில் இருந்த தோப்பிற்குள் புகுந்தாள்.

தோப்பு நிறைய மாமரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்தன. அவற்றின் கிளைகள் தாழ்ந்து பூமியைத் தொட்டுக்கொண்டு ஆடின. தோப்பின் நடுவே ஒரே ஒரு பன்னீர் மரம். கிளைகளின் இடையே நுழைந்து வந்த சந்திரிகை அந்த மரத்தடியில் ஒரு வெள்ளைத் திட்டாகப் படிந்து இருந்தது.

மோஹினியும் சித்திரகாரனும் பன்னீர் மரத்தடிக்குச் சென்றார்கள். அந்த விருக்ஷம் அவர்கள் மீது தேன் மலர்களை வர்ஷித்து வரவேற்றது. இருவரும் மணக்கும் பன்னீர்ப் பூ மெத்தை மீது அமர்ந்தார்கள்.

மோஹினியின் நடத்தையைக் கவனித்து, அவளால் தனக்கு யாதொரு ஆபத்தும் இல்லை என்பதை அவன் தெளிவாகத் தெரிந்து கொண்டான். அவள் அழகுத் தெய்வமானால், தான் அவளது பூசாரிதானே என்று அவன் எண்ணினான்.

மோஹினி அவனைத் தன் மடியில் படுக்க வைத்தாள். அவனுடைய நரை விழுந்த கிராப்புத் தலையைத் தன் மலர்க் கரத்தால் தடவியபடி அவள் இனிமையாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

அவளைப் பற்றிய அச்சத்தை அவன் அறவே உதிர்த்து விட்டான். அந்த அழகிக்கு மனிதர்களைக் கொன்று கிழிக்கும் கோரப் பல் எங்கு இருக்கிறது என்று அவன் ஆச்சரியப்பட்டான். அழகு உணர்ச்சி அற்றவர்கள் பல விதமாகவும் கதை கட்டி விட்டுவிட்டார்கள் என்ற முடிவுக்கு அவன் வந்துவிட்டான்.

"மோஹினி! நீ என்னுடன் இருந்து வாழ்வாயா?"

மோஹினி முறுவலித்தாள். "ஆஹா! உங்களைப் பிரிவேனா! அது சரி, நான் சிறிது நாட்டியம் ஆடுகிறேன், பார்க்கிறீர்களா?"

"ஓ, ஆடு, பார்ப்போம். என்ன அதிர்ஷ்டம்!" என்று சொல்லி அவன் எழுந்து உட்கார்ந்தான்.

மோஹினி பாய்ந்து எழுந்து ஆட ஆரம்பித்தாள். பொறிகளைக் கலக்கியது அவள் ஆட்டம். பளிச்சுப் பளிச் சென்று மாறிய பாவங்கள் அவனுடைய உள்ளத்தில் ஒன்றன் மேல் ஒன்றாக உணர்ச்சி அலைகளை மோத வைத்து அவனை உன்மத்தம் கொள்ளச் செய்தன.

ஆடிக்கொண்டே இருந்த மோஹினி அவனிடம் தாவி வந்து, அவனை மார்போடு அணைத்து, உதடுகளில் முத்தமிட்டாள்.

நாடி அசந்து, "மோஹினி! என் கண்ணே!" என்றான் ஓவியன்.

மோஹினி வெறியோடு அவனை மறுபடியும் முத்த மிட்டாள்.

ஓவியன் கீழே படுத்து விட்டான். "மோ...ஹி...னி! க...ண்...ணே!" என்முன் இன்னும் தணிந்த குரலில்.

நிலைத்த கண்களுடன் மூன்ருவது முறையாக முத்த மிட்டாள் மோஹினி.

இம்முறை அவனுடைய ஜீவன் பூராவையுமே உறிஞ்சி விட்டாள்!

வாடி விழுந்த பூ மாதிரி ஓவியன் கீழே கிடந்தான்.

சந்திரன் கலகலத்தான். தென்றல் நகைத்தாள். கலீர்ச் சிரிப்புடன் மோஹினியும் எழுந்து நடந்தாள்.

ஓவியன் விடாமல் அவளைப் பின்தொடர்ந்தான், ஆவி ரூபத்தில்!



# விதியின் புரட்டு

**பி. வி. சுப்பிரமணியன்**

ஜகஜ்ஜாலப் புரட்டுக்கு ரொம்ப நல்ல உதாரணம் வேண்டுமானுல் நம்முடைய உலகத்தைத் தவிர வேறு அகப்படாது என்று ஜகதீசன் முதன் முதலில் கூறிய போது எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. "எத்தனை நாட்களாக நீ அப்படி ஜகஜ்ஜாலப் புரட்டுச் செய்து வருகிருய்'' என்று கேட்க வேண்டுமென்று தோன்றிற்று. கொஞ்ச காலமாக அவனிடம் கண்ட மாறுதலையும், தாமரை இலைத் தண்ணீரைப் போன்ற நடத்தையையும் பற்றி எண்ணி நான் அதுமாதிரிச் சொல்லவில்லை. ஒரு விதத்தில் அவன் கூறியது பெரும்பாலும் உண்மைதான் என்று தெரிந்தும்கூட,நான் அவனுடன் யுத்தத்துக்கு நிற்க வேண்டியது அவசியமில்லை அல்லவா?

சென்ற ஏழெட்டு வருஷங்களுக்குள்தான் நான் கூறிய மாறுதல் ஜகதீசனிடம் ஏற்பட்டிருந்தது. அது எப்படிப்பட்டப் பயங்கர மாறுதல் என்பதையும், அதற்கு என்ன காரணம் என்பதையும், அதற்கு முன்னுல் என்னென்ன விசேஷங்கள் நடந்தேறின என்பதையும் நினைத்துப் பார்க்கும்போது, ஜகதீசன் கூறியது ரொம்பவும் சரிதான் என்பது ஊர்ஜிதமாகிறது. ஓய்வையும், அமைதியையும் நாடி அவன் கும்பகோணத்துக்கு வந்தான். ஆனுல் அவனுக்கு நிம்மதி ஏற்படவில்லை. அதற்குப் பதிலாக என்ன நேரிட்டது? கையால் ஒரு எறும்புக்குக் கூடத் துன்பம் செய்து அறியாத அவன், ஒருவனை அநியாயமாய்ப் படுகொலை செய்யும் துரதிருஷ்ட நிலை ஏற்பட்டு விட்டது.

ஒருவரும் அதை நம்பமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். என்னுல்கூட அதை முதலில் நம்ப முடியவில்லை. 'அது நிஜமாகவே நடந்தது' என்று நீங்களும் என்னைப்போல் நம்ப வேண்டுமானுல், அடியிலிருந்து எல்லாவற்றையும் சொல்லிவிட வேண்டியதுதான்.

சில வருஷங்களுக்கு முன்னால் வரையில் ஒன்றாக இருந்த குடும்பத்திலிருந்து, அவனுடைய தம்பி பட்டாபிராமன் பிரிந்து சென்றான். போனவன், சாதாரணமாக, இருப்பவர்களுக்குச் சிரமத்தைக் கொடுக்காமல் போயிருக்கலாம். அப்படிச் செய்திருந்தால், இந்தக் கதையை எழுதும் சந்தர்ப்பமே எனக்கு ஏற்பட்டிருக்காது. இதைப் படிக்கும் சிரமமும் உங்களுக்கு இல்லாமல் அந்தப் பாவி மனுஷன் தடுத்திருக்கலாம். ஆனால் அந்த உபகாரத்தை அவன் செய்யவில்லை. பட்டாபிராமன் வீட்டை விட்டுச் சென்றபோது, சுமார் மூவாயிர ரூபாய் மதிப்புள்ள வீட்டு நகைகளும் அவனுடன் வெளியேறி விட்டன என்பது மறுநாள் தெரியவந்தது.

அதனுடன் நில புலங்கள் விஷயத்தில் அவன் கை எழுத்துப் போட வேண்டுமென்று வைத்திருந்த பத்திரங்கள் பலவற்றிலும் அவன் கையெழுத்துப் போடாமலே போய்விட்டான்.

அவைகளைப்பற்றி அன்று ராத்திரி, கும்பகோணத்தில் ஜகதீசன் வெகு நேரம் வக்கீலிடம் பேசிக்கொண்டிருந்துவிட்டான். 'கேஸ்'க்கட்டுகளை எடுத்து வைத்துவிட்டு, வக்கீலும் ஜகதீசனுமாக எழுந்திருந்தபோது, மணி பன்னிரண்டு அடித்தது. அதைக் கேட்டு ஜகதீசன் கடிகாரத்தை முறைத்துப் பார்த்தான். "இந்தக் கடிகாரத்தில் பன்னிரண்டு மணி அடித்தால், உண்மையில் மணி என்ன?" என்றான்.

"அதில் பன்னிரண்டு அடித்தால் உண்மையில் பன்னிரண்டு மணி என்றுதான் அர்த்தம்" என்று வக்கீல் தெரிவித்தார். அன்று, சாயங்காலம் தன்னுடைய இருப்பிடத்திலிருந்து வக்கீலின் காரிலேயே இங்கு வந்துவிட்டதால், பணத்தைப்பற்றி ஜகதீசன் மறந்தேபோய் விட்டான். ஆகையால் வக்கீலிடமிருந்து ஒரு ரூபாய் கடன் வாங்கிக் கொண்டு அவன் வீட்டுக்குப் புறப்பட்டான். கொஞ்சதூரம் போனதும் ஒரு வண்டியைப் பேசிக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்து விடலாம் என்பது அவனுடைய உத்தேசம். ஆனால் வெகுதூரம் வந்த பிறகுகூட ஒரு

வண்டியையும் காணவில்லை. காவிரி நதிக்கரை வழியாக மெதுவாக நடக்க ஆரம்பித்தான். பட்டாபிராமன் போன பிறகு நடந்த சம்பவங்கள் ஒவ்வொன்றாக அவனுடைய மனத்தில் தோன்றின. அவன் திரும்பி வந்த பிறகுதான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று ஜகதீசன் அப்போது தீர்மானித்து இருந்தான். அவன் போன ஐந் தாறு மாசங்களுக்கெல்லாம், அவர்களுடைய தாயார் இறந்துபோனாள். பிறகு அவனுடைய வாழ்க்கையில் எத்தனையோ சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டன.

அதைப் போன்ற யோசனைகளில் மூழ்கிப்போய் நடந்துகொண்டிருந்த ஜகதீசன் திடீரென்று மறு அடி எடுத்துவைக்க முடியாமல் திகைத்துப்போய் நின்றுவிட்டான். இரண்டு கால்களிலிருந்தும் வேர் உண்டாகி அவனைப் பூமியில் பதிய வைத்தது போன்ற உணர்ச்சி ஜகதீசனுக்கு ஏற்பட்டது. அதற்குக் காரணம் அவன் எதிரில் தோன்றிய காட்சிதான். பேரிரைச்சலுடன் புது வெள்ளம் பாய்ந்து ஓடிக்கொண்டிருக்கும் விசாலமான காவிரி நதியின் பாலத்தின் மேலே ஒருவன் உட்கார்ந்து தன்னுடைய இரண்டு கால்களையும் ஒரு கயிற்றால் கட்டிக்கொண்டிருந்தான்; மறு நிமிஷம் எழுந்து நின்று அந்தப் பயங்கரமான பிரவாகத்தில் குதித்துவிட்டான்.

ஜகதீசன் வாயைத் திறந்து 'ஓ' வென்று கதறவேண்டுமெனப் பிரம்மப் பிரயத்தனம் செய்தான். அவனால் வாயைத் திறக்க முடியவில்லை. வாயிலிருந்து சப்தமும் வரவில்லை. பதறிப்போய் பாலத்தின் மறு பக்கத்துக்கு ஓடினான். காவிரியில் விழுந்தவனுடைய தேகம் ஒரு சுழலில் அகப்பட்டு மறைவதைக் கண்டான். அடுத்த நிமிஷம் சுழல் ஒதுங்கியது. ஆற்றில் விழுந்தவன் கரையோரமாக ஒதுங்கித் தலையைத் தூக்கிப் பார்த்தான். ஜகதீசனுக்குப் பெருமூச்சு வாங்கியது. "நாசமாய்ப் போச்சு, போ. நீ என்ன இங்கே வித்தை செய்துகொண்டிருக்கிறாயா?" என்று கேட்டான்.

"ஆமாம்," என்றான், எதிரிலிருந்த பேர்வழி.

"இதோபார், இங்கே. இரண்டு கால்களையும் கட்டிக் கொண்டு காவிரியில் விழுந்து வித்தை செய்யப் பழகிக் கொள்வதற்கு வேறு பெயர் என்ன தெரியுமா?"

"தெரியாது"

"அதற்குத்தான் தற்கொலை என்று பெயர். தற்கொலை செய்துகொள்ள முயற்சித்ததற்காக உன்னை இப்போது போலீஸ்க்காரரிடம் பிடித்துக் கொடுத்துவிடப் போகிறேன். என்ன சொல்லுகிறாய்?" என்றான் ஜகதீசன்.

கால் கட்டுகளுடன் எதிரில் இருந்தவன் எழுந்திருந்து அப்படியே ஜகதீசன் காலில் விழுந்து, சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தான். "நான் தற்கொலை செய்துகொள்ள வேண்டுமென்று எண்ணியது உண்மைதான். ஜப்பானியர் பர்மாவை ஆக்ரமித்துக் கொண்டபோது நான் ரங்கூனில் இருந்தேன். ஐராவதி நதியை ஒரே மூச்சில் நீந்தி வந்திருக்கிறேன். நான் ஆற்றில் விழுந்து உயிரை விடுவதற்குக் கால்களைக் கட்டிக் கொண்டதுகூடப் போதவில்லை. நீந்தத் தெரிந்திருப்பது இதைப்போன்ற சமயங்களில் எவ்வளவு கொடிய துன்பம் என்பது இப்போதுதான் எனக்குத் தெரிகிறது. என்னைப் போன்றவர்கள், இந்த முகம் தெரியாத இடங்களில் இருந்துகொண்டு, ஆகாரத்துக்குக்கூட வழியின்றி என்ன செய்கிறது? இதே வெறுப்புத்தான் என்னை இந்தக் காரியம் செய்யத் தூண்டியது. எனக்கு உதவி செய்ய வேண்டுமென்று உங்களுக்குத் தோன்றினால், என் ஜீவனோபாயத்துக்கு ஒரு வழி தேடிக் கொடுக்கலாம். இல்லாவிட்டால் என்னைப் போலீஸாரிடம் காட்டிக் கொடுக்காமல் இருப்பதே நீங்கள் செய்யக் கூடிய பெரிய உபகாரம்" என்றான்.

"கும்பகோணத்தில் பிழைப்புக்கு இப்படியும் அல்லவா ஒருவழி இருக்கிறதுபோல் இருக்கிறது. அடடா, இது தெரியாமல் இந்த வேளையில் இவனிடம் வந்து மாட்டிக்கொண்டோமே" என்று ஜகதீசன் நினைத்தான். அப்பா, 'காவிரியிலா விழப்போகிறாய்? பேஷாக விழு. நான் வேண்டுமானாலும் ஒத்தாசையாக உன்னைப் பிடித்துத் தள்ளிவிட்டுப் போகிறேன்' என்று அவனிடம் சொல்லிவிட்டு, மேலே நடந்திருக்க வேண்டுமென்று

அவனுக்கு ஆரம்பத்தில் தோன்றியது. ஆனால் அவனுடைய பேச்சும், பிறரிடம் நடந்து கொள்ளும் தோரணையும் அவன் ஒரு கௌரவமான குடும்பத்தில் பிறந்திருக்க வேண்டுமென்பதை எடுத்துக் காட்டின. ஆகையால் அவனிடம் ஜகதீசனுக்கு ஒருவித அனுதாபம் உண்டாயிற்று.

வக்கீலிடமிருந்து வாங்கிக்கொண்டு வந்த ஒரு ரூபாயைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டு, "ஒரு காலத்தில் எல்லோரும் சௌக்கியமாக இருக்கிறார்கள். திடீரென்று அவர்களுக்குக் கஷ்டம் வந்துவிடத்தான் செய்கிறது. அப்போது அவர்கள் உடனே உயிரை விட்டு விட வேண்டுமென்று ஆரம்பித்தால், உலகத்தில் மனிதப் பூண்டே அற்றுப்போயிருக்கும். எங்கள் வீட்டில் நடந்ததையே சொல்கிறேனே. நாங்கள் எல்லோரும் கோரைவேலிக்கிராமத்தில் இருந்த காலத்தில் எவ்வளவோ செல்வாக்குடன் இருந்தோம். அவைகளை எல்லாம் குலைக்க எனக்குப் பட்டாபிராமன் என்று ஒரு தம்பி வந்து சேர்ந்தான். அவனால் நேரிட்ட கடன், வீட்டிலிருந்து வெளியேறிய பணம், இவ்வளவு அவ்வளவு என்று இல்லை. கடைசியில் மூவாயிர ரூபாய் நகைகளுடன் அவன் வீட்டை விட்டு ஓடி விட்டான். அந்தக் கஷ்டங்களை எல்லாம் நினைத்தால் எங்கேயாவது விழுந்து உயிரைவிட மனசு வருகிறதா? அதுவும் இல்லை. போனவனைக் கண்டுபிடிக்கவும் முடியவில்லை!" என்று தன்னுடைய குடும்ப வரலாற்றை அவனிடம் சொல்லி முடித்தான்.

அவன் முடிக்கும் வரையில் திறந்த வாய் திறந்தபடியே கேட்டுக்கொண் டிருந்துவிட்டு, "அப்படியானால் பட்டாபியைப்பற்றி அப்புறம் உங்களுக்கு ஒன்றுமே தெரியாதா?" என்று கேட்டான் காவிரி ஆசாமி.

ஜகதீசனுக்குத் 'திகீரெ'ன்றது. அவனை ஒரு விதமாகப் பார்த்துக் கொண்டே, "தெரியாது" என்றான்.

"அப்படியானால் அதற்குப் பிறகு நான் சொல்லுகிறேன். உங்கள் பெயர்தான் ஜகதீசன்—இல்லையா?"

ஜகதீசன் பிரமித்துப் போய் நின்றுகொண் டிருக்கையிலேயே, "உங்களிடமிருந்து காணாமல் போன நகை

களில் வைர மூக்குப் பொட்டு ஒன்றும், கடியாரச் சங்கிலி ஒன்றும் உண்டோ, இல்லையோ?'' என்று குண்டைத் தூக்கிப் போடுவது போன்ற மூன்ருவது கேள்வியையும் கேட்டான் அவன்.

முன்பின் தெரியாத ஒருவன் தன்னைப் பற்றி இவ்வளவையும் சொல்வதைக் கேட்டதும், ஆச்சரியத்தால் ஜகதீசன் கால்கள் தள்ளாடின. "அட பாவி. இவ்வளவு அற்புதமாக ஜோஸ்யம் சொல்லத் தெரிந்தவனு காவிரி ஆற்றைத் தேடிக்கொண்டு வந்திருக்கிருய்? பட்டணத்துக்குப் போய் ஒரு போர்டு மாட்டினுல், மாசம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கலாமே! நீ சொல்லியதில் துளி கூடத் தப்பு என்பதே கிடையாது'' என்று ஒப்புக் கொண்டான் ஜகதீசன்.

ஆனுல், ஜகதீசன் கூறியபடி அவன் பட்டணத்துக்குப் போகவில்லை. அவனுக்கு ஜோஸ்யம் என்பது கொஞ்சங்கூடத் தெரியாது என்றும், ஆகையால் பட்டணத்துக்குப் போவதில் ஒரு பிரயோஜனமும் இல்லை என்றும் சொல்லிவிட்டு, பட்டாபிராமனைப் பற்றித் தனக்கு எப்படித் தெரியவந்தது என்பதைப் பற்றிப் பின் வருமாறு கூறினுன்—

பட்டாபிராமன் ஊரை விட்டுப் புறப்பட்ட பிறகு என்ன நடந்தது என்று உங்களுக்குத் தெரியாதல்லவா? அவன் நேராகச் சென்னைக்கு வந்து, அங்கிருந்து மறுநாளே புறப்படும் கப்பலில் ரங்கூனுக்குச் செல்லுவது என்று உத்தேசம் செய்திருந்தான். அன்றுதான் அவனும் நானும் தெய்வாதீனமாய்ச் சந்தித்தோம். இரண்டு பேருக்கும் சிநேகிதரான ஒருவர் மூலமாகப் பட்டாபிராமன் எனக்கு அறிமுகம் ஆகியிருந்தான். ரங்கூனிலும் நேராக என்னிடமே அவன் வருவதாக அறிவித்திருந்தான். ஆனுல் நான் வேலையாக இருந்த கம்பெனி முதலாளிகள் திடீரென்று மிகவும் முக்கியமான ஒரு வேலையை என்னிடம் கொடுத்து என்னைச் சென்னைக்கு அனுப்பினுர்கள்.

இதைப்பற்றி ரங்கூனிலிருந்தே பட்டணத்துக்கு எழுதி, பட்டாபிக்கு அறிவிக்க முடியவில்லையே என்று

நான் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தபோது, அவனையே நேரில் சந்தித்ததால் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தேன் என்று சொல்ல முடியாது. என் வேலையை முடித்துக் கொண்டு இரண்டு பேருமாக ரங்கூன் போகலா மென்று நான் சொன்னேன். 'சரி' என்று அவனும் ஒப்புக் கொண்டான்.

ஒரு வாரம் ஆயிற்று. என் வேலை முடிவு அடையும் சமயம், ஒரு நாள் சாயங்காலம் நான் பட்டாபியைப் பார்த்து விட்டு வரலாம் என்று போனபோது, அவன் ஹோட்டலில் இல்லை என்று தெரிந்தது. எங்கே போயி ருக்கிறான் என்று விசாரித்தனேன்.

'டைபாய்டு' ஜுரத்தினால் அவன் ஒரு வார காலமா கப் படுத்த படுக்கையாக இருந்து, பிறகு சௌக்கியமா காமல் போகவே ஜெனரல் ஆஸ்பத்திரியில் போய்ப் படுத் துக் கொண்டிருப்பதாய்த் தெரிந்துகொண்டேன்.

அப்புறம் அவனுடைய வரலாறு மிகவும் சுருக்கமா னதுதான். படாத பாடெல்லாம் பட்டு, அவனைப் பார்ப் பதற்கு உள்ளே போனேன். மகா கேவலமான ஸ்திதி யில் இருந்தாலும்கூட, அவன் என்னை அடையாளம் தெரிந்து கொண்டான். அவனுடைய கண்களிலிருந்து அலை அலையாக நீர் உதிர்ந்துகொண்டிருந்தது. "பயப்ப டாதே. உனக்கு ஒன்றும் செய்யாது. அடுத்த புதன் கிழமை யன்று வந்து உன்னைப் பார்க்கிறேன். உனக் காக இந்தக் கப்பலில் போவதைக்கூட நான் நிறுத்தி விட்டேன்" என்றேன்.

அடுத்த புதன்கிழமை உள்ளே போய்ப் பார்த்து, அவ னுடன் உறவாடும் சிரமத்தைப் பகவான் எனக்கு வைக்க வில்லை. அடுத்த தடவை என்னைப் பார்க்காமலே பட்டாபி ராமன் பரலோகப்ராப்தி அடைந்தான்.—

இப்படியாக, காவிரியில் விழுந்த பேர்வழி சொல்லி முடித்தான். நடு நடுவில் ஏதோ கேட்கவேண்டு மென்று வாயெடுத்த போதிலும், தம்பியைப் பற்றிய தகவலைத் தெரிந்து கொள்ளும் ஆசையினால் ஜகதீசன் வாயை மூடிக் கொண்டிருந்தான். கடைசியில், பட்டாபி இறந்து விட்

டான் என்றதைக் கேள்விப்பட்டதும் அப்படியே அவன் அசந்து போய்விட்டான். எதிரில் இருப்பவனுடன் நின்று பேசக்கூடச் சக்தி இல்லாமல், சட்டென்று வீட்டுக்குப் போய் படுத்துக்கொண்டால் தேவலை என்று அவனுக்குத் தோன்றிற்று. மற்றச் சமயமாக இருந்தால் அவனுக்கு வேறு ஏதாவது ஒரு வழியில் உதவி செய்யலாமென்று அவனுக்குத் தோன்றி யிருக்கலாம். ஆனால், அந்தச் சமயத்தில் அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. கையில் இருந்த ஒரு ரூபாயை எதிரில் இருந்தவனிடம் கொடுத்து விட்டு வேகமாக நடந்துபோய் வீடு சேர்ந்தான்.

கதையில் மிகவும் துக்க கரமான பாகத்துக்கு இதோ வந்துவிட்டேன். ஜகதீசன் தன்னிடம் இருந்த ஒரு ரூபாயை ரங்கூன் நண்பனிடம் கொடுத்தான் என்று சொன்னேன், அல்லவா? அப்போது திறந்திருந்த கடைகள் பலவற்றுள் ஒன்றில் போய், அவன் பசியைத் தீர்த்துக் கொண் டிருக்கலாம். அதற்குப் பதிலாக அவன் கடைக்கும், அங்கிருந்து போலீஸ் ஸ்டேஷனுக்கும், பிறகு மறுபடியும் காவிரி ஆற்றுக்கும் போய், அவமானம் அடைந்து உயிரை விட்டான் என்று கேட்கும்போது எப்படி ஆச்சரியப்படாமல் இருக்க முடியும்?

அந்தக் கொலைக்குக் காரணம் ஜகதீசன்தான் என்பதை ஆரம்பத்தில் கூறினேன். ஏனென்றால் காவிரி ஆற்றிலிருந்து காப்பாற்றியவன் கையில் அவன் கொடுத்த ரூபாய் செல்லாதது. அந்த ரூபாயினால் ரங்கூன் ஆசாமி போன இடங்களில் எல்லாம் அவமானம் அடைந்து, கடைசியில் உயிரையே விடும்படி நேரிட்டது என்றால், அவனுடைய மரணத்துக்குப் பொறுப்பாளி ஜகதீசனைத் தவிர வேறு யார்? அதை எல்லாம் நினைக்கும்போதுதான் உலகம் என்பது ஒரு பெரிய ஜகஜ்ஜாலப் புரட்டு என்று ஜகதீசன் கூறுகிறான். நமக்கும் சிற்சில சமயங்களில் அதே எண்ணம் ஏற்படுவதில் ஆச்சரியம் என்ன?

# பசி

**மாப்பஸான் ***

ராண்டல் மாசக்கணக்காக வழி நடந்தான். வேலை தேடி எங்கெங்கோ சென்று அலைந்தான். எங்காவது ஓர் இடத்தில் கிடைத்துவிட்டால், அவன் பிரயாணம் நின்று விடும். சொந்த ஊரிலே வேலை அகப்படாமல் திண்டாடிய காரணத்தால், அவன் ஊரைவிட்டுக் கிளம்ப நேரிட்டது. கிளம்பி வந்தவன் என்ன சுகத்தைக் கண்டுவிட்டான்? ஏக்கமும், ஏமாற்றமுமே.

* * *

ராண்டல் தச்சுவேலையில் கைதேர்ந்தவன். குடும்பத்தின் மூத்த பிள்ளை. இருபத்தேழு வயசு வாலிபன். எடுப்பான தேகம், நல்ல உழைப்பாளி. ஆனால், வேலை கொடுப்பார் இல்லை. அவனுக்கு இரண்டு தங்கைகள். தெருத் தெருவாய் அலைந்து கரிமூட்டைகளுக்கு விலை கூறி, பிழைப்பவர்கள். அதில் கிடைத்த கூலியோ வெகு சொற்பந்தான். சாப்பாட்டிற்குப் போதும்போதாமல் இருந்தது. இரண்டு மாசமாக எங்குமே வேலை அகப்படாத காரணத்தினால், ராண்டல் தன் தங்கைகள் தேடிவந்த வருமானத்திலே வயிறு வளர்க்கவேண்டி யிருந்தது.

வாழ்க்கையில் வெறுப்படைந்த ராண்டல் ஒரு சமயம், டவுன் ஹாலுக்குச் சென்று, தனக்கு ஏதாவது வேலை தரும்படி விண்ணப்பித்துக் கொண்டான். மேயரின் காரியதரிசி, அங்கு வேலை ஒன்றுமில்லை யென்றும், ஆனால் பக்கத்து சம்ஸ்தானத்திலே தொழிலாளிகளுக்கு நல்ல கிராக்கி இருப்பதாகவும், அங்கே சென்றால் நிச்சயமாக வேலை அகப்படுமென்றும் கூறி அனுப்பி விட்டார். ராண்டல புறப்படுவதற்கு முன், பிரமுகர்கள் பலரிடமிருந்து நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றுக்கொண்டான். மாற்று உடை ஒன்று, ஒரு ஜோடி பூட்ஸ், இவைகளை ஒரு நீல

* தமிழாக்கியவர் : எம். வி.

வர்ணக் கைக்குட்டையில் முடிந்து, அதை ஒரு தடியின் நுனியில் கட்டி, தோளில் சார்த்திக்கொண்டு புறப்பட்டு விட்டான்.

* * *

வழியில் அவன் நிற்கவில்லை, இளைப்பாறவில்லை, இரவு பகல்; மழை, வெயில் ஒன்றும் பாராமல் நடந்துகொண்டே போனான். ஆனால் மேயரின் காரியதரிசி சொன்ன ஏழைத் தொழிலாளிக்கு நிறை கூலியளிக்கும் 'பக்கத்து' சமஸ் தானம் மட்டும் பல நாள் பிரயாணத்திற்குப் பிறகும், ராண்டலின் கண்களில் தென்படவில்லை!

முதலில் ராண்டல் தனக்குப் பழக்கமான தச்சுவேலை யைத்தான் செய்யவேண்டுமென உறுதிகொண்டு, வழியில் இருந்த பல தச்சுப்பட்டறைகளில் புகுந்து வேலை கேட் டான். வேலை அதிகம் இல்லாததால் பட்டறைகளில் இருந் தவர்களையே விலக்கிவிட்டதாக அவர்கள் சொல்லியனுப்பி விட்டார்கள். பிறகு, நடந்துபோகும் சாலைகளில் கிடைக் கும் எந்தத் தொழிலையும் ஏற்றுக்கொள்வதென்று தீர்மா னித்து விட்டான். அதன்படியே குதிரைலாயக்காரனாக வும், கொல்லத்துக்காரனாகவும், விறகு பிளந்தும், கிணறு வெட்டியும், ஆடு மாடுகள் மேய்த்தும், கல் உடைத்தும், இப்படியாகக் கிடைத்த வேலையைப் பார்த்துவந்தான். கிடைத்த கூலியோ வெகு சொற்பம். வயிற்றுப்பாட்டுக் குக் கூடக் காணாமல் இருந்தது. எந்த வேலையும் நிரந்தர மாக அமையவில்லை. சில சமயங்களில்தான் இரண்டு மூன்று நாட்கள் சேர்ந்தாற்போல வேலை கிடைத்தது. வேலை கொடுப்பவர்கள், விவசாயிகள் இவர்களுடைய பேராசையை அளந்து அறிந்துவிட்டான்.

கடந்த ஒரு வாரமாக வேலை கிடைப்பதே அரிதாகி விட்டது. கையிலே காசுமில்லை. சாலையோரமாய் இருந்த வீடுகளில் சென்று கெஞ்சி, பெண்கள் இரக்கப்பட்டுக் கொடுத்த ரொட்டித் துண்டுகளைத் தின்று பசியாறினான். எங்கும் இருள் கவிழ்ந்தது. கால்கள் தள்ளாட, வயிறு பதைத்துக் குழைய ராண்டல் வெறுங்காலோடு சாலையை ஒட்டியிருந்த புல்தரையில் நடந்து சென்றான். நடந்து, நடந்து தேய்ந்துபோன பழைய பூட்ஸை வெகு நாளைக்கு

முன்னரே எறிந்துவிட்டான். பிரயாணத் துவக்கத்தில் மூட்டையில் கட்டிக் கொண்டுவந்த மற்றொரு ஜதையை அவன் இன்னும் உபயோகிக்கவில்லை. அன்று சனிக் கிழமை. முன்பனிக் காலம். வானில் விரிந்த முகிற் படலம் அப்பொழுதே மழை கொட்டிவிடுவதுபோல் பய முறுத்திக்கொண்டிருந்தது. ஞாயிறுக்கு முந்திய அன்று மாலைவேளையில் அப்பிராந்தியத்திலே ஆள் நடமாட்டமே காணப்படவில்லை. இங்கும் அங்கும் வயல்களில் வைக் கோல் போர்கள் காணப்பட்டன. சில வயல்களில் வருகிற வருஷத்திற்கு விதையும் விதைத்திருந்தது.

பசியின் வேகத்திலே மனிதன் மேல் பாய்ந்திடும் ஓநாயைப்போல், அவனுக்கும் தாங்கவொண்ணுத பசி எடுத்துவிட்டது. தாகத்தால் நா வறண்டு களைப்பு மேலிட்டு, ரத்தக் கொதிப்பினுல் முகமே கனிந்து சிவக்க, தணல்போல் ஒளிவீசிய கண்களை உருட்டிப் புரட்டி விழித் துக்கொண்டு, ஆக்ரோஷத்துடன் எட்டி அடிபோட்டுப் போய்க்கொண்டிருந்த அவன், சாப்பாட்டை நினைத்து வீட்டை நோக்கிச் செல்லும் யாரேனும் எதிரில் வந்தால், தன் பலம் முழுதையும் சேர்த்து அவனை ஒரேயடியாக அடித்து வீழ்தத எண்ணங்கொண்டு, தன் கைத்தடியை இறுகப் பிடித்துக்கொண்டு நடந்தான். பசியால் அவ்வளவு வெறிகொண்டு விட்டது அவன் மனம்.

சாலையோரங்களில் கூர்ந்து நோக்கும் அவன் கண் களுக்கு அங்கங்கே உருளைக்கிழங்குகள் குவிந்து கிடப்ப தாக ப்ரமை தட்டும். உண்மையில் அவை கிடைத்துவிட் டால், காய்ந்து சிதறியிருக்கும் சருகுகளைக்கொண்டு சாலை யோரப் பள்ளத்திலே தீமூட்டி, உருளைக் கிழங்குகளை வேகவைத்து, முதல்தரமான உணவு சாப்பிடலாமே என்று ஏங்கினுன். ஆனுல் உருளைக்கிழங்கு கிடைக்கும் காலம் அல்ல அது. முதல் நாள் சாப்பிட்டதைப்போல வயல்களில் முளைத்திருந்த 'பீட்ரூட்' கிழங்குகளைப் பறித்து எடுத்துப் பச்சையாகவே கடித்து அசைபோட்டு திருப்தி யடையவேண்டி யிருந்தது.

சென்ற இரண்டு தினங்களாக அவன் மனசு முடி வில்லா வேதனைச் சுழலில் சிக்கித் தவித்தபடியால், வாய்

விட்டு ஏதேதோ பேசிக்கொண்டே சென்றான். தன் ஜோலியிலேயே கண்ணுங்கருத்துமாக ஈடுபட்டிருந்த அவன் மனத்துள்ளே வேறு சிந்தனைகள் தலைக்காட்டவேயில்லை. ஆனால் இப்போது? மனம் அதிருப்தியின் எல்லையை அடைந்து விட்டது. வேலை நிமித்தமாக அலைந்து திரிந்து அலுத்தது கொஞ்சமா? வெட்ட வெளியிலே புல்தரையில் படுத்து, எத்தனை இரவுகளைக் கடத்தியிருப்பான்? பட்டினியால் வாடித் துடித்தது எத்தனை நாளோ? சுகபோகிகளான சிலர் அவனிடம், அந்த நாடோடியிடம், காண்பித்த அருவருப்பும், சந்தேகப் பார்வையும் அவன் நெஞ்சை அறுத்தன. வீட்டைவிட்டு ஏன் கிளம்பினேம் என்ற எண்ணம் ஒருபுறம். ஆனால் அரைக் காசு அதிகமாகச் சம்பாதிக்க இயலாத தன் இனத்தாரோடு வாழ நேரிட்ட தன் துர்ப்பாக்ய நிலை மறுபுறம்!...இவையெல்லாம் சேர்ந்து, அவன் மனக்கடலில் அலை அலையாக எழுந்து கொந்தளிக்கும். நாளுக்கு நாள், மணிக்கு மணி, ஏன் நிமிஷத்துக்கு நிமிஷம், அவனுடைய மனப்புயல் அதிகரிக்கவே, வெறிகொண்டு அவன் ஏதேதோ முணுமுணுத்துக் கொண்டு சென்றதில் வியப்பில்லை.

அந்தக் கொந்தளிப்பிலே மனிதர்களைச் சபித்தான். விதியை நொந்தான். அருள் சுரக்கும் இயற்கையன்னை கூட இரக்கமற்ற, அநீதியான தன்மைபெற்றதைச் சகியாது, உலகத்தை வெறுத்தான். மனக்கடலில் வீறிட்டு எழுந்த கோப அலைகளின் உக்கிரம் அதிகரித்து, சிந்தையைக் கலக்கி நியாய உணர்ச்சிகளைச் சிதற அடித்துவிட்டன. தொலைவில் தெரிந்த வீட்டுக்கூரை வழியாகக் கிளம்பிய புகை அங்கே சாப்பாடு தயாராகிக் கொண்டிருப்பதை அறிவித்தது. அந்த வீடுகளில் நுழைந்து அங்குள்ளவரைக் கொலை செய்துவிட்டு, அவர்கள் சமைத்து வைத்திருப்பதைச் சாப்பிட்டுவிடலாமா என்று கூட வெறி தலைக்கு ஏறி விட்டது. 'எனக்கும் வாழ உரிமையுண்டு. ஆனால் என்னைப் பட்டினி போட்டுக் கொல்லப் பார்க்கிறார்கள் எல்லோரும். வேலை கிடைத்துவிட்டால் போதும். வேறொன்றும் தேவையில்லை எனக்கு' என்று எண்ணமிட்டுச் சென்றான். கண்கள் பஞ்சடைய, கால்கள் தள்

ளாட, மனத்திலே விவரிக்கவொண்ணு வேதனை ஏற்பட்டு, அவன் தலை சுழன்றது. போதை மிஞ்சிவிட்டது. 'எல்லோரையும்போல மூச்சு உள்ளவரையில் எனக்கும் வாழ உரிமையுண்டு. காற்று எல்லோருக்கும் பொதுவான சொத்து. அதுபோல் என் உணவைப் பறித்துக்கொள்ள யாருக்கும் உரிமையில்லை' என்று உரக்கக் கூவிக் கொண்டே சென்ருன் அவன்.

திடீரென்று பனித்துளி பொழியவாரம்பித்தது. குளிர் தாங்கவில்லை. என்ன கஷ்டம்! வீடு சேருவதென்ருல், இன்னொரு மாசம் தொலைவழி நடந்தாகவேண்டுமே என்ற கவலையுடன் நடந்தான். ஆம், ராண்டல் தன் பிறந்த வீட்டுக்குத்தான் திரும்பி வந்துகொண்டிருந்தான். சொந்த ஊரில் அநேகமாக எல்லோரும் தெரிந்தவர்கள். வேலை கிடைக்கலாம். சந்தேகப் பார்வையுடன் நோக்கும் வெளியுலகத்தைவிடச் சொந்த ஊரே மேல் என்று நினைத்துத் தான் ஊருக்குத திரும்பினுன். 'அங்கே தச்சுவேலை கிடைக்காமல் போனுல், வேறு ஏதாவது கூலி வேலை செய்தாவது பிழைக்கலாம். கொல்லன் பட்டறையில் வேலை பார்க்கலாம். கல் உடைக்கலாம். குப்பை வாரலாம். வேறு எந்தத் தொழிலேனும் செய்து, பத்தணுக் கூலி கிடைத்துவிட்டால் போதும், ஏதோ உணவு சாப்பிட்டு உயிர் வாழலாம்.' இப்மாதிரியான எண்ணங்கள் அவன் மனத்திலே குவிந்து கொண்டிருந்தன.

பனிநீரைத் தடுப்பதற்காக, கைக்குட்டையை கழுத்திலே சுற்றிக்கொண்டு நடந்தான் அவன். ஆனுல் கொட்டும் பனியை மெல்லிய துணி தடுக்கமுடியுமா? அவன் மார்பிலும் முதுகுப்புறத்திலும் பனிநீர் வழிந்தோடியது. குளிரால் அவன் உடம்பு விறைத்துவிட்டது. எங்காவது தங்கி, நடுங்கும் தேகத்தை ஒடுக்கிக் கொண்டு படுத்துக் களைப்பைத் தீர்க்கலாமென்ருல், அந்தப் பரந்த உலகிலே தலை சாய்க்க அவனுக்கு ஓர் இடமில்லை.

இரவு தன் இருள் போர்வையை இழுத்துப் போர்த்துக் கொண்டது. அந்த இருளில் சற்றுத் தூரத்திலே கறுத்த உருவம் ஒன்று புல்தரையில் படுத்திருப்பதைக் கண்டான். நடுவே குறுக்கிட்ட அகண்ட குழியை விடுத்து, சாலை

வழியாகச் சுற்றிவந்து அதன் அருகில் சென்று உற்று நோக்கினான். அது ஒரு பசுமாடு என்று தெரிந்தது. அவன் அருகில் வந்தவுடன் அந்த மிருகமும் அவனை நிமிர்ந்து நோக்கிற்று. 'இப்போது மட்டும் கையிலே செம்பு இருந்தால், கொஞ்சம் பாலாவது கிடைக்குமே' என்று ஏங்கினான் ராண்டல். அந்தப் பிராணியை உற்று நோக்கினான், அதுவும் அவனைப் பார்த்தது. உடனே திடீரென்று யோசனை தோன்றவே, 'எழுந்திரு,' என்று சொல்லிக் காலால் உதைத்து மாட்டை எழுப்பினான்.

பசுமாடு மெதுவாக எழுந்து நின்றது. அதன் குடம் போலிருந்த மடி சுரப்பு விட்டுக் கொண்டிருந்தது. இதைக் கண்டதும் ஒரு யோசனை உதித்தது அவனுக்கு. பரபரப்புடன் அதன் கால்களுக்கிடையே படுத்து, திரண்டு பருத்திருந்த அதன் மடியைத் தன்னிரு கைகளாலும் பிடித்து இழுத்துப் பால்கறந்தான். பரபரப்பாகத் தன் வாய் திறந்து, பீச்சுகிற பாலை அப்படியே வாயில் ஏந்திக் குடித்தான். ஆவலோடு குடித்தான்; மூச்சு முட்டும்வரை குடித்தான். பசி சிறிது தணிந்தது. ஆனால் பனித்தூறல் தணியவில்லை. அந்த வெட்ட வெளியிலே சற்று ஒதுங்கிப் படுப்பதற்கு இடம் ஏது? அவன் உடம்பு சில்லிட்டுவிட்டது. எங்கோ தொலைவில் இருந்த வீட்டு ஜன்னல் வழியாக விளக்கு வெளிச்சம் 'மினுக் மினுக்' கென்று தெரிந்தது.

பசுமாடு திரும்பவும், அந்த இடத்திலேயே படுத்துக் கொண்டது. ராண்டலும் அதன் பக்கத்தில் அமர்ந்து, தன் வயிற்றில் பாலை வார்த்த அந்தப் பசுவைப் பரிவுடன் சொறிந்து கொடுத்தான். அதன் மூக்கினின்றும் வெளியான உஷ்ணக் காற்று அவன்மீது வீசவும், அவனுக்கு அது ஹிதமாயிருந்தது. 'நீதான் உருகிய உள்ளம் படைத்த பிராணி, சந்தேகமில்லை' என்று சொல்லிய வண்ணம், அதன் அடி வயிற்றைத் தடவிக் கொடுத்தபோது, அங்கெல்லாம் கதகதப்பாக இருப்பதை உணர்ந்தான். உடனே பளிச்சென்று ஒரு யோசனை உதிக்கவே, அதன் வயிற்றை யொட்டியே படுத்து, அன்றிரவைக் கழித்துவிடலாமென்று நினைத்தான். அவ்வளவுதான். மடிப்புறமாகத் தலை வைத்துப் படுத்து, அதன் வயிற்றை நெருக்கி ஒண்டிக்

கொண்டான். அங்கமெல்லாம் சோர்ந்து களைப்புற்றிருந்தமையால் படுத்தவுடன் நித்திரை வந்துவிட்டது.

ஆனால் பலதடவை தூக்கத்திலே விழித்துக்கொண்டு, குளிரால் மரத்துப்போன தன் உடம்பைப் புரட்டிப் பசுவோடு அணைத்துப் படுப்பான். மீண்டும் மறுபக்கம் திரும்பிப் படுப்பான். இவ்வாறு அணைத்தபடியே படுத்திருக்க, கடைசியில் நல்ல நித்திரையில் ஆழ்ந்துவிட்டான்.

பொழுது புலர்ந்தது; கோழி கூவிற்று. பனிப்படலமும் நீங்கி, வானம் பளிச்சென்றாகிவிட்டது. ராண்டல் விழித்து எழுந்தான். பசுவின் முகத்துக்கு அருகிலே மண்டியிட்டு, அதை அன்புடன் உச்சி முகர்ந்து, "என் உயிருக்குயிரான பிராணியே, உன் நன்றி மறவேன், நான் வரட்டுமா?" என்று கூறி அதனிடம் விடைபெற்றுக்கொண்டு தன் பிரயாணத்தை மீண்டும் தொடங்கினான். எதிரே எல்லையற்று விரிந்துகிடந்த நீண்ட வழியே வெகுநேரம் நடந்து நடந்து, களைப்பு மேலிட்டுப் புல்தரையில் இளைப்பாறத் தங்கினான்.

வெயிலின் வேகம் ஏறிவிட்டது. எங்கோ தொலையிலிருந்து தேவாலயமணியோசை காற்றிலே மிதந்து வந்தது. புதிய உடை தரித்த ஆண்களும் பெண்களும் கும்பல் கும்பலாக, சிலர் நடையிலும், சிலர் வண்டிகளிலும் சென்றுகொண்டிருந்தார்கள். அன்று ஞாயிற்றுக்கிழமை; அந்த விடுமுறை நாளில் தத்தம் பந்துக்களையும் சிநேகிதர்களையும் காணவும், விருந்து சப்பிடவும் அவர்கள் சென்றார்கள். அவர்களைக் கவனித்த வண்ணம் ராண்டல் உட்கார்ந்திருந்தான்.

அப்போது ஒரு சிறு ஆட்டு மந்தையை ஓட்டிக்கொண்டு ஒரு குடியானவன் வருவதைக் கண்டு எழுந்து, "ஐயா, பசியால் வாடியிருக்கும் இந்த மனிதனுக்கு ஏதாவது வேலை கொடுப்பீர்களா?" என்று பணிவுடன் தான் கேட்டான். "சாலையிலே போகும் நாடோடிக்கு வேலை என்ன வேலை; என்னிடம் ஒன்றுமில்லை" என்று கடுகடுப்பாகக் கூறிவிட்டுத் தன் மந்தையை ஓட்டிக்கொண்டு அப்பால் சென்றான் அந்தக் குடியானவன்.

ராண்டல் திரும்பிப் பழைய இடத்தில்,சாக்கடைக்குப் பக்கத்திலே வந்து உட்கார்ந்தான். பாதையிலே செல்லும் ஜனக் கும்பலில் தன் கஷ்டத்தைக் கேட்டு உதவியளிக்கும் இரக்க சித்தம் உடையவர் யாரேனும் வரமாட்டார்களா என்று உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தான். வெகு நேரமாயிற்று. கடைசியில், 'ஓவர் கோட்' டுடன், தங்கச் சங்கிலி தொங்கிமேல் புரள வந்துகொண்டிருந்த ஒரு பெரிய மனிதரைக் கண்டு, எழுந்து நின்று வணங்கினான் ராண்டல். "ஐயா, வேலைக்காக நான் அலையாத இடம் இல்லை.கையிலே காலணா காசும் இல்லை. கருணை கூர்ந்து......" என்று அவன் சொல்லி முடிப்பதற்குள், அந்தப் பெரிய மனிதர், "கிராமத்து எல்லையில் வைத்திருக்கும் அறிவிப்பை நீ படிக்கவில்லையா? எங்கள் கிராமத்தில் பிச்சைக்காரர்களுக்கு இடம் இல்லை. இங்கே பிச்சையெடுப்பதற்கும் சட்டம் அனுமதிக்காது. இந்த இடத்தை விட்டு உடனே போய்விட்டால், நீ கைதியாகாமல் தப்பலாம். நான் இந்த ஊர் மேயர்!" என்று மிடுக்காகப் பதில் அளித்தார்.

ராண்டலுக்குக் கோபம் வந்துவிட்டது. "அப்படியானால் என்னைக் கைது செய்யுங்கள். வெளியே பட்டினியால் காய்வதை விட, உள்ளே சிறையில் இருப்பது எவ்வளவோ மேலானது" என்று கூறிவிட்டுப் பழைய இடத்தில் சாக்கடை யருகிலே வந்து அமர்ந்தான்.

சற்று நேரத்திற்கு எல்லாம் இரு காவலாளிகள் அவனை நோக்கி வருவதைக் கண்டான். வெயிலினால் மினுமினுக்கும் ஹாட்டும், மஞ்சள் நிற உடுப்பும் குற்றவாளிகளைக் கலங்க வைத்து ஓடச்செய்யும். ஆனால் ராண்டல் அவர்கள் தன்னை 'அரஸ்ட்' செய்யவேண்டும் என்றே, அவர்களை அலட்சியமாய்ப் பார்த்துக் கோணல் கட்சி பேசுவதற்குத் தயாராயிருந்தான். அவர்கள் வந்த பிறகும், அவன் அசையாமல்தான் உட்கார்ந்திருந்தான்.

அந்தக் காவலாளிகள் ராண்டலைக் கவனியாமல் மிலிடரி நடை போட்டுக்கொண்டு நடந்தார்கள். அவனைத் தாண்டி அப்பால் செல்லும்போதுதான் கவனித்தார்கள். அவர்களில் ஒருவன் தன் தணல்போன்ற கண்களை

உருட்டிப் பயங்கரமாக விழித்துக்கொண்டு அவன் அருகில் வந்து, "யாரடா நீ? இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று மிரட்டினான்.

"நான் இளைப்பாறிக் கொண்டிருக்கிறேன்" என்றான் ராண்டல்.

"எங்கிருந்து வருகிறாய்?"

"நான் சுற்றிவந்த விடமெல்லாம் சொல்வதென்றால், நீண்ட நேரமாகும்."

"எங்கே செல்கிறாய்?"

"சொந்த ஊருக்கு."

"அது எங்கே இருக்கிறது?"

"அருகாமையில்தான்."

"ஊரைவிட்டு ஏன் வந்தாய்?"

"வேலை தேடப் புறப்பட்டு வந்தேன்."

இவ்வாறு வெகு அலட்சியமாகப் பதில் சொல்லி வருவதைக் கேட்டவுடன் அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. தன் நண்பனிடம், "இந்தப் போக்கிரிப் பசங்கள் எல்லோருமே இப்படித்தான். இவர்களுடைய கள்ளத்தனம் எனக்குத் தெரியாதா?" என்று பெருமை அடித்துக்கொண்டு ராண்டலைப் பார்த்து, "நீ சொல்வது உண்மையானால், ஏதாவது அத்தாட்சியுண்டா?" என்று கேட்டான்.

"உண்டு."

"எங்கே? இப்படிக் கொடு."

ராண்டல் தன் சட்டைப்பைகளில் வைத்திருந்த அழுக்குப் படிந்து, கசங்கியிருந்த நற்சாட்சிப் பத்திரங்களை எடுத்து, அவர்களிடம் நீட்டினான். அந்தக் காவலாளி அவைகளை வாங்கி எழுத்துக் கூட்டிப் படித்து முடிப்பதற்குள் போதும் என்றாகிவிட்டது! எல்லாம் ஒழுங்காயிருப்பதைக் கண்டு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது அவனுக்கு. தான் சந்தேகப்பட்டதுபோல் இல்லையே என்று வருத்தம்

ஒருபுறம். ஒருவேளை தன்னை ஏமாற்றுவதற்காகச் செய்த சூழ்ச்சியோ என்றுகூட எண்ணினான். அவனைக் கண்டால் அவன் தன்னையும்விடப் புத்திசாலி என்றுதான் தோன்றியது.

சிறிதுநேரம் ஏதோ யோசனை செய்துவிட்டு, "உன்னிடம் ஏதாவது பணம் இருக்கிறதா?" என்று கேட்டான் காவலாளி.

"இல்லை."

"கொஞ்சங்கூட இல்லையா?"

"இல்லை."

"தம்பிடிகூட இல்லையா?"

"இல்லையே!"

"அப்படியானால், வயிறு வளர்ப்பது எப்படி?"

"ஜனங்கள் கொடுப்பதை வைத்து வாழ்கிறேன்."

"பிச்சையா எடுக்கிறாய்?"

"கூடுமானால் அப்படியும் செய்வேன்" என்று தீர்மானமாகச் சொன்னான் ராண்டல்.

"ஓஹோ, ராஜபாட்டையில் நாடோடியாகத் திரிவதும், வேறு வகையில்லாமல் பிச்சையெடுப்பதையே தொழிலாகவும் கொண்ட உன்னை இதோ கைது செய்கிறேன். என்னுடன் வரவேண்டும்" என்று உறுமினான் காவலாளி.

உடனே ராண்டல் எழுந்து, "சரி, புறப்படலாமே" என்று காவலாளிகளுக்கு மத்தியில் போய் நின்றுகொண்டு, "ஏன் தாமதம்? கைது செய்து சிறையில் போடுங்களேன். அப்போதாவது இந்த மழையும் பனியும் என்மீது விழாதிருக்கும்" என்றான்.

மூவரும் புறப்பட்டார்கள். கொஞ்ச தூரத்தில் இலை உதிர்ந்து நிற்கும் மரங்களிடையே சிவப்பு ஓடுகள் வேயப்பெற்ற வீடுகள் நிரம்பிய கிராமம் காட்சியளித்தது. அவர்கள் நுழைந்த சமயம், கோவிலில் ஆராதனை தொடங்க

இருந்தது. ஆலயத்துக்கு அருகில், தெருவிலே கூடியிருந்த ஜனக்கும்பல் இரண்டாகப் பிரிந்து, இவர்களுக்கு வழி விட்டது. வேடிக்கை பார்க்கக் கூடியிருந்த குழந்தைகள் கூச்சலிட்டுப் பின்தொடர, காவலாளிகளுக்கு நடுவிலே குற்றவாளி சென்றுகொண்டிருந்தான். ஜனங்கள் ராண்டலே வெறிக்க வெறிக்கப் பார்த்தனர். அவர்களுடைய முகங்களிலே எல்லையில்லா வெறுப்புத் தோன்றியது. ராண்டல் மீது கல்லெறிந்து அவனைக் கொல்லவேண்டு மென்றும், அவன் தோலை உரிக்க வேண்டுமென்றும், காலடியிலே போட்டு நசுக்கவேண்டுமென்றும், பல்வேறு உணர்ச்சி வெள்ளம் ஜனங்களிடையே பெருகி வியாபித் திருந்தது. கைதி ஒரு கொலைகாரனு, கொள்ளைக்காரனு என்று அறிய ஒருவரோடு ஒருவர் ஏதோ 'கசமுசா' வென்று பேசிக்கொண்டார்கள். 'பெண்டு பிள்ளைகளைத் திக்கற்றுத் தவிக்கவிட்டு வந்த மோசக்காரன்' என்றார் கூட்டத்தில் ஒருவர். 'இல்லை, செல்லாத நாணயத்தைக் கொடுத்து ஏமாற்றத் துணிந்தவன்' என்றார் மற்றொருவர். 'இல்லவே இல்லை. இவன் ஒரு கொலைகாரன்தான். மாலட் என்ற பணக்காரியைக் கொன்றுவிட்டு, சென்ற ஆறுமாச காலமாய்த் தலைமறைவாகத் திரிந்த கொலை காரன் இவன்' என்று அடித்துப் பேசினார் மூன்றாவது ஆசாமி.

விசாரணைக்கூடம் வந்து அடைந்தார்கள். அங்கு அவ்வூர் மேயரும் அவருக்குப் பக்கத்திலே பள்ளிக்கூட உபாத்தியாயர் ஒருவரும் உட்கார்ந்திருந்தார்கள்.

ராண்டலைக் கண்டதும், மேயர், "வாப்பா, வா! இங் கேயே வந்துவிட்டாயா? இன்று, உன்னை முன்னமேயே கைது செய்திருக்க வேண்டும் என்று சொன்னே னல்லவா?" என்று கூறிவிட்டுக் காவலாளியிடம் திரும்பி, "காவலாளி, இவன் செய்த குற்றம் என்ன?" என்று கம்பீரமாகக் கேட்டார்.

"பிரபு, இவன் வீடு வாசல் இல்லாத, நாதியற்ற நாடோடி. கையிலே ஒரு காசும் இல்லையாம். பிச்சை எடுப்பதைத் தவிர, வேறு தொழில் தெரியாதாம். பிச்சை எடுக்கும்பொழுதுதான், இவனைக் கைதுசெய்து வந்தோம்.

ஆனல் இவனிடம் சில நற்சாட்சிப் பத்திரங்கள் இருக்கின்றன'' என்ருன் காவலாளி.

"எங்கே அவைகளைக் கொடு, பார்க்கலாம்.'' மேயர் அவைகளை வாங்கிப் படித்துப் பார்த்தார். திரும்பத் திரும்பப் படித்தார். எல்லாம் சரியாகத்தான் இருந்தது. அவைகளைக் கொண்டு குற்றத்தைச் சிருஷ்டிக்க முடியாமல், "இவனை நன்ருகச் சோதனை யிடுங்கள்'' என்று உத்தரவிட்டார். ராண்டலிடம் விசேஷமாக வேறென்றும் காணவில்லை. மேயருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பிறகு ராண்டலை நோக்கி, "சாலையில் நீ என்ன செய்துகொண்டிருந்தாய்?'' என்று கேட்டார்.

"ஏதாவது வேலை கிடைக்காதா என்று காத்திருந்தேன்.''

"சாலையில் என்ன வேலை கிடைக்கும்?''

"ரோட்டிலே நிற்காமல், காட்டிலே பதுங்கியிருந்தால் வேலை கிடைத்துவிடுமோ?'' என்று குத்தலாகக் கேட்டான் ராண்டல். மேயரின் முகம் சிவந்துவிட்டது. அவருடைய கண்கள் தீப்பிழம்புகள்போல ஒளியிட்டன. இருவரும் நாயும் பூனையும்போல வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டார்கள். வேறு வழியில்லாமல் மேயர், "உன்னை நான் விடுதலை செய்கிறேன். ஆனல் மறுபடியும் என் எதிரில் வந்தாயானல், உன்னை எளிதில் விடமாட்டேன்'' என்ருர்.

ராண்டல், "வேண்டவே வேண்டாம். தெருவில் அலைந்து திரிந்து களைத்துவிட்டேன். சிறைவாசமே எனக்கு மேலானது'' என்ருன்.

மேயர் சினங்கொண்டு, "வாயை மூடு. எதிர்த்துப் பேசாதே'' என்று இரைந்துவிட்டு, காவலாளிகளைப் பார்த்து, "இவனை அழைத்துக்கொண்டு போய்க் கிராமத்து எல்லைப்புறத்திலே விட்டு வாருங்கள். எங்காவது போய்த் தொலையட்டும்'' என்று உத்தரவிட்டார்.

"அப்படியானல், பசியால் குழைந்து குமுறும் என் வயிற்றுக்கு ஏதாவது கொடுத்து அனுப்புங்கள்'' என்று இறைஞ்சினன் ராண்டல். மேயருக்குப் பிரமாதமாகக்

கோபம் வந்துவிட்டது. "ஆமாம், பிரபுவுக்கு விருந்து வைத்து அனுப்பவேண்டியதுதான்" என்று நையாண்டி செய்தார்.

ராண்டலுக்கும் கோபம் எல்லை கடந்துவிட்டது. "பசியால் துடிக்கும் என்னை வெறுங்கையோடு வெருட்டினால், ஏதாவது பெரிய குற்றம் இழைத்தே தீருவேன். திமிராகப் பேசும் உங்களுக்கும் கட்டாயம் ஆபத்துத்தான்" என்று உரக்கக் கத்தினான்.

இதைக் கேட்டவுடன் மேயர் எழுந்து, "இந்தப் பயலை இழுத்துச் செல்லுங்கள். இல்லாவிட்டால் எனக்கு வரும் கோபத்தில் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது" என்று பதறினார்.

உடனே இரு காவலாளிகளும் ராண்டலைப் பிடித்து இழுத்துச் சென்றார்கள். அவனும் முரண்டு பண்ணாமல், கூடவே சென்றான். கிராமத்தைவிட்டு எல்லைப்புறத்துக்கு வந்தவுடன், "இப்படியே எங்காவது ஓடிப்போ. மறுபடியும் எங்கள் கண்ணில் தென்பட்டால், உன் பாடு அதோ கதிதான், ஜாக்கிரதை!" என்று பயமுறுத்தி வெருட்டிவிட்டுத் திரும்பினார்கள்.

உணர்ச்சி மேலீட்டினால், ராண்டலுக்குத் தான் எங்கு செல்கிறான் என்ன செய்கிறான் என்று தெரியவில்லை. சிறிது தூரம் சென்றவுடன் வழியிலே ஒரு சின்ன வீடு. அங்கிருந்து கிளம்பிய தாளித வாசனை அவன் மூக்கைத் துளைத்தது. அது அவனுடைய பசியை அதிகமாகக் கிளறிவிட்டது. சித்தம் கலங்கிப் பித்தம் பிடித்து, ஒரு மிருகமாக மாறிவிட்டான் ராண்டல். 'இன்று இந்த வீட்டிலுள்ளவர்கள் ஏதாவது எனக்குக் கொடுக்கத்தான் வேண்டும். இல்லாது போனால், வெட்டுப்பழிதான்' என்று உறுமிக்கொண்டே கதவை இடித்தான். பதில் இல்லை. தன் கைத்தடியால் படபடவென்று பலமாகத் தட்டிக்கொண்டே, "யாரையா உள்ளே? கதவைத் திறவுங்கள்" என்று உரத்துக் கூவினான். அப்படியும் பதில் இல்லை. கவனித்துப் பார்த்ததில் கதவு வெளியே பூட்டப்பட்டிருந்தது!

ஜன்னல் பக்கம் சென்று, அதன் கதவுகளைப் பிடித்து இழுத்தான். அவை உடனே திறந்துகொண்டன. வீட்டினுள்ளிருந்து வெளிவந்த காற்றிலே இறைச்சியின் மணமும், கறிவகைகளின் நறுமணமும் 'கமகம'வென்றிருந்தன. ஜன்னலில் கம்பிகள் இல்லாததால், ஒரே துள்ளலில் உள்ளே குதித்துவிட்டான். மேஜையின் மீது சலவைத் துணி விரிக்கப்பட்டிருந்தது. அடுப்படியிலே மணங்கமழும் ஸூப், பக்குவமான இறைச்சி, பக்கத்திலே மது நிறைந்த பாட்டில்கள், அலமாரியில் புதிய ரொட்டிகள் இவையெல்லாம் ஞாயிறு விருந்துக்காக அழகாக எடுத்து வைக்கப்பட்டிருந்தன. தேவாலயப் பிரார்த்தனைகளை முடித்துக் கொண்டு வருபவர்களுக்காக இந்த விருந்து காத்திருந்தது.

ராண்டல் வேகமாகப் பாய்ந்து ஒரு ரொட்டியைக் கையில் எடுத்து, மனிதனின் குரல்வளையை நெரிப்பது போன்ற வெறியிலே, பெரிய பெரிய துண்டுகளாகப் பிய்த்து எடுத்து, பக்கத்திலிருந்த ஸூப்பிலும், காப்பியிலும் மாறி மாறி முக்கியெடுத்து, வாயில் போட்டு மென்று விழுங்கினான். அடுப்பிலே வெந்துகொண்டிருந்த இறைச்சியின் மணம் அவனை ஆகர்ஷித்தது. அங்கே ஓடிப்போய்ப் பார்த்தான். அருகிலிருந்த அகப்பையால் நாலைந்து அகப்பை அள்ளித் தட்டிலே போட்டுக்கொண்டு மேஜையில் வைத்து, ஆசை தீரத் தின்றான். பசியின் உத்வேகம் சற்று அடங்கியவுடன், சாவதானமாகச் சாப்பிட ஆரம்பித்தான். முகம் களிவெறி கொண்டது. அங்கிருந்த பதார்த்தங்கள் ஒவ்வொன்றையும் அவன் ருசி பார்த்துவிட்டான். அடுத்தபடியாக மேஜையின் மீதிருந்த புட்டிகள் கண்ணில் பட்டன. ஒன்றைத் திறந்து, கண்ணாடித் 'தம்பள'ரில் ஊற்றிப் பருகினான். அது பிராந்தி. வயிற்றுக்குள் சென்றதும், கணகணவென்றிருந்தது. மறுபடியும் ஒரு தம்பளர் நிறைய ஊற்றிப் பருகினான். அதே சமயம் பிரார்த்தனை முடிந்து, தேவாலய மணியோசை கேட்டது. ராண்டல் திடுக்கிட்டான். 'ஆபத்து நெருங்கிவிட்டது, ஜாக்கிரதை. தப்பியோட வழி தேடு' என்று அந்த மணி அவனுக்கு எச்சரிக்கை செய்வதுபோல்

இருந்தது. பதறியடித்து எழுந்தான். மிச்சம் மீதியிருந்த ரொட்டியைப் பையிலே போட்டுக்கொண்டு, ஒரு பிராந்திப் பாட்டிலையும் பையிலே பதுக்கிக்கொண்டு, மெது வாக ஜன்னலருகில் வந்து, வெளியே தலைநீட்டிச் சுற்று முற்றும் பார்த்தான். ஜன நடமாட்டம் இல்லாது இருப்பதைக் கண்டு, ஒரே தாவலில் தெருவில் குதித்து விட்டான். நேரான பாதையை விட்டுக் குறுக்கே வயல் வெளியிலே இறங்கி, சற்றுத் தூரத்தில் தெரிந்த காட்டை நோக்கி ஓட்டம் பிடித்தான்.

உடம்பிலே உணவின் வலு ஏறிவிட்டதால், பலமும் திடமும் பெற்றுக் குறுக்கே நின்ற வேலிக்கம்பிகளை யெல்லாம் எளிதில் தாண்டிக் குதித்து ஓடினான். காட்டுக் குள் நுழைந்த பிறகு, பையிலிருந்த பிராந்திப் பாட்டிலை எடுத்துக் குடித்துக்கொண்டே போனான். போதை ஏறிவிட்டது. கண்கள் மயங்கிவிட்டன. தள்ளாடித் தள்ளாடி நடந்தான். வாய் பழைய கிராமியப் பாடல் ஒன்றை முணுமுணுத்தது. மெத்தென்று படர்ந்திருக்கும் புல் தரையைக் கண்டதும், பிள்ளைப் பிராயத்திலே விளை யாடியதைப்போல் கைகளைக் கீழே ஊன்றிக்கொண்டு, தலை கீழாக நகரவாரம்பித்தான். சிறிது தூரம் சென்றதும், எழுந்து ஓடுவான். பின்னர், 'பல்டி' அடிப்பான். கீழே உதிர்ந்து கிடக்கும் சிறு பழங்களைப் பொறுக்கி வாயில் போட்டுக்கொள்வான். இவ்விதமான களியாட்டத்தின் நடுநடுவே, பாட்டும் அவனையும் அறியாமல் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

ஆஹா, ஆனந்தம், ஆனந்தமே!
அயலார் வீட்டு இலவச உணவும்
அணில் கடித்துதிர்த்த பழங்களும்
உண்பதில் தனி யானந்தம், ஆனந்தமே!

என்று தன் சொந்த ராகத்தில் பாடிக்கொண்டே சென் ஶுன். திடீரென்று பாதை ஒரு பள்ளத்திலே இறங்கிப் பின்னர் விரிந்து சென்றது. அது ராஜபாட்டைக்கு வந்து சேர்ந்தது. ஒரு வேலைக்காரப் பெண் இரண்டு கைகளி லும் பால் நிறைந்த வாளிகளுடன் எதிரே வந்துகொண் டிருப்பதைக் கண்டான் ராண்டல். அவள் வருவதை

உற்றுப் பார்த்துக்கொண் டிருந்தபோது, அப்பெண்ணும் தற்செயலாய் நிமிர்ந்து ராண்டலை நோக்கினாள். "நீதானா இவ்வளவு அழகாகப் பாடினது?" என்று அவள் கேட்டதுதான் தாமதம். ராண்டல் விரைந்து, அவள் எதிரில் போய் நின்றான். "அடேயப்பா, ஏன் இப்படி ஓடி வருகிறாய்? என்னைப் பயமுறுத்திவிட்டாயே" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் அப்பெண்.

அவள் சொன்னதெல்லாம் குடிவெறியில் இருந்த அவன் காதில் விழவில்லை. அவளைக் கண்டவுடன், குடிமயக்கத்தையும் பசியின் உத்வேகத்தையும் தாண்டி அதி மூர்க்கமானதோர் உணர்ச்சி அவன் மனத்திலே பொங்கியெழுந்தது. வாலிபத்தின் துடிதுடிப்பு, இளமையின் தாகம், மாசக்கணக்காகத் தடைபட்டு நின்ற ஏதோ ஒரு வெறி—அப்பெண்ணைக் கண்டவுடன் பன்மடங்கு பெருகி அவனை உன்மத்தனாக்கி விட்டன.

ராண்டலின் வெறிகொண்ட முகத்தையும் காமவிகாரம் நிறைந்த கண்களையும், கைகளை விரித்து அவளை அணைய வருவதையும் பார்த்துத் திடுக்கிட்டுப் பின்வாங்கினாள் அப்பெண். ஆனால் ராண்டல் ஒரே பாய்ச்சலில் அவள் மீது பாய்ந்து, அவளைத் தரையில் தள்ளிவிட்டான்.

அவள் கையிலிருந்த வாளிகள் தடாலென்று தரையில் விழுந்து உருள, அவைகளிலிருந்த பால் நாலுபக்கமும் வழிந்தோடியது. அவள் கூக்குரலிட்டாள். ஆனால் அவள் கூக்குரல் கேட்டு, அந்த நிர்மானுஷ்யமான இடத்தில் யார் வரப்போகிறார்கள்? அது அவள் அறிந்த விஷயமே. மேலும் அவன் தன் உயிருக்கு ஆபத்து விளைவிக்கமாட்டான் என்ற நம்பிக்கையும் அவளுக்கு ஏற்பட்டது. ராண்டலின் கட்டான தேகமும், வாலிபத்தின் முறுக்கும் வசீகரமும் அவளுடைய கண்களை மயக்கவே, அவளுடைய கோபமெல்லாம் எங்கோ பறந்துபோயிற்று. அவனுக்கு அடங்கி, இணங்கி அவனுடைய தாகத்தைத் தணித்துவிட்டாள்!

பின்னர், மெதுவாக எழுந்து சுற்று முற்றும் பார்த்தாள். எதிரிலே கவிழ்ந்து கிடந்த வாளிகளைக் கண்டதும் தான், அவளுக்கு மறுபடியும் கோபம் உண்டாயிற்று.

பாலெல்லாம் தரையில் கொட்டி வீணாகிவிட்டதே என்ற ஆத்திரம் பொங்கி வந்தது. அதற்குரிய பணமாவது அவன் தந்திருந்தால், அவள் அவ்வளவு ஆத்திரம் அடைந்திருக்க மாட்டாள்! மூண்டெழுந்த கோபத்தில் பக்கத்தில் இருந்த ஒரு மரக்கட்டையை எடுத்து, ராண்டல் மீது வீசினாள்.

உடம்பில் ஏற்பட்ட பதற்றம் அடங்கியதும், ராண்டலுக்கு அறிவு சற்றுத் தெளிவு அடைந்தது. அவள் எதற்காகத் தன்மீது கட்டையை வீசினாள் என்பதே அவனுக்குப் புரியவில்லை. பாலைக் கொட்டியதற்காக அல்ல, பலவந்தமாகத் தன் இச்சையைப் பூர்த்தி செய்து கொண்டதனால் தான் என்று தப்பாக எண்ணி, பயந்து எழுந்து ஓட ஆரம்பித்தான். அதைக் கண்டு அவள் கீழே கிடந்த கற்களை எடுத்து வீசினாள். அவள் எறிந்த கற்கள் அவன் முதுகிலே தாக்கின. அதன் வலியையும் பொருட்படுத்தாமல் ஒரே ஓட்டமாக ஓடினான் அவன்.

எவ்வளவு நேரம் ஓடினானோ தெரியாது. மூச்சு முட்டும் வரையில் ஓடியிருப்பான். கால்களில் கடுப்பு வலி ஏறிவிட்டது. இனி ஓர் அடியும் எடுத்துவைக்க இயலாதென்ற நிலைமைக்கு வரும்வரையில், அவன் தன் ஓட்டத்தை நிறுத்தவில்லை. அங்கம் தளர்ந்தது. கருத்து மயங்கியது. ஒரு மரத்தடியிலே போய் உட்கார்ந்தான். எதைப் பற்றியும் சிந்தனை செய்ய இயலாத நிலையடைந்து, மெய் சோர்ந்து, கண்கள் உறக்கம் கொள்ள, அப்படியே மரத்தடியில் படுத்து உறங்கிவிட்டான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் யாரோ தன்னை முரட்டுத்தனமாகப் புரட்டுவதை உணர்ந்து, திடுக்கிட்டு விழித்துக் கொண்டு பார்த்தான். முதலில் அவன் கண்களில் பட்டது இரண்டு ஹாட்டுகள். பின்னர் அவைகளை அணிந்திருந்த காவலாளிகள். பழைய காவலாளிகளே தான்! அவன் கையைப் பிடித்துத் தூக்கினார்கள்.

"நீ மறுபடியும் அகப்பட்டுக் கொள்வாய் என்று எனக்குத் தெரியும்" என்று பெருமையடித்துக் கொண்டான் ஒரு காவலாளி. ராண்டல் வாய்திறந்து ஏதும் பேச

வில்லே. அவர்கள் இழுத்த இழுப்புக்கு நடந்தான். ஏதாவது பேசினுல் அவர்கள் தன்னைப் படாத பாடு படுத்துவார்கள் என்பதைக் கண்டுகொண்டான். தான் ஒரு கைதி என்றும், இனித் திமிருவதில் பயனில்லை என்றும் நன்கு அறிந்து கொண்டான்.

"உம், கிளம்பு" என்று காவலாளிகளின் உத்தரவு கேட்டு நடக்க வாரம்பித்தான். அந்தி மயங்கும் வேளை. மாலைக் கதிரவனின் கிரணங்கள் ஒளி மங்கிவிட்டன. எங்கும் இருள் கவிழ்ந்தது. அரைமணி நேரத்தில் அவர்கள் பழைய கிராமத்தை அடைந்தார்கள்.

இவர்களுடைய வரவை முன்பே அறிந்த ஜனங்கள் வீட்டு வாசல்களில் கூடிவிட்டார்கள். ஒவ்வொரு ஸ்திரீயும் தன்னுடைய கற்புக்கே பழி வந்துவிட்டதுபோலவும், ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய சொத்தே கொள்ளை போனதாகவும் நினைத்து, அடங்கா ஆத்திரங் கொண்டு, ஆண்பெண் அடங்கலும், அந்தப் பழிகாரனை—ராண்டலை—வாயார வைது தீர்க்கத் தயாராயிருந்தனர். அவன் வந்ததும், முதல் வீட்டில் ஆரம்பித்த வசவுமாரி அவன் விசாரணை மண்டபம் போகும்வரையில் தொடர்ந்து பொழிந்தது. விசாரணைக் கூடத்திலே மேயர் ராண்டலைப் பழிக்குப் பழி தீர்த்துக் கொள்வதற்காகக் காத்திருந்தார்.

அவனைக் கண்டதும், "வாருங்கள் ஐயா, வந்தீர்களா?" என்று பரிகாசத்தோடு வரவேற்று, "முதலில் உன் முகத்தைக் கண்டதுமே, எனக்கு நீ கைதியாவாய் என்று தெரியும். அப்படியே இப்போது நடந்துவிட்டது! அயோக்ய சிகாமணியே! உனக்கு இருபது வருஷம் கடுங்காவல் தண்டனை விதித்திருக்கிறேன், போ!" என்று தீர்ப்புக் கூறித் திருப்தியடைந்தார் மேயர்.

# விஜயம்

ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாசன்

"அம்மா! தேங்காய் எண்ணெய் எங்கே இருக்கு?"

"இதோ தரேண்டா, அப்பா. அடீ......சாந்தா, சாந்தா! அண்ணாவுக்குத் தேங்கா எண்ணெயாம், வேணு மாம். சாமான் அறையில் வெச்சுருக்கேன் பார்...... ஆமாம், ஆமாம்......அந்த 'ஸோலோ ஆரஞ்சு ஜூஸ்' சீசாவில்தான்...ஊம்...வென்னீர் அண்டா ஜலத்தில் கொஞ்சம் வெச்சு, கரைச்சுண்டு வா...ஊம்..." என்று பாக்கியம்மாள் உட்கார்ந்த இடத்திலிருந்தே பெண்ணுக்கு உத்தரவு போட்டாள்.

அதே சமயம் கையில் ஒரு கடுதாசியுடன் அங்கே வந்த ராமச்சந்திர ஐயர், "ஏதேது! 'டாய்லட் ட்ரெஸிங்' எல்லாம் ரொம்ப தடபுடலா நடக்கிறதே. எங்கே கிளம்ப றுப்பலே?" என்று தம் சஹதர்மிணியைப் பரிகாசம் செய்தார்.

"வெடிந்தால் சந்துரு வேட்டகத்திற்குக் கிளம்பிடு வானே. நாம் போகாவிட்டாலும் விஜயத்துக்குப் புடவை ரவிக்கையாவது வாங்கி அனுப்ப வேண்டாமா? அது தான் ஜவுளிக் கடைக்குப் போய்வரலாம்னு புறப்பட றேன்...ஏன்? நீங்கள் எங்கேயாவது போகணுமா? ட்ரைவர் வந்து விட்டானோ?"

"ட்ரைவர் வந்துவிட்டான். பேஷாய்ப் போய்வா. இன்னிக்குத்தான் கோர்ட்டுக்கூடக் கிடையாதே...அது சரி, பாக்கியம்! சந்துருதான் தீபாவளிக்கு வேட்டகம் போகிறதில்லேனு பிடிவாதம் பிடிக்கிறானே...அவனை நீ சம்மதிக்க வைக்கக் காணோம்,...புடவை வாங்கி வரக் கிளம்பிவிட்டாயே!"

"எதற்கம்மா இந்த வப்பு எல்லாம். நான்தான் பெங்களூர் போகப் போகிறதில்லேன்னுட்டேனே......" இவ்விதம் கூறிக் கொண்டே அவ்விடம் வந்தான் சந்துரு.

ஐயர், "சம்மந்தியிடமிருந்து தினம் ஒரு கடுதாசி வருகிறது. இதோ இப்போதான் தந்திச் சேவகன் வந்து இந்தத் தந்தியைக் கொடுத்து விட்டுப் போனான். கட்டாயம் எல்லோரும் தலைப் பண்டிகைக்குப் புறப்பட்டு வரணுமென்றும், உடனே பதில் தந்தியொன்றை நம்மிடமிருந்து எதிர்பார்ப்பதாகவும் சம்மந்தி அடித்திருக்கிறார்" என்றார்.

அதற்கு யாரும் பதில் சொல்லவில்லை. அங்கே சிறிது நேரம் நிசப்தம் நிலவியது. ஐயர் மறுபடியும், "சந்துரு!... அம்மாவுக்கும் எனக்குந்தான் மனசு சரியாயில்லை......நீயாவது போகாவிட்டால் அவர் என்ன நினைப்பார்?......" என்று தம் குமாரனைப் பார்த்துச் சொன்னார். அதை ஒட்டியே பாக்கியம் அம்மாளும், "என்னடாப்பா செய்யலாம். நாம் கொடுத்து வச்சது அவ்வளவுதான்... ...மலைபோல்...பறி கொடுத்துவிட்டோம்......ஊம்...... போனது போக இருப்பவர்கள், நீங்களாவது, என் கண் குளிர, நன்றாக விருக்க வேண்டாமாடா...தனியாகப் போகப் பிரியம் இல்லாவிட்டால் சாந்தாவையாவது கூட அழைச்சுண்டு போறையா?" என்று சொன்னாள். ஆனால் உடனே வேறு எதையோ நினைத்துக் கொண்டவளாய், "ஒரு வேளை இங்கே மாப்பிள்ளை வந்தாலும் வருவேன்னு எழுதி இருக்காராமே. அவள் எப்படியடா வருவாள்?......சந்துரு!...கல்யாணமான வருஷம், தலைத் தீபாவளியும், அதுவுமா அழகாப் போயிட்டு வாடா, அப்பா. நமக்காக இல்லாவிட்டாலும், அவா அவா ஆசையைக் கெடுப்பானேன்?......" என்று கூறினாள்.

அதற்குள் தேங்காய் எண்ணெயை எடுத்து வந்து பெரிய சீசாவிலிருந்து சந்துருவின் சின்ன சீசாவிற்குக் கொட்டிக் கொடுத்து விட்டு, சாந்தா, "ஆனால் நீ கட்டாயம் போகப் போறதில்லையா, அண்ணா?" என்று அவனை மிகுந்த கனிவுடன் கேட்டாள்.

"என்னமோ அம்மா, எனக்கு ஒன்றும் வேண்டி இருக்கவில்லை..." என்று பொங்கி வரும் தன் துயரத்தை அடக்கிக் கொண்டு தழுதழுத்த குரலில் மொழிந்தான் சந்துரு. மேலே பேசுவதற்கு ஒருவருக்கும் சக்தி ஏற்படவில்லை.

அனைவர் கண்களிலும் நீர் ததும்பியது. அச்சமயம் அங்கே ஏற்பட்ட மௌனமானது அவர்கள் துயரத்தைப் பதின்மடங்கு அதிகரிக்கச் செய்தது. எல்லோரும் ஏக காலத்தில் அங்கே கூடத்தில் சுவரில் கல்யாணக் கோலத்துடன் படம் பிடித்து மாட்டியிருந்த புதுத் தம்பதிகளின் புகைப் படம் ஒன்றை நிமிர்ந்து நோக்கினார்கள். அது சந்துருவின் தமையன் கௌரீசங்கரனின் கல்யாணத்தின்போது எடுத்த படம். அதன் பிறகு அங்கே நிற்க மாட்டாமல், தலை குனிந்த வண்ணம் தனது அறைக்குச் சென்றுவிட்டான் சந்துரு. துயரம் தாளாதவனாய்த் தீராத வேதனையில் ஆழ்ந்தான்.

நான்கு வருஷங்களுக்கு முன்புதான், அவன் தமையன் கௌரீசங்கரனுக்குக் கல்யாணம் நடந்தது. தலைத் தீபாவளிக்கு நான்கு நாட்களே இருக்கும்போது அவன் திடீரென்று நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டான். அந்த வேதனைதான் தற்சமயம் சந்துருவை வதைத்தது. அண்ணாவிடத்தில் சந்துருவுக்கு உயிர். அச்சமயம் காசியில் இன்ஜினீர் பரீக்ஷைக்குப் படித்துக் கொண்டிருந்தான் சந்துரு. தன் தமையனின் அழைப்பிற்கு இணங்கி அவனுடன் மாப்பிள்ளைத் தோழனாகத் தலைத் தீபாவளிக்கு அண்ணாவின் வேட்டகம் செல்வதற்காகப் பதினைந்து நாள் லீவில் காசியிலிருந்து ஆசை ஆசையாக ஓடி வந்தான் சந்துரு. அண்ணாவும் தானுமாக மன்னிக்குப் புடைவை, ஜாகெட் ஸில்க், இன்னும் என்னவெல்லாமோ பற்பல வெகுமதிகள் வாங்க டவுனுக்குச் சென்று கடை கடையாக அலைந்ததும் அச்சமயம் தமையனைத் தான் செய்த எண்ணற்ற பரிகாசங்களும் இப்போதுகூடச் சந்துருவின் நினைவிற்கு வந்தன. சரியாக ஒரு வார காலம் கடை கடையாக அலைந்து திரிந்து மன்னிக்கு ஒரு டிரங்கு நிறைய வெகுமதிகள் வாங்கிக் குவித்தான் அண்ணா! அம்மா மன்

னிக்கு என்று எடுத்து வைத்த புடைவை நன்ருக இல்லை யென்று தானே ஜவுளிக் கடைக்குப் போய்ப் பொறுக்கிப் பொறுக்கிப் புடைவை வாங்கி வந்தானே! அண்ணுவுக்குத் தான் தன் மனைவியிடத்தில் எவ்வளவு அன்பு! தீபாவளிக்கு இன்னும் ஒருவாரம்தான் இருக்கும். அன்று ஆபீஸி லிருந்து வந்தவன், தலைவலி என்று படுத்தவன்தான். பிறகு படுக்கையைவிட்டு எழுந்திருக்கவே இல்லை. நாலே நாள்......நாலே நாள் கடுஞ்சுரத்தில் தங்களை எல்லாம் துயரக் கடலில் ஆழ்த்திவிட்டுப் போயே போய்விட் டானே. தன் காதலியையும்...காணவில்லை......தலைத் தீபா வளிக்கும் போகவில்லை......அவன் தன் செல்வத்திற்கு என்று வாங்கிவந்த அன்புக்காணிக்கைகள் இன்றைக்கும் அதே டிரங்கில் அலுங்காமல் அப்படியே துயிலுற்றிருந் தன. அந்தப் பெட்டியைப் பார்க்கும் போதெல்லாம் சந்துருவின் உள்ளம் குமுறும்.

அதன்பிறகு வீட்டில் எத்தனையோ வைபவங்கள் நடந் தன. சாந்தாவிற்குக் கல்யாணம்! அவளுக்குத் தலைத் தீபாவளி. இந்த வருஷம் தனக்குக் கல்யாணம். எல்லாம் தான் நடந்தன. ஆனால் ஒவ்வொரு தீபாவளி நெருங்கும் போதும் சந்துருவின் உள்ளம் தன் தமையனின் நடவாத தலைத் தீபாவளியைப் பற்றியும், தமையனின் அகால மரணத்தைப் பற்றியும் எண்ணி எண்ணி, வேதனையால் வெதும்பி, வதங்கும். "ஐயையோ அண்ணு,......மன் னிக்கு எவ்வளவு ஆசை ஆசையாக அன்பை அள்ளிக் கொட்டி அபூர்வமான சாமான்கள் வாங்கிஞய்! ஒரு முறை......ஒரே ஒரு முறை......மன்னியைக் கண்டு...... அவளுக்கு......அவளிடம் ஒரு அன்பு வார்த்தை பேசினுயா?......அதுகூட......பகவானுக்குப் பிரியமில் லாமல் போய்விட்டதே......" என்று பலவாறு மனம் குமுறுவான் சந்துரு.

தன் தலைத் தீபாவளிக்கு வேட்டகத்திலிருந்து அழைப் புக்குமேல் அழைப்பு வந்த வண்ணம் இருந்தது. பெற்ருேர் கள் என்னவோ தாங்கள் போகப் பிரியப்படாவிட்டாலும் சந்துருவை மாத்திரம் போய் வரும்படி வற்புறுத்தினுர்கள். அவன்தான் தன் காதலிக்கு ஒரு வெகுமதி வாங்கி

வரவாவது, தீபாவளிக்கு வேட்டகம் செல்லவாவது ஆசைப்படவே இல்லையே. அவன் உள்ளம் தன் தமையனைப் பற்றிய நினைவுகளால் கொந்தளித்துக் கொண்டிருந்ததே. கடைசியில், தான் தன் தலைத் தீபாவளிக்குப் போகாமல் இருப்பதுதான் தன் அருமைத் தமையனுக்குத் தான் செய்யும் பக்தி பூர்வமான சேவை, கடமை என்று எண்ணினான் சந்துரு. ஆனால் பெற்றோரின் மனத்தைப் புண்படுத்தவும், அவன் மனம் இசையவில்லை. அண்ணாவின் நினைவில் அவன் தன் காதலியைக்கூட மறந்துவிட்டான். சகோதர வாஞ்சையில் சாக்ஷாத் லக்ஷ்மணனையும் மீறிவிட்டான் போலும்! அவனது புண்பட்ட உள்ளத்தில் எண்ண அலைகள் மோதின. மூடிய கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோடியது. ஒரே சோகப் பதுமை யெனக் காட்சியளித்தான் சந்துரு. அவன் இருந்த அப்போதைய நிலையில் பங்களா முன்புறத்திலிருந்து கார் கிளம்பிச் சென்றதையோ, பிறகு அது திரும்பிவந்ததையோ கூட அவன் அறியவில்லை. எத்தனை நாழிகைதான் அவன் அப்படிக் கிடந்தானோ தெரியாது.

தன் அறையினுள் காலடிச் சப்தம் கேட்கவே சந்துரு திடுக்கிட்டுக் கண்ணைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான். கையில் நான்கு புடைவைகளுடன் பிரவேசித்தாள் சாந்தா. "அண்ணா! இதோ நாலு புடைவைகள் பொறுக்கிக் கொண்டு வந்திருக்கிறோம். உனக்கு எது பிடிச்சிருக்கு? மன்னியின் சிகப்பு உடலுக்கு இந்த மேகவர்ணப் புடைவை ரொம்ப நன்றாகவிருக்கும், இல்லையா அண்ணா?" என்று சடசடவென்று பேசிய அவள் புடைவையின் மீதிருந்த பார்வையைத் திருப்பி அண்ணாமீது செலுத்தினாள். உடனே திடுக்கிட்டவளாய், "என்ன அண்ணா இது! தூங்கிவிட்டாயா என்ன...இந்த வேளையில்?" என்று அவன் சோர்ந்த முகத்தைக் கண்டு கேட்டாள்.

"இந்தா, சாந்தா! இந்த வம்பெல்லாம் எனக்கு எதற்கு அம்மா? நான்தான் உங்க மன்னியைப் பார்க்கப் போகவில்லை என்கிறேனே......" என்று வேதனை

தோய்ந்த குரலில் மொழிந்தான் சந்துரு. இதைக் கேட்டதும் சாந்தா சற்றே மலைத்துப் போய்விட்டாள்.

அவள் இப்போது தன் தமையனிடம் சொன்ன விஷயத்தைத் தான் தீவிரமாக நீண்டநேரம் யோசித்துப் பார்த்தாள். தன் சம வயசுப் பெண்ணான தன் மதனி விஜயத்தின் உள்ளக்கிடக்கை எப்படி இருக்கும் என்பதையே நினைத்துப் பார்த்தாள். தன் தலைத் தீபாவளியை எதிர்பார்த்துத் தான் எவ்வளவு குதூகலத்தோடு இருந்தாள் என்பதை அவளால் மறக்க முடியவில்லை. அவளும் தன்னைப் போலத்தானே புருஷன் வரவை ஆசையோடு எதிர்பார்த்து நிற்பாள் என்பதை எண்ணியபோது எப்படியாவது சந்துருவைத் தீபாவளிக்குப் பங்களூர் அனுப்பி விடுவது என்று தீர்மானித்தாள் சாந்தா. அதை நிறைவேற்றுவதற்கான காரியங்களையும் செய்ய முற்பட்டாள் அவள். அதன் விளைவாகத்தான் அவள் கடைக்குச் சென்று மதனிக்காகப் புடைவை வாங்கி வந்ததும்.

ஆயினும் அவள் தன்னைச் சட்டென்று சமாளித்துக் கொண்டாள்.

"என்ன அண்ணா இது? நீயே இப்படி வேதனைப் பட்டால்......அம்மாவும் அப்பாவும் என்ன செய்வார்கள்? அந்த அண்ணாதான் போயிட்டான், நீயும் மன்னியுமாவது நன்னா இருக்கவேண்டாமா, எனக்கு? இதோ பார்! நீ என்னவோ போகவில்லை என்கிறாய்; ஆனால் அந்தப் பெண்,—உன் மனைவி, என் மன்னி—அவள் எதைக் கண்டாள், பாவம்? எவ்வளவு ஆசை ஆசையாக அவள் எத்தனை நாளாக இந்தத் தீபாவளிக்காகவும்......உன் இன்ப முகத் தரிசனத்திற்காகவும்......காத்திருக்கிறாளோ? இந்த அன்புச் சந்திப்புக்காக அவள் என்ன என்ன திட்டங்கள் வகுத்திருக்கிறாளோ! அந்த அறியாப் பெண்ணின் உன் உயிர்த் தோழியின் மனத்தை நீ இப்படி நோகச் செய்வது சரியா? நீயே யோசித்துப் பார், அண்ணா! இதுதான் முதல் பண்டிகை! கல்யாணம் ஆன பிறகு முதன் முதல் சந்திப்பு! அப்புறம் நிறைய இன்னும் என்ன வெல்லாமோ சொல்லிவிடுவேன்! என்ன

அண்ணு!..." என்று சாந்தா பாட்டுக்குப் பரிகாசமாகப் பேசிக் கொண்டே போனுள்.

பரிகாசத்துடன்கூட அவளுடைய கனிவு ததும்பும் அனுபவ பூர்வமான சொற்கள் சந்துருவின் புண்பட்ட உள்ளத்திற்கு வெந்த புண்ணில் வெண்ணெய் பூசுவது போல் ரொம்பவும் இதமாக விருந்தது. பெண்ணின் உள்ளத்தைப் பெண்தானே அறிவாள்! அவள் பேசப் பேசச் சந்துருவின் மனக் கண்முன் அவன் ஆசைக் காதலி விஜயத்தின் யௌவனம் கொப்புளிக்கும் சுந்தர வடிவம் காட்சியளித்தது. அவள் கண்களில் காதல் வெறி குடி கொண்டு அவன் வரவை அதிக ஆர்வத்துடன் எதிர்பார்த்த வண்ணம் எண்ணிறந்த இன்பப் பொழிலை அவன்பால் பொழியத் தயாராகக் காத்திருப்பதுபோல் அனுபவம் ஏற்பட்டது. அவளுடைய இனிய தோற்றத்தைக் கண்டு களிக்க இன்ப வெறி மூண்டவனுய் அசந்து போனுன் அவன். தான் வேட்டகம் போகாவிட்டால் அந்த இளம் தளிர் உள்ளத்திற்குப் பெருத்த ஏமாற்றத்தையும், தீங்கை யும் இழைத்த தாகுமென்று அப்போதுதான் உணர்ந் தான் அவன்.

தன் இன்பக் கிளி தன்னையே நம்பித் தன்னைச் சந் தோஷிப்பதற்காக எவ்வளவு ஆர்வத்துடன் தன்னை எதிர் பார்த்திருப்பாள். பாவம்! ஆமாம் சாந்தா சொல்வது முற்றிலும் உண்மை. அவள், விஜயம் தனக்கு எழுதும் ஒவ்வொரு கடிதத்திலும் தாங்கள் இருவரும் மறுபடியும் சந்திக்கும் நன்னுள் எவ்வளவு இன்பகரமாக இருக்கப் போகிறதென்பதை எடுத்துக்காட்டி யிருந்தாள்! அந்த நன்னுளை எதிர்பார்த்துத் தான் ஏங்கிக் கிடப்பதையும், அந்தநல்லசமயத்தைத் தாங்கள் இருவரும் எவ்வளவு இன்ப மயமாகக் களிக்க வேண்டுமென்று தான் எத்தனையோ திட்டங்கள் வகுத்து, தினந்தோறும் எண்ணிறந்த இன்பக் கனவுகள் கண்டுகொண் டிருப்பதையும், சாதக பக்ஷி போல் தன் காதலன் வரவிற்காகக் காத்திருக்கும் விதத்தை யும் எவ்வளவு அழகாக வர்ணித்து, காதல் மொழிகளைக் கொட்டி வரைந்து தள்ளி இருக்கிருள், ஒவ்வொரு கடிதத்

திலும் போக்கிரி விஜயம்! "பெண்மையின் மென்மையுள்ளத்தை-அன்புக் களஞ்சியமான, ஆதரவின் பொக்கிஷமான, பொறுமையின் சிகரமான, பெண்மையின் தூய அன்பை—மறந்தேனே' என்று என்ன வெல்லாமோ எண்ணி எண்ணி மனம் சோர்ந்தான் அவன்.

உடனே தான் தன் காதலிக்கு எழுதிய காதல் கடிதங்களில் தாங்கள் இருவரும் மறுபடியும் சந்திக்கப் போகும் நன்னாள் என்னுளோ என்ற பொருள் அடங்கியதாக எழுதிய பதில்கள் அவன் நினைவுக்கு வந்தன. மற்றும் காதல் ததும்பும் பாடல்கள் எத்தனையோ தானே சொந்தமாகப் புனைந்து எழுதியவை. எல்லாம் அவன் நினைவிற்கு வரவே, அவனையும் அறியாமல் சிரிப்புக்கூட வந்துவிட்டது. தன்னைப் பெரிய பிழையிலிருந்தும் மீட்ட சாந்தாவிற்கு மனத்தினுள் ஆயிரம் வந்தனங்கள் கூறினுன். ஆயினும் தன் உள்ளக் கொந்தளிப்பை வெளியே காட்டிக் கொள்ளாமல், அமைதியாகவே, "சாந்தா!" என்று கனிவுடன் அழைத்தான்.

புதுப் புடைவைகளை மேஜைமீது பிரித்துப் போட்டுப் பரிசீலித்துக் கொண்டிருந்த சாந்தா, "ஏன்?" என்று தமையனை நிமிர்ந்து நோக்கினுள்.

"சாந்தா! உங்கள் எல்லாருடைய ஆசையையும் கெடுப்பானேன். சரி......பங்களூர் போய்விட்டு வந்துடறது...அப்பாவிடம் போய்ச் சொல்லிவிடு, பதில் தந்தி கொடுத்துவிடலாம்னு......ஆனுல் ஒரு நிபந்தனை, சாந்தா! என்னுடன் நீயும், மாப்பிள்ளையுமாவது வந்தால்தான் நான் போவேன்......என்ன?"

"அதற்கென்ன பிரமாதம் அண்ணு? பூனுவிலிருந்து இங்கே அவர் வருவதற்குப் பதில் நேராக அவரைப் பங்களூருக்கே வந்துவிடும்படி இப்போதே அவருக்கும் ஒரு தந்தி கொடுத்து விடலாம். நானும் நீயுமாகக் கிளம்பிப் பங்களூர் சென்று, அவரைப் பங்களூர் ஸ்டேஷனில் சந்திக்கலாம்"என்றுள் சாந்தா. அவள் முகம் சந்தோஷத்

தால் மலர்ந்தது. குரலில் வெற்றிக் குறியும், பெருமிதமும் தொனித்தன. அவள் ஆனந்த வெறியைக் கண்டு சந்துருவின் உள்ளம் பூரித்தது. புன்முறுவலுடன் 'ஊம்' என்று ஆமோதித்தான்.

இதில் வெற்றி அடைந்தது யார்? விஜயமா? சாந்தாவா?



# கடமை

ஆர். கே. பார்த்தஸாரதி

வைத்தியநாதன், எம். பி. பி. எஸ்., எல். ஆர். ஸி. பி (லண்டன்) அவ்வூர் அரசாங்க ஆஸ்பத்திரியின் தலைமை டாக்டர்.

அன்று அவன் தனது வீட்டின் வாயிற்புறத்து அறையில் மௌனமாக உட்கார்ந்திருந்தான். அறையின் ஜன்னல் ஓர் அழகிய சிறு தோட்டத்தை நோக்கி அமைந்திருந்தது. மலைவாயில் விழுந்துகொண்டிருந்த சூரியன் வைத்தியநாதனின் பிரகாசம் இழந்த கண்களுக்கு முன் ஒரு சோகச் சித்திரத்தைப் பிரித்துக்கொண்டிருந்தான். தோட்டத்தில் ஒரு சிறு கொடிகூட அசையவில்லை. இயற்கை நிச்சலனமாக விருந்தது; நிசப்தமாக விருந்தது. இவையும் அவனுடைய அப்போதைய உணர்ச்சிகளுக்கு, அநுதாபத்துடன், வியாக்கியானம் எழுதிக்கொண்டிருந்தன.

வைத்தியநாதன் அவனுடைய உத்தியோகத்தை—கடமையை – தவிர்த்து வேறு ஒரு விஷயத்திலும் அதிகக் கவனம் செலுத்துவதில்லை யென்பதை அவன் உட்கார்ந்திருந்த அறை நன்கு உணர்த்தியது. அவனுடைய அலங்கோலமான உடை சுக வாழ்வில் அவனுக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பை வெளிக்காட்டியது. சுவரில் மாட்டியிருந்த புகைப் படங்கள்—சீமைக்கு அவன் சென்றிருந்த பொழுது மிகுந்த செலவில் எடுக்கப்பட்ட படங்கள்—மாசு படிந்து துயரக் காட்சி யளித்தன. வைத்திய சம்பந்தமான புத்தகங்கள் பல, பிரித்தும் பிரிக்காமலும், பீரோவில் தாறுமாறுகக் கிடந்தன. மேஜையின் மேல், 'ஷேவிங் ஸெட்' மீது 'ஸ்டேதெஸ்கோப்'பும் 'டெஸ்ட் ட்யூபி'ன் மீது பவுண்டன் பேனவும், வெகு அலட்சியமாக எறிந்திருப்பன போலக் காணப்பட்டன. ஏனே அவனுக்கு வாழ்க்கையில் இவ்வளவு கசப்பு!

ஆனால், இவ்வளவு அமர்க்களத்தின் நடுவிலும், ஒரே ஒரு சிறிய புகைப்படம்—சுமார் பதினாறுவயசுப் பெண் ஒருத்தியின் புகைப்படம்—அழகிய வேலைப்பாடு அமைந்த 'ஸ்டாண்'டில் பொருத்தப்பட்டு, அறையின் நடுநாயகமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அதைமட்டும் அன்றாடம் துடைத்து, மிகுந்த சிரத்தையுடன் வைத்தியநாதன் வைத்துக்கொண்டிருந்தான்போலும்! அப்பெண்ணின் மதி மயக்கும் குறும்புச் சிரிப்பு அவனுடைய அகால விரக்தியை எள்ளி நகையாடுவதுபோல் இருந்த போதிலும், உண்மையில் அதனால்தான் என்றைக்கோ வறண்டுபோன அவன் வாழ்க்கைப் பாலைவனத்தில் இன்ப ஊற்றுச் சுரந்து கொண்டிருந்தது. அப் பெண்ணின் கவர்ச்சி குலுங்கும் மழைக் கண்கள் அவனுடைய இதயத்தின் ஊமைக் காயங்களை ஆற்றிக் கொண்டிருந்தன.

அறையில் மௌனமாக உட்கார்ந்திருந்த வைத்தியநாதன் அப்படத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான். நேரம் செல்லச் செல்ல அப்பெண் அவனுடைய இதய சாகரத்தில், ஒரு சமயத்தில் பயங்கரமாகக் கொந்தளித்து அடங்கிய அலைகளை மீண்டும் கிளப்பிக் கொண்டிருந்தாள். பாழும் பழைய நினைவுகள் கட்டுக்கடங்காமல் குமுறின.

* * *

இன்றுபோல் அன்றும் அவன் பிரும்மசாரி. சென்னையில் எம். பி. பி. எஸ். பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருந்தான். ஹாஸ்டலில் வசிக்காமல் ஒரு பெரிய வீட்டின் மாடியறையில் வாடகைக்குத் தங்கி யிருந்தான். எதிர் வீட்டில் யாரோ ஒரு பெரிய அரசாங்க உத்தியோகஸ்தர் இருந்தார் என்பதை, அவர் வீட்டிற்கு அடிக்கடி போவதும் வருவதுமாக இருந்த 'காரும்' வாசலில் காவல் சேவகம் புரிந்துகொண் டிருந்த அநேக 'டவாலி ப்யூன்'களும் தெரிவித்தனர். வீட்டு எஜமானியையோ மற்றவர்களையோ வைத்தியநாதன் அதிகம் பார்த்ததுகூட இல்லை. ஏன், அந்த வீட்டில், சுந்தரி என்ற கட்டழகியொருத்தி இருந்துவந்தாள் என்பதுகூட அவனுக்கு அன்றுவரையில் தெரியாது. ஆனால் ஓர் உண்மை மட்டும்

அவனுக்குத் தெரியும். அது, அவனும் அவரும் ஒரே ஜாதியை—முதலியார் வகுப்பைச்—சேர்ந்தவர்கள் என்பது தான்.

அன்று இரவு பன்னிரண்டு மணியிருக்கும். எதிர் வீட்டு வேலைக்காரன் ஒருவன், வைத்தியநாதனை அவசரம் அவசரமாக எழுப்பினன். ராமசாமி முதலியாரின்—அது தான் எதிர் வீட்டு எஜமானரின் பெயர்-குழந்தை, கட்டிலிலிருந்து புரண்டு கீழே விழுந்து காயம் அடைந்து விட்டதாம். அதற்கு ஏதேனும் மருந்து போடத்தான் வைத்தியநாதனின் உதவியை அவர் நாடினராம். வைத்தியநாதன், கைவசத்திலிருந்த மருந்து ஒன்றை எடுத்துக்கொண்டு முதலியார் வீட்டிற்குச் சென்றன். மருந்து போட்டு விட்டு அறைக்குத் திரும்பியபோதுதான் அந்த முதற் சந்திப்பு நேர்ந்தது. குழந்தையின் பக்கத்தில் காணப்பட்ட, கவலை தோய்ந்த, ஆனலும் இயற்கை வசீகரம் நிறைந்த ஒரு முகம்—சுந்தரியின் மதி முகம்—வைத்தியநாதனை நன்றி கலந்த அன்புடன் நோக்கியது. அவன் அன்றிரவு முழுதும் சுந்தரி சிருஷ்டித்த இனிய கற்பனையுலகிலேயே சஞ்சரித்துக்கொண் டிருந்தான்.

அன்றைத் தினத்திலிருந்து ராமசாமி முதலியார் வைத்தியநாதனை அடிக்கடி தம் வீட்டிற்கு அழைத்துப் பேசலானர். முதலியாரின் பெண் சுந்தரியுடன் பேசுவதற்கும், சிறிது சிறிதாக நெருங்கிப் பழகுவதற்கும் வைத்தியநாதனுக்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அச் சந்தர்ப்பங்களை யெல்லாம் அவன் பரிபூர்ணமாகப் பயன் படுத்திக் கொண்டான். அவள் உள்ளமும் தன் மனமும் ஒன்றையொன்று விழைந்து தழுவும் அளவிற்குத் திரை மறைவில் நடந்த இந்த இன்ப நாடகம் வளர்ந்துகொண்டே இருந்தது. முதலியாருக்குத் தெரியாமல் ஒருநாள் அவன் அவளைப் புகைப்படச்கூடப் பிடித்து விட்டான்.

சில நாட்கள், பல இன்பங்களை எழுப்பிவிட்டு மறைந்தன. இப்போதெல்லாம் முதலியார் அழைக்காமல் இருக்கும்போதுகூட வைத்தியநாதன் அவர் வீட்டிற்குச் சென்றுகொண் டிருந்தான். அன்பின் அழைப்பு நிரந்தரமாக இருக்கும்பொழுது முதலியாரின் அழைப்பு எதற்கு?

ஆனால் முதலியாரை அவ்வளவு சுலபமாகப் புறக் கணித்துவிட முடியாது என்பதை வைத்தியநாதன் அறிய வில்லை. அளவுக்கு மீறித் தன் பெண்ணுடன் அவன் பேசு வதை முதலியார் விரும்பவில்லை. இந்த மனநிலை நாளடை வில் ஒரு வெறுப்பாக மாறியது. வெறுப்புடன் ஒரு சந்தேக மும் பிறந்தது. இவை யாவும் சேர்ந்து ஏற்கெனவே ஈரமற்ற முதலியாரின் இதயத்தைக் கல்லாக்கி விட்டன. அர்த்த ராத்திரியில் அன்று வைத்தியநாதன் செய்த உபகாரம்கூட மறந்துபோய்விட்டது அவருக்கு. வீட்டிற்கு வந்தபொழுதெல்லாம் அவனைப் பலவந்தமாகத் தம் அறையில் இருத்திக்கொண்டு, ஸ்திரீ புருஷர்கள் நெருங்கிப் பழகுவதில் உள்ள ஆபத்தைப்பற்றியும் அந்த விஷயத்தில் தம்முடைய கண்டிப்பைப் பற்றியும் நீண்ட பிரசங்கங்கள் செய்ய ஆரம்பித்தார். இந்த உபந்நியாசங் களின் உட்கருத்தை வெகு சீக்கிரத்தில் அவன் உணர்ந்து கொண்டான். இனிமேல் என்ன செய்யவேண்டும்? என்பதைப் பற்றித் தீவிரமாக அவன் யோசித்துக்கொண் டிருந்தபோதுதான் 'கிறிஸ்துமஸ்' விடுமுறை வந்தது. ஊருக்குப் போவதற்கு முன் சுந்தரியைச் சந்திக்க அவன் பிரம்மப்பிரயத்தனம் செய்தான். ஆனால் அந்தப் பாக்கியம் அவனுக்குக் கிட்டவில்லை. தாங்கமுடியாத மனவேதனை யுடன் ஊருக்குப் புறப்பட்டான். பாவம்! தன்னைப் போலவே சுந்தரியும் தவித்தாள் என்பதையேனும் வைத் தியநாதன் அறிந்திருந்தால் சிறிது நிம்மதியடைந்திருப் பான். அந்த நிம்மதியும் அவனுக்குக் கிட்டவில்லை.

* * *

வைத்தியநாதன் லீவு முடிந்தவுடன் சென்னைக்குத் திரும்பினான். வந்தவுடன் அவன் காதில் விழுந்த முதற் செய்தி அவனைத் திடுக்கிடச் செய்தது. சுந்தரிக்கு ஏதோ வொரு பெரிய இடத்தில் கல்யாணம் ஆகி விட்டதாம். அவளைத் தான் மணந்துகொள்ள ஊரில் அவன் எவ்வளவு ஏற்பாடுகள் செய்திருந்தான்! தான் சென்னைக்குச் சென்றவுடன், தன் தகப்பனாரைக் கொண்டு முதலியாரின் பெண் ஜாதகத்தைக் கேட்டு அவருக்குக் கடிதம் எழுதக் கூட ஏற்பாடு செய்திருந்தான்! இப்போது அவன் எண்ணங்கள் எல்லாம் இடிந்து மண்ணாயின.

மனம் முறிந்த வைத்தியநாதன் உடனே அறையைக் காலிசெய்து விட்டு வேறு இடத்திற்குச் சென்றான். சுந்தரியைப் பற்றிய எண்ணங்களெல்லாம் கனவாகி அந்த ஒரு புகைப்படத்தில் மட்டும் நனவாக ஒட்டிக்கொண் டிருந்தன. அவன் அதைமட்டும் பிய்த்து எடுத்து விடாமல் காப்பாற்றி வந்தான்.

சூன்யமான மனத்துடன், ஒருவாறாகப் பரீட்சையை எழுதிவிட்டு வைத்தியநாதன் ஊருக்குத் திரும்பினான். அங்கே தங்கியிருந்த அந்தச் சில மாதங்களுக்குள் ஒரு முறையேனும் சுந்தரியைச் சந்திக்கப் பலத்த முயற்சிகள் செய்தான். பலன் ஒன்றுமில்லை. போதாக் குறைக்கு அவளைப் பற்றிக் கஷ்டமான செய்திகள் சிலவும் அவன் காதில் விழுந்தன. அவை அவனுடைய உள்ளத்தைத் திருகியெடுத்தன. சுந்தரியின் கணவன் ஒரு ஜமீந்தாரின் மகனாம். அவனுடைய மைனர் வாழ்க்கையின் அலங்கோலத்திற்கு, எண்ணற்ற 'பாட்டில்'களும் கணக்கற்ற விலைமாதர்களும் சாட்சியாம். பணத்தையே வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்ட முதலியார், பராபரியாகக் காதில் விழுந்துங்கூட, இவற்றை லட்சியம் செய்யாமல், தமது கண்டிப்பால் சுந்தரியை அவனுக்கு மணம் செய்வித்தாராம்.

இந்த விபரங்களையெல்லாம் அறிந்த வைத்தியநாதனின் வாழ்க்கையில் மேலும் கசப்புத் தட்டியது. தனது தீராத் துயரை ஒருவாறு மறக்க வைத்தியநாதன் வைத்தியப் படிப்பிற்காக லண்டனுக்குக் கப்பலேறினான். தந்தை எவ்வளவோ தடுத்தும் கேட்கவில்லை. கல்யாணம் செய்து கொள்ளுமாறு மன்றாடிய தாயின் வார்த்தைகளையும் அவன் லட்சியம் செய்யவில்லை. லண்டனில் பல வருடங்கள் தங்கி மேற்படிப்பை முடித்துக் கொண்டு ஊருக்குத் திரும்பி வந்தவுடன், வேலையில்லாமல் இருக்க வேண்டாமென்றே, அரசாங்க ஆஸ்பத்திரியில் தலைமை டாக்டர் பதவியை ஏற்றுக்கொண்டான்.

இந்தப் பழைய நினைவு வலையிலிருந்து விடுவித்துக் கொள்ளத்தான், சிலந்தி வலையில் சிக்கிக் கொண்ட சிறு பூச்சி போல, வைத்தியநாதன் வீணாக முயன்றான்.

அவனுக்கு எதிரே மேஜைமீது இருந்த சுந்தரியின் படம் மேன் மேலும் அவனை எண்ணச் சக்தியில் ஆழ்த்தியது. எனவே, வெகு சிரமத்துடன் அப் புகைப்படத்தினின்றும் தன் கண்களைப் பிடுங்கினான். உடனே அந்தகாரம் அவன் மனத்தில் புகுந்து கொண்டது. அதே சமயத்தில் உதவி கவர்மெண்ட் டாக்டரின் குரல் அவன் காதில் விழுந்தது. அது, அவனுடைய துயரமே அலறுவது போல் இருந்தது. அறையில் குடியிருந்த நிசப்தம் கலைந்தது; எண்ணச் சரடும் அறுந்தது. இப்போது வெளியுலகம் முழுதும் இருண்டு விட்டது—அவன் இருதயத்தைப் போல.

உள்ளே வந்த உதவி டாக்டர், குடி வெறியில் கீழே விழுந்து மண்டையில் பலத்த அடியுடன் ஒருவன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப் பட்டிருப்பதாகவும், ஒருகால் மேஜர் ஆபரேஷன் அவசியமாக இருக்கலாமென்றும் கூறினார். வைத்தியநாதன் இந்தச் சந்தர்ப்பத்தை வெகுவாக வரவேற்றான். காரியத்தில் கருத்தூன்றி எண்ணப் பேய்களை விரட்டலாம் அல்லவா? உடனே 'டிரஸ்' செய்து கொண்டு, ஆஸ்பத்திரியை நோக்கிப் புறப்பட்டான். வாயிற்படியில் கால் இடறியபோது அவன் மனம் துணுக்குற்றது. இன்னும் எந்தக் கஷ்டம் காத்திருக்கின்றதோ?

* * *

வைத்தியநாதன் நேரே 'கேஸ்' இருந்த இடத்திற்குச் சென்று கவனித்தான். உண்மையில் வெகு ஆபத்தான நிலைமையிலுள்ள கேஸ் என்பதில் சந்தேகம் இல்லை. அவன் தீராக் குடியனாக இருக்கவேண்டு மென்பதை அவனுடைய பொதுவான தோற்றமே கூறியது. ஆபரேஷன் செய்யவில்லையென்றால் அவன் பிழைப்பது அரிது. பிரக்ஞை சிறிதும் இல்லை. மூச்சு வெகு லேசாக இழைந்துகொண்டிருந்தது. 'இம்மனிதன்—மனித மிருகத்தின்—உதவிக்கு யார் வந்திருக்கிறார்கள்?' என்று வைத்தியநாதன் தன் கண்களைச் சுழல விட்டான். வெகு தூரத்தில் ஒரு பெண்மணி துக்க ரேகை படர்ந்த வதனத்துடன் நின்றுகொண்டிருப்பதை அனுதாபத்துடன் கவனித்தான். அவள் கண்களிலிருந்து நீர் பெருகிக்கொண்டிருந்தது. அக்காட்சி வைத்தியநாதனின் உள்ளத்தை உருக்கியது. எனவே

அவளுக்குத் தேறுதல் கூறி, அவளை வெளியே உட்கார்ந் திருக்கச் சொல்ல எண்ணி, அவன் அப் பெண் இருக்கும் இடத்திற்குச் சென்றான். "பயப்படாதே அம்மா!" என்று கனிவுடன் கூறிக் கொண்டே அவன், அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தான். அவளுடைய முகத்தில் பல கிள்ளுக் காயங்கள், ஆறியும்ஆறாமலும், பலசோகச் சம்பவங்களை விவரித்தன. வைத்தியநாதன் மனம் வெம் பியது. அவளுடைய முகத்தைச் சிறிது கூர்ந்து கவனித் தான். ஐயோ! என்ன இது! கண்களையே நம்பமுடிய வில்லையே! வைத்தியநாதனின் மனம் வெடித்து விடும் போல் ஆகிவிட்டது. அவன் புரிந்து கொண்டு விட்டான்; ஆனால் அவள் புரிந்து கொள்ளவில்லை. டாக்டரின் உடையிலிருந்த அவன், அவள் நினைவைத் தட்டியெழுப்ப வில்லை. அப்போது அவள் மனத்தில் 'கணவன் பிழைப் பானா?' என்ற ஒரே கேள்விதான் மேலோங்கி நின்றது. மற்ற எந்த இந்திரியமும் வேலை செய்யவில்லை. வைத்திய நாதனை—டாக்டரை—பார்த்தவுடன், அவன் தன் கண வனை எப்படியும் காப்பாற்றி விடுவான் என்ற நம்பிக்கை அவள் இதயத்தில் துளிர்த்தது.

அவன் உள்ளே சென்றான்; அவனை யறியாமலேயே, அவன் விரும்பாமலே, அவன் கால்கள் குடிகாரனிடம் அவனை இழுத்துச் சென்றன. அவளும் வெளியே சென் றாள். நம்பிக்கையின் நடுவிலும் அவள் மனம் 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது.

* * * *

ஏனோ வைத்தியநாதனின் உடலில் சுருசுருப்பே இல்லை, ஆனால் ஆபரேஷனுக்கு எப்படியோ ஆயத்தமாகி விட்டான். நிர்ப்பந்தமாக வரவழைத்துக் கொண்ட சுரு சுருப்புச் சிறிது நேரத்தில் தேய்ந்து மங்க ஆரம்பித்தது. மனத்தில் ஒரு புயல் அடிக்கத் தொடங்கி விட்டது. மனப் போராட்டம் மூண்டு விட்டது. அப்பெரும் புயலில் எண்ணத் துரும்புகள் தத்தளித்தன. கடமை யுணர்ச்சியும் மனிதத் தன்மையும், அநுதாபமும், அவன் இதயத்தை மூலைக்கு மூலை பிய்த்து இழுத்தன—சண்டையிடும் இரு குழந்தைகள் ஒரு பலூனை இழுப்பது போல. இப்போராட்

டத்தில், விவேகம் பயந்து கொண்டு அவனை விட்டு ஓடிப் போய்விடும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. வைத்தியநாதன் பல்லைக் கடித்துக் கொண்டு தன் உணர்ச்சிக் கொந்தளிப்பை அடக்க யத்தனித்தான். கடமையிற் கண்ணுகி, கையில் ஆபரேஷன் கத்தியை எடுத்து விட்டான். மீண்டும் உள்ளத்தில் ஒரு கலகம்; பயங்கரமான புரட்சி.

'பைத்தியமே! ஏன் கடமை, கடமை என்று அடித்துக் கொள்கிருய்? கடமை கண்டு விட்ட கர்ம வீரனே நீ? உத்தியோகத்திற்காக நீ உன் கடமையைச் செய்து விட்டால் மட்டும் போதுமா? உன் சுந்தரிக்கு—இங்கே வந்திருக்கும் அந்தப் பெண்ணிற்கு—நீ செய்ய வேண்டிய கடமையைக் காற்றில் பறக்க விட்டு விடுவதோ?' என்று அநுதாபம் அவனை இடித்துக் கூறியது. வைத்தியநாதன் ஒன்றும் புரியாமல் கண்களை மூடினுன். ஆனுல் கடமை அவன் மூடிய கண்களைத் திறந்தது. அநுதாபத்திற்கு இது பொறுக்கவில்லை. அது மேலும் வைத்தியநாதனைச் சீறியது. 'இந்தா! அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்தாயா?'

ஏன் பார்க்க வில்லை? நன்ருகத்தான் வெளிச்சத்தில் பார்த்தான்! அவளுடைய கிள்ளுக் காயங்கள் – அவற்றை வைத்தியநாதன் விரல் விட்டு எண்ணவில்லை; எண்ணவும் முடியாது—அவன் உள்ளத்திரையில் தோன்றி உறுத்தின. இதயம் ரத்தம் வடித்தது. வைத்தியநாதனின் கையிலிருந்த கத்தி நடுங்கியது. இப்படி அவன் கை நடுங்கி அவன் கடமையை நிறைவேற்ருமல் இருக்க வேண்டு மென்பது அநுதாபத்தின் பிரார்த்தனை. இந்த முதல் வெற்றியின் களிப்பில் அநுதாபம் மேலும் உற்சாகத்துடன் பேசியது.

'பத்துவருடங்களாக இப்பாவியிடம்—கிராதகனிடம்—அடியும் உதையும், குத்தும் கிள்ளும் வாங்கி யிருக்கும் சுந்தரியை—முன்னெரு காலத்தில் உன்னை நேசித்த சுந்தரியை-எஞ்சிய நாட்களும் உன் கடமையால் வதைக்கப் போகின்றனையா? அவனே அல்லது அவளோ இறக்கும் வரையில், உன் கடமை அவளுடைய ஓயாத கஷ்டத்தை நீடிக்கப் போகின்றதா? ஆபரேஷன் செய்து நீ இந்த

மிருகத்தைப் பிழைக்க வைத்து விட்டால் சுந்தரியின் கதி என்ன? பழைய அதோ கதிதான்! குடிகாரனுக்கு வாழ்க்கைப்பட்டு விட்டாள் என்று அன்று மருகினயே! அதே குடிகாரன் அதே விதத்தில் அவளை மீண்டும் சித்திர வதை செய்ய வேண்டு மென்பதுதான் உன் தூய கடமை யின் நோக்கமா? நன்று, நன்று! நீ உன் சுந்தரியிடம் காட்டும் கருணையின் அழகே அழகு.'

அநுதாப வுணர்ச்சி வார்த்தைகளை வாரி யிறைத்து வைத்தியநாதனைத் திக்கு முக்காடச் செய்தது. கையில் இருந்த கத்தி மேலும் பலமாக நடுங்கியது.

கடமை மிகுந்த பொறுமையுடன் இவற்றையெல்லாம் விட்டுச் சாவதனமாகப் பதில் கூறியது.

'எது வந்தாலும் சரி! நீ கடமையில் ஓர் இம்மி அள வும் பிறழக் கூடாது. உணர்ச்சியின் வசப்படாதே. அது உன்னைப் படுகுழியில் தள்ளிவிடும். உன் உத்தியோகத் தின் தன்மையை நன்ருக ஞாபகப் படுத்திக் கொள். விருப்பு வெறுப்பில்லாமல், உயிருக்கு மன்ருடுபவர்களுக் கெல்லாம், முடிந்தால், உயிர்ப்பிச்சை கொடுக்க வேண்டி யதுதானே உன் கடமை! வியாதியஸ்தர்களின் பூர்வோத் தரங்களை நீ என் விசாரிக்க வேண்டும்?' கடமையின்—மனச்சாட்சியின்—குரலில் அழுத்தமும் ஆழமும் இருந் தன.

வைத்தியநாதன் நடுங்கும் கத்தியைக் கெட்டியாகப் பிடித்த வண்ணம் குடியனின் தலைப் பக்கம் கொண்டு போனுன். அநுதாபம் மீண்டும் அவன் கைகளை உலுக்கி யது. மறுபடியும் அதே சீறல்!

'சீ! கீழே போடு கத்தியை! என்ன பாதகம் செய் கின்ருய்? கடமையாம், கடமை! இது என்ன பாரபட்சம்! ஒருத்தியைக் கொலை செய்ய ஒருவனைப் பிழைப்பிப்பது தான் கடமையோ! அவனுக்கும் உனக்கும் செயல் அள வில் என்ன வித்தியாசம்! பெண்மையென்ருல் அவ்வளவு இழிவா? வேண்டாம், அவன் இறக்கட்டும். அவளேனும் பிறகு நிம்மதியாக இருப்பாள். உத்தியோக மென்றும் கடமையென்றும் தோன்றினுல் ஒன்று செய். இந்த

நிமிஷமே வேலையை ராஜீனுமாச் செய். பெண் பாவம் வேண்டாம். சுந்தரிக்காக இல்லாவிட்டாலும் பொது வான பூத தயைக்காகவேனும் அவனைக் காப்பாற்று. அவனைக் கொல்.' அநுதாபம் இவ்வாறு அலறவே அவன் கை பேனுவைத் தேடியது, ராஜீனுமாக் கடிதம் எழுத.

கடமை சிரித்துக்கொண்டே 'ஆமாம்! பூத தயை யென்ருல் அது அவனுக்குமட்டும் கிடையாதா! படுகா யப் பட்டுக் கிடக்கும் ஒருவனைப் பிழைப்பிப்பது பூத தயை யல்லவோ?' என்று நிதானமாகக் கேள்வி கேட்டது.

'உண்மை. ஆனல் அநுதாபத்திற்கு யார் அதிகத் தகுதியுடையவர்? வாழ்க்கை முழுவதும் ஒருவன் கையிற் சிக்கிச் சாகின்றவளா? அல்லது வாழ்வு முழுவதும் கையிற் சிக்கிய ஒருத்தியைச் சாக அடிக்கின்றவனு?' என்று அநுதாபம் கடமையின் கேள்வியை மடக்கியது. வைத்தியநாதன் இப்பொழுது கால் காகிதம் தேடினன், அநுதாபத்தின் சொற்படி வேலையை விட.

மனச்சாட்சி கடைசியாக ஒரு முட்டுக் கட்டை போட்டது. இந்த முட்டுக்கட்டையை அவன் மீற முடி யாது என்பது அதற்கு வெகு நன்ருகத் தெரியும்.

'இவனை ஆபரேஷன் செய்யாமல் கொன்று விட்டால் சுந்தரிக்குப் பேருபகாரம் செய்துவிட்டதாக நினைக்கின் ருயே! உனக்கு ஏதேனும் அறிவு இருக்கிறதா? பெண்மை, பெண்மை யென்று பெருமை பேசும் நீ பெண் மையை ஒரு சிறிதேனும் அறிந்திருக்கிருயா? உணர்ச்சி யால் உந்தப்பட்டுத் தலைகால் தெரியாமல் குதிக்கும் நீ சுந்தரியை ஒரு வார்த்தை கேட்டாயா? கேட்காமலே கூடத் தெரிந்துகொள்ள மூளை இல்லையா, என்ன? கணவன் அடித்தாலும் உதைத்தாலும் அவன் எப்படியேனும் உயி ருடன் இருந்தால் போதும் என்றுதானே, இந்த வேளையில் வேறு துணையில்லாமல் காயம்பட்ட கணவனை ஆஸ்பத்திரிக் குக் கொண்டு வந்திருக்கிருள்! இது தெரியவில்லையா? கண் இருந்தும் குருடனுயிருக்கிருயே! வறட்டு உணர்ச் சிக்குக் கண்ணேது, மண்ணேது? அதை நம்புவது ஒரு

குருடன் மற்ருெரு குருடனை வழித்துணையாகக் கொள்வது போல் அல்லவா இருக்கிறது!'

என்ன ஆணித்தரமான அநுபவம் நிறைந்த வார்த்தை. வைத்தியநாதன் மனத்தைத் திடப் படுத்திக்கொண்டான். இனியும் வெற்றுணர்ச்சியின் வார்த்தைக்குச் செவிசாய்ப்ப தில்லையென்ற முடிவுடன் பேனுவைப் பையில் போட்டு விட்டுக் கத்தியை அழுத்திப் பிடித்துக்கொண்டு குடியனின் வலது நெற்றிப்பக்கம் குனிந்தான்.

ஆனுல்? காலன் வைத்தியநாதனுக்கு முன்னமேயே ஒரு முடிவுக்கு வந்துவிட்டான். ஆம்! சுந்தரியின் கணவனுடைய — அந்தக் குடிக்காரனுடைய — ஆயுள் முடிந்து ஐந்து நிமிஷங்கள் முடிந்து விட்டன.

வைத்தியநாதனின் முகம் 'குப்'பென வியர்த்து வெளுத்தது. தலையைக் கைகளால் அழுத்திக்கொண்டே அவன் வேறு அறைக்குச் சென்ருன். 'அட பாவி' என்ற கடமையின் தோல்விக் குரலும் "என்ன ஸார்! இப்படி 'டிலே' பண்ணிவிட்டீர்கள்" என்ற உதவி டாக்டரின் ஆத்திரம் கலந்த குரலும் இரு பக்கங்களிலும் அவனை ஈட்டியால் குத்துவதுபோல் இருந்தன. அநுதாபத்தின் எக்களிப்பை அவன் உணரவேயில்லை.

மூடியிருந்த கதவு 'படார்' என்று காற்றில் திறந்து கொண்டு உள்ளேயிருந்த கணவனின் பிரேதத்தைச் சுந்தரிக்குக் காட்டியது.



3600.

# சிங்காரி

## முதலிய கதைகள்

மஞ்சேரி எஸ். ஈச்வரன் எழுதியது

தி. ஜ. ர. அவர்களின் முன்னுரையுடன்

●

சிங்காரி, நியாயம், மைதிலி, கடைசி அடகு, ரிக்ஷாவாலா, சகுந்தலை துயரம், வண்டிச் சத்தம், சிவதாண்டவம், ஜவானின் கந்தர்வ கணங்கள், மூன்று பொம்மைகள், பிளந்த சுவர், சுபேதார் சாமி ஆகிய பன்னிரண்டு கதைகள் இதில் அடங்கி இருக்கின்றன.

160 பக்கம். ஆண்டிக் காகிதம். அழகிய கட்டுக் கோப்புடன் கூடிய இந்த அரிய பொக்கிஷத்தின் விலை ரூ. மூன்று (தபால் செலவு தனி)

●

சக்தி வெளியீடு